# ஈழமும் இந்துமதமும்

## பொலநறுவை அரசுக்குப் பிற்பட்ட - போத்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலம் (கி. பி. 1250 - 1505)

சி. க. சிற்றம்பலம்

கி. பி. 13ஆம் நூற்றாண்டு தென் ஆசிய, தென் கிழக்காசிய நாடுகளின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகிறது. அப்போது தென் கிழக்காசியாவும் இந்தியாவில் வட இந்தியா, தக்கணம் ஆகிய பகுதிகளும் இஸ்லாமியர் வசம் வந்தன. இதனால் இக்காலகட்டத்தில் இந்தியாவில் தென்னகத்திற்றான் இந்துமதமும் கலாசாரமும் பேணிப் பாதுகாக்கப்பட்டது. ஈழமும் தென்னாசியப் பிராந்தியத்தின் ஓரங்கமாக விளங்குவதால் இந்திய கலாச்சாரத்தின் தாக்கம் காலகாலமாக ஏற்பட்டாலும்கூட, வட இந்தியாவில் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் பௌத்தப் சீரழிய, அதன் பின்னர் அராபிய படைஎடுப்புக்கள் ஏற்பட கி. பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஈழ – வட இந்தியத் தொடர்புகளில் ஸ்தம்பிதநிலை காணப்பட்டது. இதனால் இக்காலத்திற்குப் பின்னர் போத்துக்கேயர் வருகைக்கு முன்னர் ஈழ – இந்திய உறவுகள் இந்தியாவின் தென் பிராந்திய வட்டத்தினை மையமாக வைத்தே தொடர்ந்தன. மெண்டிஸ் போன்றோர் இதனால் இக்காலப் பகுதியை ஈழ வரலாற்றில் தென்னிந்திய காலப்பகுதி எனக் கூறி இதனை இரு பிரிவுகளாகவும் பிரித்துள்ளனர். (Mendis, G. C. 1954) இவை முறையே பொலநறுவை அரசுக்காலமும் அதற்குப் பிற்பட்ட போத்துக்கேயர் வருகைக்கு முற்பட்ட காலமுமாகும். முன் எப்போதுமில்லாத அளவுக்கு இந்துமதத்தின் தாக்கம் பொலநறுவைக் காலத்தில் ஏற்பட வழி வகுத்ததுதான் இக்காலத்தில் ஈழத்தில் ஏற்பட்ட சோழரது ஆட்சியாகும். இப்பின்னணியில் வளர்ச்சிபெற்ற இந்து கலாச்சாரம், பின்வந்த பாண்டிய, விஜய நகர அரசுகளின் தாக்கத்தினால், மேலும் உரம்பெற்று வளர்ச்சியடைந்தது.

பொலநறுவை அரசின் வீழ்ச்சிகூட ஈழ வரலாற்றில் ஒரு திருப்புமுனையே. இதன் வீழ்ச்சியுடன் சிங்கள அரசுகளின் நாடு முழுவதையும் ஒரே தலைநகரை மையமாக வைத்து ஆளும் மரபுக்குச் சாவுமணி அடிக்கப்பட்டதோடு, பின்வந்த சிங்கள அரசுகள் அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியில் முன்பு பெற்றிருந்த வலுவையும் இழந்தன. வெளிநாட்டுப் படைஎடுப்புகளும், பொலநறுவை அரசின் பொருளாதாரச் சீர்கேடும் சிங்கள அரசை அடிக்கடி பின்வரும் வரிசையில் தலைநகர்களை மாற்றி அரசாளவைத்தன. அவையாவன: தம்பதேனியா (கி. பி. 1232 — 1271), யாப்பஹூவ (கி. பி. 1272 — 1284), குருநாகல் (கி. பி. 1293 — 1341), கம்பளை (கி. பி. 1341 — 1408), கோட்டை (கி. பி. 1411 — 1581), கண்டி (கி. பி. 1474 — 1815). வடக்கே 13ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து 1620வரை நல்லூரைத் தலைநகராகக்கொண்டு யாழ்ப்பாண அரசு காணப்பட்டது. 1506இல் போத்துக்கேயர் இங்கு வந்தபோது யாழ்ப்பாணம், கோட்டை, கண்டி அரசுகளாக ஈழம் பிரிந்திருந்ததும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

தென்னிந்திய அரசுகள் போத்துக்கேயர் வருகைக்கு முன்னர் மேற்கொண்ட படையெடுப்புக்கள் இவ்வாறு தலைநகர் மாற்றத்திற்கு ஒரு பிரதான காரணமாக அமைந்தது. இதனைவிட இக்காலத்தில் தென்னகத்திலிருந்து இங்கு ஏற்பட்ட மக்கட் புலம் பெயர்வும், அவர்களது நிரந்தர வாசமும் தென்னகச் செல்வாக்கைக் கையோங்க வைத்தது. நாளடைவில் அவர்கள் சிங்கள மொழி பேசும் மக்களாக மாற்றம்பெற்றாலும்கூட அவர்களது இந்துசமய நம்பிக்கைகளின் தாக்கம் சிங்கள கலாச்சாரத்தில் மறையவில்லை. இம்மக்கட் கூட்டத்தினரைச் சிங்கள இலக்கியங்கள் தெமள, மலல, கன்னட, துளுவ என அழைக்கின்றன. இவற்றில் விசேடமாக இரு சிங்கள நூல்களாகிய முக்கறுகத்தான, மலலகத்தாவ ஆகியவை தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு சிங்கள மன்னரால் வரவழைக்கப்பட்ட முக்குவர் பரதவர் மலையாளிகள்பற்றிக் குறிப்பிடுகின்றன. (Pathmanathan, S. 1982) இக்காலத்திற் சிங்கள மக்களின் சாதிப் பிரிவுகளில் கணிசமான பங்கினை வகிக்கும் கராவ, துளுவ, சலாகம போன்ற சாதியினர் தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

பொலநறுவை அரசின் வீழ்ச்சிக்குப்பின் மாகன் ஈழத்தின் வடபகுதியில் யாழ்ப்பாணத்தில் கி. பி. 13ஆம் நூற்றுண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண அரசை ஸ்தாபித்தான். சாவக மன்னன் சந்திரபானு இதனை மாகனிடமிருந்து கைப்பற்றித் தான் ஆட்சி செய்தான். பின்வந்த பாண்டிய படையெடுப்புகள் சிங்கள அரசைப் பாண்டியருக்குத் திறைகொடுக்க வைக்க வழிவகுத்த அதே நேரத்தில் ஈழத்தின் வடபகுதியையும் பாண்டிய அரசின் ஆணையை ஏற்கவைத்தன. எனினும் கி. பி. 13ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பாண்டியப் பேரரசு நிலைகுலைய, ஈழத்தின் வடபகுதி ஆரியச் சக்கரவர்த்திகள் வசம்வர சிங்கள அரசும் பாண்டியர் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. (Pathmanathan, S. 1978). 14ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து விஜய நகர அரசின் ஆதிக்கம் ஈழத்திற் காணப்பட்டது. இவ்வம்ச மன்னர்களில் இரண்டாவது கரிகரன் (கி. பி. 1383 – 1384), முதலாவது தேவராஜன் (கி. பி. 1422 — 1446) ஆகியோர் காலத்தில் ஏற்பட்ட படையெடுப்புகள் முக்கியமானவையாகும். எனினும் யாழ்ப்பாண அரசுதான் விஜய நகர அரசின் பிரதிநிதிகளாக மதுரை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் ஆட்சிசெலுத்திய நாயக்கர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது.

அரசியல் ரீதியில் மட்டுமன்றிப் பொருளாதார ரீதியிலும் ஈழம் தென்னிந்திய வட்டத்திற்குள்ளேதான் நெருங்கிப் பிணைந்திருந்தது. ஈழத்துடன் தஞ்சை, மதுரை, கொறமண்டல் கரை ஆகிய பகுதிகள் நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் வைத்திருந்தன. இப்பகுதிகளுக்கு ஈழத்திலிருந்து யானைகள், பாக்கு, முத்துக்கள், சங்குகள் ஆகியன அனுப்பப்பட்டன. இங்கிருந்து நமது நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்கள், எருதுகள், துணிவகைகள் இறக்குமதி செய்யப்பட்டன. ஈழத்தின் ஏற்றுமதிப் பொருளான பாக்குமட்டும் மேற்கூறிய பொருட்களின் இறக்குமதிச் செலவைத் தாங்குமளவுக்கு மதிப்புள்ளதாக விளங்கியது. இவ்வர்த்தகம் முஸ்லீம்களது கையிலிருந்தாலும் இந்துக்களான செட்டிகளின் ஈடுபாடும் இதில் கணிசமாகக் காணப்பட்டது. (Arasaratnam, S. 1958 : 48) இத்

தகைய வர்த்தக வளர்ச்சி முன் எப்போதுமில்லாத அளவுக்குச் சிங்கள அரசின் பொருளாதாரத்தில் வர்த்தகம் ஒரு முக்கிய பங்கினை வகிக்க வழி வகுத்தது. இவ்வர்த்தக வளர்ச்சியால் துறைமுகப் பட்டினங்களாக காலி, தேவிநுவர, கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற நகரங்கள் எழுச்சி பெற்றன. இத்துறைமுகப் பட்டினங்களில் பல்தேசிகள் வந்து தங்கினாலும் இவர்களிற் பெரும்பாலோர் இந்துக்களாகவே காணப்பட்டனர். பட்டினங்களில் மட்டுமன்றி உள்ளூரிலும் இவர்கள் செல்வாக்கு மேலோங்கியது. கிரா சந்தேஸம், சோழ, பாண்டிய, குர்ஜர, வங்காள நாட்டைச் சேர்ந்த வியாபாரிகள் நாட்டின் பல பகுதிகளிலும் நடமாடியதைக் குறிக்க திஸர சந்தேஸம் தேவிநுவரத் துறைமுகப் பட்டினத்தில் வெளிநாட்டவர் பெருந்தொகையில் வாழ்ந்ததைக் குறிக்கிறது. (Pathmanathan, S. 1986)

பாக்குநீரிணையில் முத்துக்குளிப்பு வர்த்தகம் வடக்கே இருந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தில் காணப்பட்டது. ஆரியச் சக்கரவர்த்திகளும் வன்னிச் சிற்றரசுகளும் வடக்கே ஆட்சிசெய்ய கிழக்கே வன்னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற வடகிழக்குப் பகுதிகள் தனித்தமிழ் கலாச்சாரப் பிராந்தியங்களாக மாறின. இக்காலத்தில் சிங்கள அரசு தென்மேற்கு நோக்கிப் புலம்பெயர தமிழ் – சிங்கள அரசுகளைப் பிரித்துவைக்கும் பகுதியாக வடமத்திய மாகாணம் காடடர்ந்த பகுதியாகியது. எனினும் கி. பி. 14ஆம் நூற்றாண்டில் ஈழத்திலுள்ள அரசுகளில் வலிமைபெற்றதாக யாழ்ப்பாண அரசு எழுச்சியடைந்ததன் விளைவாகச் சிங்கள அரசின்மீதும் இவர்கள் ஆதிக்கம் பரந்தது. இதனைக் கோட்டகம, மடவாக்கக் கல்வெட்டுகள் மட்டுமன்றி இராஜாவலியா, நிக்காய சங்கிராவ போன்ற இலக்கியங்களும் உறுதி செய்கின்றன. தென்மேற்கிலுள்ள துறைமுகங்கள் சிலகாலம் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆணையின்கீழிருந்தன. பின்னர் ஆரியச் சக்கரவர்த்திகள் இப்பகுதிகளிலிருந்து விரட்டப்பட்டாலும் 15ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் (1450 — 67) 17 ஆண்டுகள் ஆரியச் சக்கரவர்த்திகளின் வட பகுதி கோட்டை மன்னனாகிய 6வது பராக்கிரமபாகுவின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இதனால் சிங்கள தமிழ் பிராந்தியங்களாக அரசுகள் எழுச்சி பெற்றாலும்கூட அவற்றிற்கிடையே இருந்த தொடர்புகளை மேற்கூறிய உதாரணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அரசியல் தொடர்புகள் கலாச்சாரப் பரிமாற்றத்திற்கும் வழி வகுத்தன எனலாம்.

இஃதுமட்டுமன்றிச் சிங்கள கலாச்சாரத்திலும் பல்வகைப் பிற அம்சங்களின் கலப்புக் காணப்பட்ட காலமும் இக்காலமாகும். இக்காலத்தில் சிங்கள அறிஞர் உலகம் பன்மொழிப் பாண்டித்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் முன்னர் பாளி மொழி பெற்றிருந்த முதன்மை இப்போது தளர்ந்தது. இரண்டாவது பராக்கிரமபாகுவைச் சூளவம்சம் 'கலிகால சாஉறிச்ச சப்பானு பண்டித' அதாவது 'கலியுலக இலக்கியங்கள் எல்லாவற்றிலும் பாண்டித்தியம் பெற்றவன்' என அழைக்கிறது. நான்காவது பராக்கிரமபாகு (கி. பி. 1302 — 26) அவையிற் சரசோதி மாலையை அரங்கேற்றுமளவுக்கு இச்சபையிலுள்ளோர் தமிழிற் பாண்டித்தியம் பெற்றிருந்தனர். ஆறுவது பராக்கிரமபாகுவின் (கி. பி. 1411 — 66) அவையும் இத்தகையதே. பௌத்த பாடசாலைகளாகிய 'பிரிவேனாக்களில்' வேதசாஸ்திரங்க

ளுடன் தமிழும் கற்பிக்கப்பட்டது. பௌத்த குருமார்களுக்குக்கூட அறிஞர்கள் என்ற கௌரவத்தைப் பெறப் பன்மொழிப் பயிற்சி அவசியமாயிற்று. கோகில சந்தேசத்தை இயற்றிய ராகுலதேவர் 'சட்பாஷா பரமேஸ்வரர்' என அழைக்கப்பட்டார். இது ஆறு பாஷைகளான எலு (ஆதிச்சிங்களம்) சிங்களம், பாளி, தமிழ், சமஸ்கிருதம், பாகதம் ஆகியவற்றில் இவருக்குள்ள நல்ல புலமையையே எடுத்துக்காட்டுகின்றது. இதனால் சிங்கள இலக்கிய வரலாற்றிலும்கூட இக்காலம் ஒரு திருப்புமுனையாகவே அமைகிறது. பொலநறுவைக் காலம்வரை பாளி இலக்கியங்களும் அவற்றை இயற்றிய குருமாருமே முக்கியம் பெற்றனர். இக்காலந்தொட்டு சிங்கள மொழியில் இலக்கியங்கள் எழுச்சி பெற்றன. இவையின் எழுச்சிக்கு இவற்றை இயற்றியோரின் பல்மொழிப் புலமை பின்னணியாக இருந்தது. இவைதான் சந்தேச அல்லது தூதுப் பிரபந்தங்களாகும். பாளி இலக்கியங்களில் பௌத்தத்திற்குமட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்பட இவற்றில் அன்றுடம் நாட்டார் மத்தியில் வழக்கிலிருந்த இந்து வழிபாட்டு முறைகள் பலவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதைக் காணமுடிகிறது. இதனால் பௌத்த மதத்தின் வரலாற்றை மையமாக வைத்து எழுச்சி பெற்ற பாளி நூல்களில் அங்குமிங்குமாகக் காணப்படும் செய்திகளைப் போலன்றி இவ்விலக்கியங்களில் விரிவான முறையில் இந்துமதம்பற்றிய செய்திகள் காணப்படுவதும் முக்கியமான தகவலாக அமைகின்றது. இத்தகைய சிங்கள இலக்கியத்தின் தொடக்க காலமாகக் கம்பளை அரசுக் காலம் அமைந்தது. இக்காலத்திற்றான் மயூர சந்தேசம், திஸர சந்தேசம் போன்ற நூல்கள் எழுச்சி பெற்றன. எனினும் கோட்டை அரசுக்காலம்தான் இதன் உச்சக்கட்ட காலமாக அமைந்தது. இக்காலத்திற்றான் செலலிஹினி சந்தேசம் (பூவைவிடுதூது), பரெவி சந்தேசம் (புறாவிடு தூது), ஹம்ச சந்தேசம் (அன்னம்விடு தூது), கிரா சந்தேசம் (கிளிவிடு தூது), சஷல் சந்தேசம் (சேவல்விடுதூது) ஆகியன தோன்றின. தமிழிலக்கியங்களும் முற்காலத்தை விட இக்காலத்திற்றான் பல தகவல்களை விரிவாகத் தருகின்றன. இவற்றுள் யாழ்ப்பாணவைபவ மாலை, கைலாய மாலை, தட்சணகைலாய புராணம் ஆகியவை குறிப்பிடத் தக்கவையாகும். இவற்றோடு இக்காலத்தில் கிடைக்கும் கல்வெட்டுக்கள் பொலநறுவைக் காலத்தோடு ஒப்பிடுகையில் எண்ணிக்கையிற் குறைவாகக் காணப்பட்டாலும் விரிவான தகவல்களைத் தருகின்றன. இவை கூறும் இந்துக் கோயில்கள் போத்துக்கேயரால் அழிக்கப்பட இவற்றின் எச்சங்கள் மறைந்தாலும்கூட இவை தரும் தகவல்கள் அக்காலத்தில் இந்துக் கோயில்களும் சமய நிறுவனங்களும் பெற்றிருந்த முதன்மையை விளக்குகின்றன எனலாம்.

சிங்கள அரசும் 'பௌத்த மக்களின் அரசு என்ற மரபு இக்காலத்தில் காணப்பட்டாலும் அரச தத்துவம், அரச நெறிமுறைகள், இந்துமத மரபுகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றினடிப்படையிலேதான் அமைந்திருந்தன. (Pathmanathan, S. 1986) மன்னரது பட்டாபிஷேகம் தொட்டுப் பல்வகை இராச கிரிகைகளில் இந்துமத குருமாரின் செல்வாக்குக் காணப்பட்டது. மன்னன் மனுவழி வந்தவன் என்ற மரபு இக்காலத்தில் காணப்பட்டதோடு, 'மன்னனானவன் இந்துமத நீதிநூல்களாகிய மனுதர்ம சாஸ்திரங்கள் போன்றனவன்றில் தேர்ச்சி பெற்றவன் என்ற கருத்தும் மேலோங்கிக் காணப்பட்டுள்ளது. (C. V. 83 : 67 ; 84 : 1). இக்கருத்தையே செலலிஹினி

சந்தேசம் 22ஆம் பாடல் ஆறுவது பராக்கிரமபாகுவைப்பற்றிக் குறிப்பிடுகையில் அவனை 'மானவகுல மருது வழிவந்த செம்மல்' என அழைக்கிறது. இதே மன்னனை ஒறுவலச் சாசனம் "தெய்வீக ஒளிபொருந்திய மஹாசம்மதவுடைய வழித்தோன்றல்" எனவும் வர்ணிக்கிறது. இந்து மரபின் மனுதான் பௌத்த மரபில் மகாசம்மதவாகும். மன்னர்கள் சூடிய பட்டங்களும் இந்துமதக் கோட்பாடுகள் இவர்கள்மீது பெற்றிருந்த செல்வாக்கினை எடுத்தியம்புகின்றன. உதாரணமாக ஆறுவது பராக்கிரமபாகு "ராஜாதிராஜ", "திரிபுவனச் சக்கரவர்த்தி", "மஹாராதிராஜ" போன்ற பட்டங்களைப் பெற்றிருந்தான். இக்காலக் கல்வெட்டுக்களின் வசனநடையிற்கூட இந்துமதச் செல்வாக்கு உளது. ஒறுவலச் சாசனம் ஆறுவது பராக்கிரமபாகுவைப் பின்வருமாறு வர்ணிக்கின்றது. (E. Z. III : 66 – 69)

> ஸ்ரீ சங்க போதியான ஸ்ரீ பராக்கிரமபாகுவானவன் யாரெனில் தெய்வீக ஒளிபொருந்திய மகா சம்மதவுடைய வழித்தோன்றலும், சூரிய வம்சத்தவனும், அழகிய இலங்கையின் அதிபதியும், மூன்று சிங்கள ராச்சியங்களது அரசனும், ஒன்பது செல்வங்களது அதிபதியும், கிரீடம் உள்ளிட்ட அறுபத்துநான்கு ஆபரணங்களால் தன்னை அலங்கரித்தவனும், ராஜலட்சுமி வாசனும், சிறப்புவாய்ந்த ஸ்ரீ ஜெயவர்த்தன நகரிலுள்ள மிக மங்களகரமான அரண்மனையிலுள்ள அழகிய மண்டபத்தில் இந்திரனைப்போல் அரியணையில் அமர்ந்திருப்பவனுமாவான்.

இக்காலக் கல்வெட்டுக்களில் இடம்பெறும் தான சுலோகங்களில் "கொடுப்பதிலும் கொடுத்ததைப் பாதுகாத்தலிலும் (ஆகிய இரண்டிலும்) கொடுத்தலிற் கொடுத்ததைப் பாதுகாத்தலே சிறந்தது என்றும் கொடுத்தலினால் ஒருவன் விண்ணுலகை அடைகிறான் என்றும் பாதுகாத்தலினால் ஒருவன் நிர்வாணத்தைப் பெறுகிறான் என்றும் இவற்றில் இடம்பெறும் வசனங்கள் இந்துமதக் கோட்பாடுகளின் செல்வாக்கினை எடுத்தியம்புகின்றன. (Pathmanathan, S. 1986)

சிங்கள மன்னர்கள் பௌத்த மன்னர்களாக இருந்து பௌத்த மதத்திற்கு ஆதரவளிக்கத் தவறவில்லை. எனினும் ஒரு சிலர் பௌத்தர்களைத் துன்புறுத்தவும் தயங்கவில்லை. உதாரணமாக அழகக்கோனாரின் வழித்தோன்றலான வீரஅழகேஸ்வன் (ஆறுவது விஜயபாகு) (கி. பி. 1397 –1410) இந்து மதத்தின்மீது கொண்டிருந்த ஈடுபாட்டினால் பௌத்தர்களைத் துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது. பொலநறுவைக் காலத்தைப் போன்று அரண்மனையில் இந்துமதச் செல்வாக்குப் பரவுவதற்குப் பிரதான காரணியாகவிருந்த இந்திய மணத்தொடர்புகள் இக்காலத்தில் அருகிக் காணப்பெற்றாலும்கூடத் தென்னிந்திய வம்சங்கள் சில அரச அதிகாரம் பெற்றிருந்தன. அத்துடன் தென்னிந்தியாவோடு பௌத்த மதமும் குருமாரும் கொண்டிருந்த தொடர்புகளும் ஈழத்தில் இந்துமதச் செல்வாக்கு ஏற்பட வழிவகுத்தன. இக்காலத்தில் செல்வாக்குப் பெற்ற குடும்பங்களில் கம்பளைஅரசு காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய சேனலங்காதிகார குடும்பமும், கோட்டை அரசின் ஸ்தாபகனான அழகக்கோனாரின் குடும்பமும் முக்கியமானவையாகும். மேனவர் வம்சத்தவர்களாகிய இவர்கள் கேரள

மாநிலத்திலுள்ள வஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்தவர்களாகும். வணிகர்களாகவே இவர்கள் வந்து பின்னர் அரசியல் அதிகாரம் பெற்று அரச குடும்பத்தினருடன் நெருங்கிய மணத் தொடர்புகளையும் வைத்திருந்தனர். கம்பளை ராச்சிய காலத்தில் தென்னிந்தியாவோடு, நெருங்கிய தொடர்பு வைத்திருந்த பௌத்த மதகுருவாகிய தர்ம கீர்த்தி சங்கராஜ தேரர் அங்கிருந்து சிற்பிகளை அழைத்து வந்து இங்கு பௌத்த கட்டிடங்களைக் கட்டியதற்கும் சான்றுண்டு. ஆறுவது பராக்கிரமபாகுவின் மகளாகிய உலகுடையதேவி அமைச்சனாக இருந்த நல்லூர்த் துணைவனை மணந்தாள். இவன்தான் சிங்கள நிகண்டாகிய நாமாவலியைத் தொகுத்தவனாவன். இவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்து அரச பரம்பரையை விளங்கச் செய்தல் வேண்டுமென்ற பிரார்த்தனையின் நூல் வடிவமே இராகுல தேரர் அருளிய செலலிஹினி சந்தேஸமாகும். ஆறுவது பராக்கிரமபாகுவின் சுவீகர புத்திரனான செண்பகப்பெருமாள் என்ற மலையாளி 17 ஆண்டுகள் இம்மன்னனின் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தை ஆண்ட பின்னர் ஆறுவது புவனேகபாகு (கி. பி. 1469 – 77) என்ற பெயருடன் கோட்டை அரசின் அதிபதியானான்.

பௌத்த மதமும், பௌத்த குருமாரும் சிங்கள மன்னர்மீது செல்வாக்குப் பெற்றிருந்தாலும்கூட அரசசபையில் பிராமணரது செல்வாக்கே மேம்பட்டிருந்தது. காரணம் அரசசபைக் கிரிகைகள் யாவும் இவர்களாலேதான் நிறைவேற்றப்படவேண்டியிருந்தது. தென்னகத்தில் ஏற்பட்ட முஸ்லீம் படைஎடுப்புக்களினால் பல்வகைப் பிராமண குலங்கள் அங்கிருந்து ஈழம் வந்து அரசர்களால் கௌரவிக்கப்பட்டன. அரசர்களது நம்பிக்கைக்குரிய ஆலோசகர்களாக இவர்கள் விளங்கி அவர்களுடன் மிக அன்யோன்யமாகவும் பழகினர். சமயம்பற்றி இவர்கள் பெற்றிருந்த அறிவுமட்டுமன்றிச் சோதிடம், வானசாஸ்திரம், நீதிசாஸ்திரம் போன்ற துறைகளில் இவர்கள் பெற்றிருந்த தேர்ச்சியும் இவர்களை அரசர்களின் அரவணைப்புக்குள்ளாக்கியது. இரண்டாவது பராக்கிரமபாகு பொலநறுவையில் வாழ்ந்தபோது அவனின் அன்றுடக் காலை நடைமுறைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை 'கந்தவுறு சிறித' என்ற நூல் பின்வருமாறு கூறுகிறது; (Paranavitane, S. 1960 : 767)

> ''உதய வேளையில் புரோகிதரான பிராமணர் புனித தர்ப்பைப் புல்லையும் மந்திர சக்தியூட்டப்பட்ட நீரைக் கொண்ட சங்கையும் மன்னனுக்கு அளித்தலும், அப்போது மன்னன் அதனைத் தொடப் பிராமணர் மங்களகரமான மந்திரத்தை உச்சாடனம் செய்வதும் பின்னர் மன்னன் இரவிற் கண்ட கனவினைப்பற்றிப் புரோகிதர் விசாரிப்பதும் அவை அமங்கலமாயின் அவற்றின் தீய விளைவுகளிலிருந்து மன்னனைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான சடங்குகளைத் தகவுரை செய்வதும் வழக்காயிருந்தது''.

இம்மன்னன் சமஸ்கிருதம், மருத்துவம் ஆகிய துறைகளிற் கைதேர்ந்த பிராமணர்களைப் போஷித்ததும் குறிப்பிடத்தக்கது. (Paranavitane, S. 1960: 767) இம்மன்னனின் தேவுந்திரச் சாசனத்தில் தேவிநுவரவில் காணப்பட்ட பிராமணரின் 'அக்கிரகாரம்' குறிக்கப்பட்டுள்ளது. (Paranavitane, S.

1960 : 766) இத்தகைய அக்கிரகாரம் மிகமிகச் செல்வாக்குள்ளதொன்றாக இக்காலத்திற் காணப்பட்டது. வேத சாஸ்திரத்திலும் இந்து மதக் கல்வியிலும் கைதேர்ந்த பிராமணர் இங்கு வாழ்ந்தனர். துறைமுகப் பட்டினமாகிய இதிலுள்ள உப்புல்வன் (மாயோன்) ஆலயச் சூழலில் வாழ்ந்த இவர்கள் துறைமுக நிர்வாகத்திலும் முக்கிய பங்கினைப் பெற்றிருந்தனர். பிராமணனாகிய "மகாபண்டித" நிருவாகம்பற்றிய முக்கிய முடிபுகளை எடுக்கும் தகுதி பெற்றிருந்த செய்தி ஒன்றே இவர்களின் செல்வாக்குக்குச் சிறந்த உரைகல்லாக அமைகின்றது. (Paranavitane, S. 1953:63 – 70) இச் சாசனத்தில் பிராமணருக்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலத்தில் அவர்களுக்குரிய உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் இதற்கு வரியாக உப்புல்வன் ஆலயத்திற்கு பத்துப் பணம் கொடுத்தல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வக்கிரகாரத்தைச் சேர்ந்த "தேனுவரப் பெருமாள்" என்ற பட்டப் பெயரைப் பெற்றிருந்த போசராசன் என்ற பிராமணரே ஈழத்திற் கிடைக்கும் முதற் தமிழ்ச் சோதிட நூலாகிய "சரசோதி மாலையை" நான்காவது பராக்கிரமபாகுவின் அரச அவையில் அரங்கேற்றிய அறிஞனாகும். 14 ஆம் நூற்றாண்டில் இவ்விடத்தில் ஆயிரமளவில் பிராமணரும் யோகிகளும் வாழ்ந்ததாக இபின் பற்றுற்றா கூறுவது (Paranavitane, S. 1960 : 766) இவ்வக்கிரகாரத்தின் சிறப்பினை மேலும், எடுத்துக்காட்டுகிறது. இங்குள்ளவர்கள் தேனுவரப் பெருமாள் என்ற விருதுப் பெயர் சூடியிருந்தமை உப்புல்வனாகிய திருமால்மீது இவர்களுக்கு இருந்த ஈடுபாட்டினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

நிக்காய சங்கிராக என்ற நூல் கம்பளை ராசதானி காலத்தில் வீரபாகு மன்னன் ஆட்சியில் பிராமணர் பெற்றிருந்த செல்வாக்கினைப் பின்வருமாறு விரித்துக் கூறுகிறது. (Fernando, C. M. 1908 : 28 – 29)

> சில பிராமணருக்கு இவன் கிராமங்கள், நிலங்கள், வயல்கள் ஆகியனவற்றோடு செல்வத்தையும் கொடுத்தான். வேறு சிலருக்கு ஆடைகள், அணிகலன்கள், தானியங்கள் ஆகியனவற்றைக் கொடுத்தான். இன்னும் சில பிராமணருக்கும் பாணருக்கும் அடிமைகள், எருதுகள், எருமைகள், குதிரைகள், யானைகள், பசுக்கள், இரத்தினங்கள், இளம் பெண்கள் ஆகியனவற்றைக் கொடுத்தான். பிற தபசிகளுக்கு உணவு, பானம், உடைகள் வழங்கி அவர்களை மகிழ்வித்தான். இதனால் இவன் நாளாந்தம் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தவனாகத் தர்ம சிந்தனைகள் மேலோங்கிக் காணப்பட்டான். தானசாலைகளை அமைத்துப் பாண்டுரங்கர், பசாண்டர் ஏனைய துறவிகள் போன்ற பல்வேறு சமயங்களைச் சேர்ந்தோருக்கும் தானம் வழங்கினான். மிகுந்த அளவில் பணம், தானியம், ஆடைகள் அணிகலன்கள், படுக்கைகள், வாகனங்கள் ஆகியனவற்றையும் பிராமணருக்கும் பாணருக்கும் வழங்கினான். அவர்களது நன்றியுணர்வினது மேலீட்டினால் அவன் தானும் மகிழ்ந்து அவர்களையும் மகிழ்வித்தான்.

எனினும் கோட்டை அரசு காலத்திற்றான் பிராமணரது செல்வாக்கு உச்சநிலை அடைந்திருந்தது. ஜெய வீரபராக்கிரமபாகுவால் (கி. பி. 1466 - 69) வெளியிடப்பட்ட ஒறுவலச சாசனம் ஆறாவது பராக்கிரமபாகுவுக்குப் புரோ

கிதர்களாக இருந்த தெலுங்கர்களான பொதா ஒஜ்ஜலுனும் அவரது பெருமகனாகிய அவுகல ஒஜ்ஜலுனும் தங்கள் சேவைக்காக ஒறுவலுக் கிராமத்தைத் தானமாகப் பெற்றதுபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகிறது. (E. Z. III : 66 –69)

> "சாண்டில்ய குலத்து இரண்டு பிராமணர்களாகிய பொதாஒஜ்ஜலுனும் அவனது பெருமகனாகிய அவுகல ஒஜ்ஜலுனும் ஒருவர்பின் ஒருவராக ராஜ புரோகிதர்களாக இம்மன்னனது (ஆறுவது பராக்கிரமபாகுவினது) 55 வருட ஆட்சிக் காலத்தில் விளங்கினார்கள். இவர்களது சேவைக்காக ஒறுவலக் கிராமம் வழங்கப்பட்டது. இது பணகம (பிராமணர் வாழும் கிராமம்) எனவும் அழைக்கப்பட்டது. இவர்களில் அவுகல ஒஜ்ஜலுனு தொடர்ந்து வாழ்ந்துவந்து அரசன் இறந்தபோது அவனது உரிமைக்குரிய ராஜகுமாரன் செய்யவேண்டிய இறுதிக் கிரிகைகளை நிறைவேற்றி வைத்தான். இதற்காக இவனை மன்னன் நன்கு பாராட்டி இப்பிராமணர்கள் வைத்திருந்த நிலத்தை இவர்களுக்கென்று நிரந்தரமாக அளிக்கப்பட்ட கொடை நிலமாக்கித் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்து இத்தானத்தைப் புதுப்பித்தான். இப்புரோகிதர்கள் பல ஆண்டுகளாக வைத்திருந்த பணகமத்தின் உரிமையைச் செப்பேட்டில் பொறித்துத் தரும்படி வேண்டியதன் நிமித்தம் அரசன் இப்பணகமத்தை அவுகல ஒஜ்ஜலுனுக்கு அளித்தான்........"

மேலும் இச்செப்பேட்டில் இக்கிராமம் அத்துகிரிக் கோறளையில் இருந்த செய்தியும் இக்கிராமத்தின் நாற்புற எல்லைகளும் கூறப்பட்டு இக்கிராமத்திலிருந்து பெறப்படும் வருமானத்திற்கு வரியாகப் 15 பணங்களை தேவிநுவரப் பெருமாளாகிய (உப்புல்வணுக்கு) வழங்கப்படல் வேண்டுமெனவும் விதிக்கப்பட்டுள்ளது. இறுதியாக இதில் இத்தானத்திற்கு எவ்வகையிலாவது ஊறுவிளைவிப்போர் சஞ்சீவகால சூத்திர ஆகியனவற்றிலும் எஞ்சிய எட்டு நரகங்களிலும் மீட்சியின்றி அவிக்கப்படுவார்களென்றும் அதன் பின்னர் இடுகாட்டுப் பிசாசுகளாக முடிவற்ற பிறப்புக்களை எடுப்பார்கள் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. ஆறுவது பராக்கிரமபாகு முன்னிஸ்வரக் கோயிற் பூசகர்களாகிய நம்பிமார்களைத் தனது ஜெயவர்த்தனபுரக் கோட்டைக்கு அழைத்து அவர்களுக்கு அளித்த தானத்தை இம்மன்னரது தமிழும் சமஸ்கிருதமும் கலந்தெழுதப்பட்ட முன்னிஸ்வரக் கல்வெட்டு விரித்துரைக்கிறது. (Pathmanathan, S. 1974)

ஆறுவது பராக்கிரமபாகு காலத்தில் இவனது தந்தை பிராமணருக்கு அளித்த கொடைகளை அங்கீகரித்து வெளியிடப்பட்ட குடுமிரிசக் கல்வெட்டு பிராமணர்பற்றி ஈழத்திற் கிடைக்கும் மிகப் பெரிய கல்வெட்டாகும். முன்னரோ அல்லது பின்னரோ வேறெங்கேனும் காணப்படாத ஈழத்தில் வாழ்ந்த பிராமண குலங்களைப்பற்றிய விரித்துக் கூறும் சிங்களக் கல்வெட்டும் இஃதாகும். (Gunasekera, B. 1887 : 83 – 105) இக்கல்வெட்டில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த பலரகமான புனித நூல்களை (யஞ்ஞோபிதம்)த் தரித்த பல்வேறு நாமங்களால் அழைக்கப்பட்ட அந்தண குலத்தாருக்கு நிரந்தரமாக அளிக்கப்பட்ட நன்கொடை சூரிய சந்திரன் நிலைத்திருக்கும்வரை நீடித்திருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டு இத்

தானத்தின் பலனை அனுபவிப்பவர்களாகப் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த பிராமணர்கள், அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பிற் சந்ததியினர் ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் தானமாகச் சியனக் கோறளையிலுள்ள கொஸ்வின்னக்கிராமம், நிதியம், மரங்கள், செடிகள், வனங்கள், சதுப்பு நிலங்கள், வயல்கள், நிலங்கள் ஓவிதங்களென அழைக்கப்பட்ட (ஒரு வகை நிலங்கள்) ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இக்காலத்தில் ஈழத்திற் காணப்பட்ட பல்வேறு பிராமண குலங்கள்பற்றி இது விரித்துரைப்பதால் அவற்றை அப்படியே குறிப்பிடுவது பயனுடையதாகும். அஃதாவது,

> "பிரதான குடும்ப புரோகிதரான ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த வெங்கடத்துரவரன், ஆத்ரெய கோத்திரத்தைச் சேர்ந்த தரமலனுதரன் ஆத்ரெய கோத்திரத்தைச் சேர்ந்க ஸ்ரீராமரன், காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த திம்மயரன், பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்த சன்வயரன், கார்க்கெய கோத்திரத்தைச் சேர்ந்த பாலச் சந்திர பண்டித, கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த சுப்ரமன்ய பட்டரன், காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்கந்த சத்ரர்த்தன், காஸ்யட்ப கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்கந்த தெனுவரப்பெருமாலுன், சாஸ்யட்ப கோத்திரத்தைச் சேர்ந்த மயிலரப் பெருமாலுன், பாரத் துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்த ஆனந்த பட்டரன், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த அவுகொள ஒய்கலுபனே பொரேக்குள் பெருமாலுன், கார்கேய கோத்திரத்தைச் சேர்ந்த உலகுடைய பெருமாலுன் கார்கேய கோத்திரத்தைச் சேர்ந்த ஷெண்பகப்பெருமாலுன், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த சரஸ்வதி தெனுவரப் பெருமாலுன், கௌதம கோத்திரத்தைச் சேர்ந்த உலகுடைய பெருமாலுன், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த திம்மா அவதானின், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த பௌத்தாகமச் சக்கரவர்த்தின், யாமதக்னி வஸ்திர கோத்திரத்தைச் சேர்ந்த விநாயக பட்டரன், காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த வேத அமாத்யாதிராயரன், காஸ்யப்ய கோத்திரத்தைச் சேர்ந்த அயிலக்கு இரங்கும் பெருமாலுன், காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த வேதட்டாயிரன், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த ஆனந்த பட்ட வெங்கடத்நுரவாரன், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த விநாயகப் பெருமாலுன், வாஸ்த கோத்திரத்தைச் சேர்ந்த வருணயத்ர சந்திர வைத்தான்கும் பெருமாலுன், ஹரித கோத்திரத்தைச் சேர்ந்த சென்னு ஒய்யஹலுன், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்கராஜரன், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த மணிலமுதிரன், கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த தரமலனுதரன், கௌஷிஹ கோத்திரத்தைச் சேர்ந்த அதர்வனு வேதப்றிஹஸ்பதி பட்டரன், காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த வெடுமாலேயிட்ட பெருமாலுன், பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்த திருமறைக்காட்டு முதலியாரன் ......... நாராயண பட்டரன் காஸ்யப்ப கோத்திரத்தைச் சேர்ந்த திம்ணமயாரன்"

பிராமண குலங்களில் மேற்கூறிய செல்வாக்கினை மனதிற் கொண்டு தான் பரணவித்தானு "பராக்கிரமபாகுவினது (ஆறுவது) ஆட்சிக்குப்

பின் கோட்டை அரசின் மீதும் பிரதானிகள்மீதும் மகாசங்கம் செலுத்தி வந்த செல்வாக்குப் படிப்படியாகக் குன்றத் தொடங்கி, பிராமணர் செல்வாக்கு வளரத் தொடங்கியது. போத்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது சிங்கள மக்களின் உயர் குழாவினர் விரைவாக இந்து சமயத்துக்குள்ளாக்கப்பட்டிருந்தனர்'' எனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1960: 767)

பிராமணர் மட்டுமன்றித் தமிழகத்தில் சைவக் கோயில்களில் குறிப்பாகச் சிவன் கோயில்களின் பூசாரிகளாகவும் உடமையாளராகவுமிருந்த ''பண்டாரங்களும்'' இக்காலத்தில் ஈழத்திற்கு வந்தனர். காலப்போக்கில் இவர்கள் சிங்களப் பிரபுக்களோடு கலந்தனர். (Devaraja, L. 1972:47-68) ''பண்டார'' என்ற பதம் நிதியாளர் எனப் பொருள்தரும். தமிழகத்தில் கோயிற் பூசாரிகளாகிய இவர்கள் நிதிக்குப் பொறுப்பாகவும் இருந்ததால் ''பண்டாரம்'' எனவும் அழைக்கப்பட்டனர். சிங்கள மொழியுள்ள பண்டார என்ற பதமும் ஆரம்பத்தில் தமிழ் பண்டாரத்தின் வழி பிறந்ததே என லோறு தேவராஜா கருதுகிறுர். (Devaraja, L. 1972 : 48) ஆரம்பத்தில் தம்பதேனியாவில் ஆட்சி செய்த முதலாவது புவனேகபாகு காலத்தில் (கி. பி. 1272 – 84) இக்குழுவினர் தமது உதவியாளர்கள், கலைஞர்கள், தபசிகள் ஆகியவருடன் ஈழம் வர இம்மன்னன் இவர்களை ஆதரித்து ''றடல'' ''முதலி'' முதலிய பட்டங்களை அளித்துக் கௌரவித்தான். பின்னர் கணிசமான தொகையினர் ஆருவது புவனேகபாகு காலத்தில் (கி. பி. 1469 – 77) ஈழம் வந்ததற்கான குறிப்புகள் உள. இவர்களுடன் ''ஆண்டி'' எனப்பட்ட பூசாரிகளும் ஈழம் வந்ததும் குறிப்பிடத்தக்கது. (Devaraja, L. 1972 ; 48)

இவ்வாறு இந்துமதத்தின் செல்வாக்கு ஓங்க இதனைத் தடுத்து நிறுத்துமளவுக்கு உறுதி வாய்ந்த அமைப்பினைப் பௌத்தம் இக்காலத்தில் பெற்றிருக்கவில்லை. பொலநறுவை அரசின் வீழ்ச்சியோடு பௌத்த சங்கத்தின் வலுவும் உறுதிப்பாடும் குன்றியது. இதனைப் பேராசிரியர் கிங்ஸ்லி சில்வா

''இக்காலப் பௌத்த மதம்பற்றி நாம் நோக்கும் போது வெளிப்படையாக முரண்பட்டிருப்பதுபோலத் தோன்றும் இரு போக்குகளை அவதானிக்க முடிகிறது. முதலாவதாக மகாசங்கத்தினரிடையே ஒழுக்க நெறியும் கட்டுப்பாடும் மிகமிகச் சீர்குலைந்திருந்தமை தெட்டத் தெளிவாகிறது. அத்துடன் பௌத்தமதமும்கூட வியக்கத்தகு முறையில் இந்துமதத்தின் சவாலை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இந்துமதத்தின் சவால் மட்டுமன்றிப் பௌத்தமதத்தின் தன்மையும் இந்து மத நம்பிக்கைகளின் வளர்ச்சிக்கு இடமளித்தது'' எனக் கூறியுள்ளார். (Silva, K. M. De 1981 : 92)

இதுமட்டுமன்றிப் பௌத்தமதத்தின் தன்மையும் எவ்வாறு அக்காலச் சவாலை எதிர்நோக்குவதற்குத் தகுதியற்றதொன்ருக அதனை ஆக்கியதைப் பேராசிரியர் ஆரியபால மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

அஃதாவது.

''இயற்கைச் சக்திகளையும் பிரபஞ்சத்தின் தோற்றப்பாடுகளையும் இயற்கை கடந்த உயர் சக்தியின் வெளிப்பாடாகப் பெரும்பாலும் மனிதன்

> நோக்கும் மனப்பான்மையே ஆதிமதமாகும். இந்நோக்கில் இச்சக்திகளே முழுப் பிரபஞ்சத்தையும் ஆளுகின்றன. பௌத்தமதம் எவ்வளவு சக்தி வாய்ந்ததாகவும், செல்வாக்கு மிக்கதாகவும் இருந்தபோதிலும் இந்தச் சிந்தனையை வேரோடு கிள்ளி எறியும் முயற்சியில் தோல்வி கண்டது. இதன் விளைவாக இந்த நம்பிக்கைகளைப் பௌத்த மதம் தன்னுள்ளே தழுவிக்கொண்டது. காலப்போக்கில் இந்த நம்பிக்கைகள் பௌத்தமதத்துடன் இரண்டறக் கலந்தன. பௌத்த மதம் தத்துவஞானமாகவிருந்ததால் சாதாரண மனிதனுக்குப் புரியக்கூடிய எதனையும் அதனால் அளிக்க முடியவில்லை. இதன் விளைவாகச் சாதாரண மனிதன் பௌத்தமதத்தைச் சாராத நம்பிக்கைகளையும், பிராமணீயத்தினது நம்பிக்கைகளையும் நடைமுறைகளையும் தழுவிக்கொண்டான்; இவை வழிபாட்டிற்குகந்த அவனுக்குத் திருப்தியளிக்கக்கூடிய வடிவங்களை அவனுக்கு வழங்கின. இறுதியிலே பௌத்தமதமே இந்த வடிவங்களைக் கைக்கொண்டது. (Ariyapala, M. S. 1968 : 184)

ஈழத்தில் மட்டுமன்றிப் பௌத்தம் பரவிய ஏனைய நாடுகளிலும் பௌத்தமதம் தான் சந்தித்த பிற சமய வழிபாட்டு முறைகளை அழிப்பதற்குப் பதிலாகத் தன்னுடன் இணைத்த போக்கினைக் கடைப்பிடித்ததும் ஈண்டு நினைவுகூரற்பாலது; இதனால் "ஈழத்தில் பௌத்த மதத்தினர் எப்போதுமே இந்துத் தெய்வங்களின் உதவியை நாடி வந்தனர். இதன் விளைவாக பௌத்த விகாரை அமைப்பும் இந்துத் தேவாலய அமைப்பும் இணைந்திருந்தமை (பௌத்தம்) இவ்விணைப்பை அங்கீகரித்து ஆதரித்தமை, பௌத்தமதமும் இந்துமதமும் அமைதியான முறையில் ஒன்றிணைந்திருந்தமையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனால் சாதாரண பௌத்த மத விசுவாசிகள் இரு மதங்களுக்கிடையிலேயும் வேற்றுமையைக் காணவில்லை. (Devaraja, L: 1972) இத்தகைய ஒருமைப்பாட்டிற்குப் பௌத்த இந்து மதங்களுக்கிடையே நிலவிய தத்துவார்த்த ரீதியிலான ஒற்றுமையும் வலுவூட்டியது. இவைகளில் கர்மம், மறுபிறப்பு, அவதாரக் கொள்கை ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். இந்து மதத்தின் ஆணிவேராகிய உருவ வழிபாட்டை ஆரம்பத்தில் வெறுத்த பௌத்தம் காலக் கிரமத்தில் அதனையும் பூஜை முறையையும் கைக்கொண்டது. நாளடைவில் இந்துக் கடவுளருக்குப் பௌத்த அம்சங்கள் ஏற்றப்பட்டு பௌத்த கடவுளரோடு இந்துக் கடவுளரையும் ஒரே இடத்தில் வைத்து வழிபடும் மரபும், பௌத்த மதத்தின் காவலர்களாக இந்துக் கடவுளரைக் கருதும் மரபும் வளர்ச்சி கண்டது. தனி இந்துக் கோயில்களைவிடப் பௌத்த விகாரைகளிலே அமைந்த இந்துக் கோயில்கள் இந்துத் தேவலாலயங்கள் எனப் பெயர்பெற்றன. இதனை இரண்டாவது பராக்கிரமபாகுவின் தேவுந்திரக் கல்வெட்டு பின்வருமாறு கூறுகிறது: புனித இடங்களான விகாரைகள், இந்துத் தேவாலயங்கள், (பிராமணர்) அக்கிரகாரங்கள், (இந்துக்) கோயில்கள் ஆகியவற்றுக்குத் தவறிழைக்கக் கூடாது என்பதாகும். (Paranavitane, S. 1953 : 70) விகாரைகளோடு இந்து மதத்தின் இந்து தேவாலயங்கள், கோயில்கள், பிராமணர் குடியிருப்புக்கள் பற்றிச் சமமான முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள இச்செய்தி இந்து மதத்திற்கு இக்காலத்திற் கிடைத்த மதிப்பிற்கும் அங்கீகாரத்திற்கும் ஒரு சிறந்த உரைகல்லாக அமைகிறது. இத்துடன் மன்னர்களிடையே

ஏற்பட்ட உடன்படிக்கைகளிலும்கூட சாட்சிக்கு பௌத்தமதத்தின் மும்மணிகளான பௌத்தம், தர்மம், சங்கம் ஆகியனவற்றோடு இந்துக் கடவுளரும் விளிக்கப்பட்டுள்ளனர். இதனால் பௌத்த குருமார் மத்தியில் இந்துமதச் சிலைகளையோ அன்றி வழிபாட்டு முறைகளையோ ஒதுக்காது, பௌத்த வழிபாட்டோடு இந்துக் கடவுளரையும் வழிபடும் மரபும் வளர்ந்தது. (Paranavitane, S. 1960 : 765) ஆதலால் இக்காலந்தொட்டு இந்துக் கடவுளர், இந்துத் தேவாலயங்கள் ஆகியன காணப்படாத பௌத்த வழிபாட்டிடங்கள் அரிதாகவே காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (Silva, L. A. de. 1974 : 21)

மேற்கூறிய நிலையைக் கம்பளை ராச்சியத்தில் அமைக்கப்பட்ட லங்கா திலக விகாரையில் பௌத்த கடவுளரோடு இந்துக் கடவுளருக்கும் அவர்களது தேவியருக்கும் அமைக்கப்பட்ட சிலைகள் எடுத்துக் காட்டுகின்றன. (Mudiyanse, N....?...) இதனை லங்காதிலக்கக் கல்வெட்டு விரித்துரைக்கிறது. இக்கல்வெட்டில் மைத்திலி, லேகேஸ்வர, நாத, சுயாம, சந்து சிற்ற, சக்ர, பிரமா, விஷ்ணு, மகேஸ்வர ஆகியோரும் அவர்களுடைய தேவியரும் மற்றும் உப்புல்வன், சுமண, விபீஷண, கணபதி, ஸ்கந்த ஆகியோரும் குறிக்கப்பட்டுள்ளனர். பின்னர் கூறப்பட்ட ஐவருக்கும் சிறுசிறு மாடங்கள் லங்காதிலக விகாரையின் சுற்றுப் பிரகாரத்திலுண்டு. அத்துடன் இக்காலத்தில் ஈழத்தின் நான்கு திசைகளுக்கும் காவற்றெய்வங்களை வைத்து நாற்றிசை கடவுளர்களாக அவர்களை வழிபடும் மரபும் மேலோங்கிக் காணப்பட்டது. கோட்டை இராசதானியை அமைத்த அழகக்கோனுர் நாற்றிசைத் தெய்வங்களான விஷ்ணு, விபீஷணன், லட்சுமணன், கந்தன் ஆகியோருக்குத் தானமைத்த கோட்டையின் நாற்றிசையிலும் கோவில்களை அமைத்து இத்தெய்வங்களின் வழிபாடு, மேளம், குழல், நடனம், கானம்போன்ற சகல நாத கீதங்களோடும் இடையருது நடைபெற்று வரவேண்டுமென்று உத்தரவிட்டதாக நிக்காய சங்கிராக என்ற நூல் கூறுகிறது. (Fernando, C. M. 1908) மேற்கூறிய நாற்றிசைக் கடவுள்ர் வரிசையில் இக்காலத்தில் உப்புல்வன், கந்தன் ஆகியரோடு ஏனைய இரு கடவுளர்களாக சுமணன், நாதன், பத்தினி, விபீஷணன், இலட்சுமணன் ஆகியோரில் இருவர் இடம்பெறும் வழக்கும் இக்காலத்திற் காணப்படுகிறது. எவ்வாருயினும் நாற்றிசைக் கடவுளர் வழிபாடு செல்வாக்குப்பெற்ற காலமாக இக்காலம் விளங்குகிறது எனலாம்.

பொலநறுவை அரசு காலத்தில் சிவவழிபாடு பெற்றிருந்த சிறப்பினை இக்காலத்திலும் பெற்றிருந்தது எனலாம். கோட்டை இராசதானியில் அமைந்திருந்த சிவன் கோயிலில் நடைபெற்ற சிவவழிபாடுபற்றி செலலிஹினி சந்தேசம் மிக அழகாக 24ஆம் பாடலில் பின்வருமாறு கூறுகிறது. (நடராசன், சோ. 1963)

''அகிற்புகை கருப்பூரத்தினளாவிய புகையினேடு
துகிற்கொடி நிரைகள் தூங்கத் துவன்றிடு முரசுஞ் சங்கும்,
முகிற்குலமென்ன வேங்க முதிர் மணியிரட்ட வன்பு
முகிழ்ந்திடத் தமிழ்ப் பாவோடு முக்கணன் கோயில் சேர்வாய்''

அஃதாவது அகிற் புகையோடு கற்பூரத்தின் புகையுஞ் சேர்ந்தெழ, துகிற்கொடிகள் நிரைநிரையாக நின்றசைய, முரசும் சங்கும் மேகம்போல முழங்க, மணிகளிரட்ட, பண்ணமைந்த தமிழ்ப் பனுவலைக் காதலொடு அன்பர் பாட, அழகுற்று விளங்கும் மகேஸ்வரன் கோயிலிலே சிறிது தரித்து நிற்கும்படி பூவைக்குக் கூறப்படுகிறது.

இங்கே ஒலித்த வாத்தியங்கள்பற்றி ''காலையில் மங்களப் பஞ்சதூரியங் கேட்கும்'' என 25ஆம் பாடல் கூற இங்கு நடைபெற்ற உதயகாலப் பூசையின் சிறப்பை அடுத்த செய்யுள் விரிக்கிறது.

முன்னீஸ்வரம் சிலாபத்தில் இருந்ததும் இக்காலத்தில் அது முக்கியமான வழிபாட்டு ஸ்தலமாக எழுச்சிபெற வழி வகுத்தது எனலாம். இப் பகுதியில் கடல் தொழிலும் கடல் வாணிபமும் மேம்பட்டுக் காணப்பட்டது. ஆதி காலத்திலிருந்தே முத்துக் குளிப்பும், சங்குத் தொழிலும் வளர்ச்சி கண்ட இடம் இஃதாகும். இதனால் மேற்குக் கரையோரத்தில் பண்டுதொட்டு வழிபாட்டிடங்கள் பல வளர்ச்சி கண்டன. சிலாபம் என்ற இடப்பெயர் கூட முத்தையே குறிக்கும். இவற்றுள் முன்னீஸ்வரம் திருக்கேதீஸ்வரம் அஸ்வகிரி (குதிரை மலை)ச் சிவன்கோயில் ஆகியன முக்கியமானவையாகும். முன்னீஸ்வர மான்யத்தில் (பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் : 1965) திருக்கோணேஸ்வரத்தொடு தொடர்புடைய குளக்கோட்டன்பற்றி வரும் செய்தியை நோக்கும்போது பொலநறுவைக் காலத்தில் முக்கியமான சிவ வழிபாட்டிற்குரிய தலமாகவும் யாத்திரைத் தலமாகவும் இது எழுச்சி பெற்றது தெரிகிறது. கோகில சந்தேசத்தின் 182ஆவது செய்யுளில் இக் கோயில்பற்றிய குறிப்பு வருகிறது. கோட்டை அரசன் ஆறுவது பராக்கிரமபாகு இக்கோயிலுக்கு அளித்த மான்யம்பற்றி இங்கு கிடைத்துள்ள தமிழ் வட - மொழிக் கல்வெட்டுச் சான்று பகருகிறது. கோயில் மட்டுமன்றி, கோயிலிருந்த இப்பகுதியும் முன்னீஸ்வர ஆலயத்தின் பெயரால் அழைக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் கோயில் குருமாருக்கு அளிக்கப்பட்ட நிலம், பணம் ஆகியன மட்டுமன்றி ஆலயத்தின் பூசைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளும் கூறப்படுகிறது. இக் கல்வெட்டும் பின்வருமாறு அமைகின்றது. (Pathmanathan, S. 1974 : 65 - 69)

ஸ்வஸ்தி ஸ்ரீ ஸமந்த பத்ர சரணார விந்த
வந்தித நிநகர வம்ஸாணிஜாத ராஜாதிராஜ
பரராஜசேகர வைஜாங்க ஸ்ரீ சங்கபோதி
வத்மரான திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ
பராக்கிரமபாகு தேவற்கு யாண்டு
38ஆவது அற்பசி முன்பத்தாம் பக்கம்
மொன்னீஸ்வரமுடைய தம்பிரானாரை
பூஜிக்கிற நம்பிமாரை ஜயவர்த்தனக்
கோட்டைக்கு அழைத்து விஜஸாமகவ
பண்டிதர் புரோகிதரிடம் தம்பிரானாருடைய
க்ஷேத்திரங்களிற் செய்தி கேட்டு முன்பு
நம்பிமார்க்கு நின்ற மொன்னீஸ்வரத்தில்
சீமைக்கு உள்பட்ட க்ஷேத்திரத்

தம்பிரானுற்குத் திருநமத்துக் காணியாக
கற்பித்து நம்பிமார்க்குப் பூஜைக் காணியாக
இலுப்பை தெணியில் வயல் அமணம்
இருபத்திரண்டும் கோட்டைப் பிட்டியில்
வயல் அமணம் முப்பதும் முதல்மைக்குக்
கற்பித்துத் தித்தக் கடையில் வயல் அமணம்
எட்டும் இதுக்குள்ள குடியிருப்புங் காடும்
ஆகவும் நியமித்து மொண்ணீஸ்வரத்தில்
நம்பிமாற்க்கு இருக்கக் கற்பித்து
மனை உள்ளதும் முன்னுளியரிசியில் அமுது
கறியமுது இலையமுது சுகந்தம் முதலான
வையும் நம்பிமாற்கு மாதமொன்றுக்குப்
பணம் முப்பதும் முதல்மைக்குடைமைப் பணம்
மாசமொன்றுக்கு ஒவ்வொருத்தற்கு பதினென்றும்
இவர்களுக்குப் பாரம்பரியமாக சந்திராதித்ய
வரை சர்வமான்யமாக நடக்கும்படி
மொண்ணீஸ்வரமுடைய தம்பிரானுர்...
அபமதியவர்களுக்கு நியமித்த அளவுக்கு
மேல் ஒருவராலும் விக்னம் இன்றியே இருக்கக்
கற்பித்தருளின இந்தக் காணிக்கு அஹிதம்
செய்தவர்கள் பஞ்சமகா பாதகம்
செய்தவர்களாவும் இதற்கு ஹிதம்
செய்தவர்கள் சூர்யபதத்தைப் பெறக் கடவராகவும்.

ததிதம் கணநாதஸ்ய
சைவ ஞான மகோததே
மொண்ணிஸ்வர பிரசாதேந
சண்ட நாதஸ்ய சாசனம்.

மேற்கூறிய கல்வெட்டில் ஒப்படைக்கிளவியாக இதற்கு ஊறு விளைவிப்பவர் பஞ்சமகா பாதகங்களைச் செய்தவராவர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அவையாவன பிராமணரைக் கொல்லல், மது அருந்துதல், பொன்னைக் களவெடுத்தல், குருவின் மனைவியோடு தகாத உறவு கொள்ளல், மேற்கூறிய குற்றங்களை இழைத்தவர்களோடு தொடர்பு வைத்தல் என்பனவாகும். நன்மை செய்தவர்கள் சூரிய பதவியை அடைவார்கள் என்பதிலும் பார்க்கச் சாயுச்சய பதத்தை அடைவர் என்பது பொருத்தமானது எனப் பேராசிரியர் வேலுப்பிள்ளை கூறிச் சைவசித்தாந்தத்திலுள்ள நான்கு விண்ணுலகுகள்பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளார். அவையாவன சாலோக்கியம், சாமிப்பியம், சாருப்பியம், சாயுச்சயம் என்பனவாகும். இவற்றில் சாயுச்சய பதமே ஆகக் கூடியதொன்ருகும், (Veluppillai, A. 1971 : 37 – 43) இத்தகைய குறிப்பு சைவசித்தாந்தம்பற்றி இக்காலத்தில் ஈழத்தில் அதுவும் கோட்டை ராச்சியத்தில் நிலை பெற்றிருந்த அறிவினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இக்காலத்தில் முன்னீஸ்வரக் கோயிலுக்குச் சொந்தமான 64 கிராமங்களில் இவ்வாலய சேவையிலீடுபட்டிருந்த தமிழ்க் கலைஞர்கள் அந்தணர்கள் வாழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ தட்சிண கைலாய புராணம் திருக்கோணேஸ்வரத்தின் தல புராணமாகவிருந்தாலும் இக்காலக் கோயில்கள்பற்றிக் குறிப்பிடுகிறது. (வைத்திலிங்க தேசிகர், பு. பொ. 1916) இவற்றுள் இம்மேற்குக் கரையின் குதிரைமலையில் இருந்த அஸ்வகிரிச் சிவாலயமும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் நீர்கொழும்பில் காணப்படும் இடப்பெயர்களை மையமாக வைத்தும், பின்வந்த போத்துக்கேயரின் ஆவணங்களைக் கொண்டும் இப்பகுதியிலிருந்த சிவ – உமை ஆலயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (Navaratnam, C. S. 1964 : 58 – 59) அஃதாவது நீர்கொழும்பில் ஓரிடம் நஞ்சுண்டான்கரை எனவும் மற்றையது காமாட்சியோடை எனவும் அழைக்கப்படுகிறது. காமாட்சிஓடையில் ''பமுனுகம'' (பிராமணர் வாழும் இடம்) என்றதொன்றும் உளது. நஞ்சுண்டான், காமாட்சியோடை யாகியவை சிவ, பார்வதி ஆகியோரின் திருநாமங்களாக விளங்குவதால் இப்பகுதியில் இவ்வழிபாட்டிடங்களோடு பிராமணர் குடியிருப்பும் காணப்பட்டது எனலாம். இதற்காதாரமாக போத்துக்கேய வரலாற்றாசிரியரான குவேரோஸ் சுவாமிகள் 1575இல் இந்துக்களின் பெருமதிப்பிற்குரிய இரு பெரிய கோயில்கள் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டன எனக் கூறும் செய்தியை மேற்கோள் காட்டி இவை மேற்கூறிய சிவ, பார்வதி, ஸ்தலங்களாகவிருக்கலாம் என நவரத்தினம் அவர்கள் கூறுவது பொருத்தமானதொரு கருத்தாக அமைகிறது.

மேற்கூறிய கோயில்கள் மட்டுமன்றி தேவிநுவர அல்லது ஆங்கிலமயமாக்கப்பட்ட தொந்திராமுனையிலும் சிவவழிபாடு தழைத்திருந்ததற்குச் சான்றுகள் உள. தேவிநுவர என்பது தேவன் அல்லது கடவுளர் நகரம் எனப் பொருள்படும். இங்கே கிடைத்த தமிழ்க் கல்வெட்டு இதனைத் ''தேனுவரை'' என அழைக்கிறது. நாம் ஆராயும் காலத்திற்குப் பிந்திய கல்வெட்டொன்றில் அதாவது ஆறுவது விஜயபாகுவின் (கி. பி. 1513 - 21) கல்வெட்டில் இங்கிருந்த ''நகரீச'' கோயில் பற்றிய குறிப்புளது. ''நகரீச'' என்றால் நகருக்குத் தலைவன் என்பது பொருளாகும். பரணவித்தாண அவர்கள் (Paranavitane, S. 1953) ''ஈச'' என்ற விகுதியைக்கொண்டு இது சிவனைக் குறித்து நிற்கின்றது என்றும் இதனால் இது சிவன் கோயிலே என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில்பற்றிய பிறதகவல்கள் நமக்குக் கிட்டாவிட்டாலும்கூட இங்கே உள்ள தூண்களில் அம்பெய்யும் நிலையில் இருக்கும் சிற்பமொன்று (Paranavitane, S. 1953: pl. xx) திரிபுராந்தக நிலையிலுள்ள சிவனைக் குறிக்கலாமென்று எண்ணத் தூண்டுகின்றது. இதனால் இவ்விடத்தில் சிவ வழிபாடு காணப்பட்டதற்கான விவரமான தடயங்கள் காணப்படாவிட்டாலும்கூட, யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் ''சந்திரசேகரீச்சுரம்'' கோயிலும், ''ரொலமி''யின் ''டக்கோன'' (சந்திரனுக்குப் புனிதமான இடம்) என்ற குறிப்பும் இங்கே சிவ வழிபாடு ஆதியிலிருந்து தழைத்திருந்ததை எடுத்துக் காட்டினாலும்கூட இதன் தொடர்ச்சியினையும் விரிவினையும் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் இக்கோயில்தான் விஜயபாகு காலத்தில் குறிப்பிடப்படும் ''நகரீச'' கோயில் என்று யூகிப்பதில் தவறில்லை. மத்திய காலத்தில் ''உப்புல்வன்'' (மாயோன்) வழிபாடுதான் செல்வாக்குள்ள வழிபாடாக இப்பகுதியிற் காணப்பட்டதால் சிவவழிபாட்டின் முக்கியம் குறைந்தது எனலாம். இதனால் நாம் ஆராயும் காலப்பகுதியில் இது

தம்பிரானுற்குத் திருனுமத்துக் காணியாக
கற்பித்து நம்பிமார்க்குப் பூஜைக் காணியாக
இலுப்பை தெணியில் வயல் அமணம்
இருபத்திரண்டும் கோட்டைப் பிட்டியில்
வயல் அமணம் முப்பதும் முதல்மைக்குக்
கற்பித்துத் தித்தக் கடையில் வயல் அமணம்
எட்டும் இதுக்குள்ள குடியிருப்புங் காடும்
ஆகவும் நியமித்து மொண்ணீஸ்வரத்தில்
நம்பிமாற்க்கு இருக்கக் கற்பித்து
மனை உள்ளதும் முன்னுளியரிசியில் அமுது
கறியமுது இலையமுது சுகந்தம் முதலான
வையும் நம்பிமாற்கு மாதமொன்றுக்குப்
பணம் முப்பதும் முதல்மைக்குடைமைப் பணம்
மாசமொன்றுக்கு ஒவ்வொருத்தற்கு பதினென்றும்
இவர்களுக்குப் பாரம்பரியமாக சந்திராதித்ய
வரை சர்வமான்யமாக நடக்கும்படி
மொண்ணீஸ்வரமுடைய தம்பிரானுர்...
அபமதியவர்களுக்கு நியமித்த அளவுக்கு
மேல் ஒருவராலும் விக்னம் இன்றியே இருக்கக்
கற்பித்தருளின இந்தக் காணிக்கு அஹிதம்
செய்தவர்கள் பஞ்சமகா பாதகம்
செய்தவர்களாவும் இதற்கு ஹிதம்
செய்தவர்கள் சூர்யபதத்தைப் பெறக் கடவராகவும்.

ததிதம் கணநாதஸ்ய
சைவ ஞான மகோததே
மொண்ணீஸ்வர பிரசாதேந
சண்ட நாதஸ்ய சாசனம்.

மேற்கூறிய கல்வெட்டில் ஒப்படைக்கிளவியாக இதற்கு ஊறு விளைவிப்பவர் பஞ்சமகா பாதகங்களைச் செய்தவராவர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. அவையாவன பிராமணரைக் கொல்லல், மது அருந்துதல், பொன்னைக் களவெடுத்தல், குருவின் மனைவியோடு தகாத உறவு கொள்ளல், மேற்கூறிய குற்றங்களை இழைத்தவர்களோடு தொடர்பு வைத்தல் என்பனவாகும். நன்மை செய்தவர்கள் சூரிய பதவியை அடைவார்கள் என்பதிலும் பார்க்கச் சாயுச்சய பதத்தை அடைவர் என்பது பொருத்தமானது எனப் பேராசிரியர் வேலுப்பிள்ளை கூறிச் சைவசித்தாந்தத்திலுள்ள நான்கு விண்ணுலகுகள்பற்றியும் எடுத்துக் காட்டியுள்ளார். அவையாவன சாலோக்கியம், சாமிப்பியம், சாருப்பியம், சாயுச்சயம் என்பனவாகும். இவற்றில் சாயுச்சய பதமே ஆகக் கூடியதொன்ருகும், (Veluppillai, A. 1971 : 37 – 43) இத்தகைய குறிப்பு சைவசித்தாந்தம்பற்றி இக்காலத்தில் ஈழத்தில் அதுவும் கோட்டை ராச்சியத்தில் நிலை பெற்றிருந்த அறிவினை எடுத்துக்காட்டுகின்றது எனலாம். இக்காலத்தில் முன்னீஸ்வரக் கோயிலுக்குச் சொந்தமான 64 கிராமங்களில் இவ்வாலய சேவையிலீடுபட்டிருந்த தமிழ்க் கலைஞர்கள் அந்தணர்கள் வாழ்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ தட்சிண கைலாய புராணம் திருக்கோணேஸ்வரத்தின் தல புராணமாகவிருந்தாலும் இக்காலக் கோயில்கள்பற்றிக் குறிப்பிடுகிறது. (வைத்திலிங்க தேசிகர், பு. பொ. 1916) இவற்றுள் இம்மேற்குக் கரையின் குதிரைமலையில் இருந்த அஸ்வகிரிச் சிவாலயமும் கூறப்பட்டுள்ளது. இத்தகைய பின்னணியில் நீர்கொழும்பில் காணப்படும் இடப்பெயர்களை மையமாக வைத்தும், பின்வந்த போத்துக்கேயரின் ஆவணங்களைக் கொண்டும் இப்பகுதியிலிருந்த சிவ – உமை ஆலயங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. (Navaratnam, C. S. 1964 : 58 – 59) அஃதாவது நீர்கொழும்பில் ஓரிடம் நஞ்சுண்டான்கரை எனவும் மற்றையது காமாட்சியோடை எனவும் அழைக்கப்படுகிறது. காமாட்சிஓடையில் "பழுனுகம" (பிராமணர் வாழும் இடம்) என்றதொன்றும் உளது. நஞ்சுண்டான், காமாட்சியோடை யாகியவை சிவ, பார்வதி ஆகியோரின் திருநாமங்களாக விளங்குவதால் இப்பகுதியில் இவ்வழிபாட்டிடங்களோடு பிராமணர் குடியிருப்பும் காணப்பட்டது எனலாம். இதற்காதாரமாக போத்துக்கேய வரலாற்றாசிரியரான குவேரோஸ் சுவாமிகள் 1575இல் இந்துக்களின் பெருமதிப்பிற்குரிய இரு பெரிய கோயில்கள் போத்துக்கேயரால் அழிக்கப்பட்டன எனக் கூறும் செய்தியை மேற்கோள் காட்டி இவை மேற்கூறிய சிவ, பார்வதி, ஸ்தலங்களாகவிருக்கலாம் என நவரத்தினம் அவர்கள் கூறுவது பொருத்தமானதொரு கருத்தாக அமைகிறது.

மேற்கூறிய கோயில்கள் மட்டுமன்றி தேவிநுவர அல்லது ஆங்கிலமயமாக்கப்பட்ட தொந்திராமுனையிலும் சிவவழிபாடு தழைத்திருந்ததற்குச் சான்றுகள் உள. தேவிநுவர என்பது தேவன் அல்லது கடவுளர் நகரம் எனப் பொருள்படும்; இங்கே கிடைத்த தமிழ்க் கல்வெட்டு இதனைத் "தேனுவரை" என அழைக்கிறது. நாம் ஆராயும் காலத்திற்குப் பிந்திய கல்வெட்டொன்றில் அதாவது ஆறுவது விஜயபாகுவின் (கி. பி. 1513 - 21) கல்வெட்டில் இங்கிருந்த "நகரீச" கோயில் பற்றிய குறிப்புளது. "நகரீச" என்றால் நகருக்குத் தலைவன் என்பது பொருளாகும். பரணவித்தானா அவர்கள் (Paranavitane, S. 1953) "ஈச" என்ற விகுதியைக்கொண்டு இது சிவனைக் குறித்து நிற்கின்றது என்றும் இதனால் இது சிவன் கோயிலே என்றும் குறிப்பிட்டுள்ளார். இக்கோயில்பற்றிய பிறதகவல்கள் நமக்குக் கிட்டாவிட்டாலும்கூட இங்கே உள்ள தூண்களில் அம்பெய்யும் நிலையில் இருக்கும் சிற்பமொன்று (Paranavitane, S. 1953: pl. xx) திரிபுராந்தக நிலையிலுள்ள சிவனைக் குறிக்கலாமென்று எண்ணத் தூண்டுகின்றது. இதனால் இவ்விடத்தில் சிவ வழிபாடு காணப்பட்டதற்கான விவரமான தடயங்கள் காணப்படாவிட்டாலும்கூட, யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் "சந்திரசேகரீச்சுரம்" கோயிலும், "தொலமி" யின் "டக்கோனு" (சந்திரனுக்குப் புனிதமான இடம்) என்ற குறிப்பும் இங்கே சிவ வழிபாடு ஆதியிலிருந்து தழைத்திருந்ததை எடுத்துக் காட்டினாலும்கூட இதன் தொடர்ச்சியினையும் விரிவினையும் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும் இக்கோயில்தான் விஜயபாகு காலத்தில் குறிப்பிடப்படும் "நகரீச" கோயில் என்று யூகிப்பதில் தவறில்லை. மத்திய காலத்தில் "உப்புல்வன்" (மாயோன்) வழிபாடுதான் செல்வாக்குள்ள வழிபாடாக இப்பகுதியிற் காணப்பட்டதால் சிவவழிபாட்டின் முக்கியம் குறைந்தது எனலாம். இதனால் நாம் ஆராயும் காலப்பகுதியில் இது

பற்றிய விபரமான செய்திகள் கிடைக்கவில்லை என்றாலும்கூட இக்காலத்தில் கோட்டைத் தலைநகரில் மகேஸ்வரன் ஆலயம் இருந்ததுபோல கோட்டைத் தலைநகருக்கடுத்த துறைமுக நகராகிய இவ்விடத்திலும் இதன் தலைவனாக "நகரீசராக" சிவனுக்கு ஓர் ஆலயம் காணப்பட்டது என்று கொள்ளுவதிற் தவறில்லை எனலாம்.[1]

சிவனொளிபாதமலை இக்காலத்தில் இந்துக்களது யாத்திரைத் தலமாக விளங்கியது என்பதனை 14ஆம் நூற்றாண்டைய இபின்பற்றூற்றாவின் குறிப்பு உணர்த்துகின்றது. இம்மலையை இவன் தரிசிப்பதற்கு யாழ்ப்பாண ராச்சிய மன்னனாகிய ஆரியச் சக்கரவர்த்தி வருடாவருடம் இத்தலத்திற்கு யாத்திரை செய்யும் நான்கு யோகிகளையும், நான்கு பிராமணர்களையும், பத்து உதவியாளர்களையும் இவனோடு உதவிக்கு அனுப்பினான். (Paranavitane, S. 1957) பரணவித்தானா இக்குறிப்பில் பிராமணர்களும் யோகிகளும் இம்மலையைத் தரிசிப்பதற்கு வருடாவருடம் இங்கு வருவது இம்மலை இந்துக்களின் யாத்திரிகைத் தலமாக விளங்கியது என்பதை எடுத்துக் காட்டுவதாக ஒத்துக் கொண்டாலும்கூட இம்மலை சிவவழிபாட்டிற்குரிய மலையாக விளங்கியதற்கு எதுவித சான்றுமில்லை எனவும் கூறி இம்மலையைச் சிவனுடன் தொடர்புபடுத்தும் மரபு மிகப் பிந்தியதே எனவும் குறிப்பிட்டுள்ளார். பௌத்தர்களுக்குரிய புனித இடமாகவும் இது விளங்கியதை மறுக்கமுடியாத அதே நேரத்தில் சிவ வழிபாட்டின் சின்னமாகவும் இது விளங்கியது என்பதும் மறுப்பதற்கில்லை. மலையே சிவனின் வாசஸ் தலம். கைலாசமலை ஐதீகங்களில் சிவனின் வாசஸ்தலமாகவே குறிக்கப் படுகிறது. ஈழத்திலும் "தட்சிண கைலாசம்" என்று திருக்கோணேஸ்வரம் அழைக்கப்பட்டதை இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் உணர்த்துகின்றன.

போத்துக்கேயர் வருகைக்கு முன் எழுச்சி பெற்ற தட்சிண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரத்தின் தலபுராணமாகும். இதில் சிவனொளி பாதமலை சிவ வழிபாட்டின் சின்னமாகக் குறிக்கப்படுகிறது. துர்அதிஷ்டவசமாக இதுபற்றிய விபரங்களைச் சிங்கள இலக்கியங்கள் நமக்குத் தரவில்லை எனலாம். சிங்கள இலக்கியங்கள் இம்மலைக் கடவுளாக "சமன்" தெய்வம் விளங்கியதை எடுத்துக் காட்டுகின்றன. மணிமேகலை இம்மலையைச் 'சமனொளி' என அழைப்பதால் இப்பதத்திலிருந்துதான் சிவனொளி என்ற தமிழ்ப்பதம் மருவியது என்று பரணவித்தானா கூறி இதனால் சிவன் சமனாக மாறவில்லை எனவும் கூறுகிறார். அத்துடன் இச்சமன் தெய்வம் 'யமனே' என்பதும் இவரது கருத்தாகும்; திசைக் காவலர்களில் ஒருவனாக விளங்கிய 'யமன்' செல்வாக்குள்ள ஒரு கடவுளாக இக்காலத்தில் விளங்கியதற்குப் பிற ஆதாரங்கள் காணப்படாததால் இது யமன் தெய்வமாக இருப்பது என்பதும் சந்தேகமே. எனினும் சமய வளர்ச்சியில் இந்துக் கடவுளர் பௌத்த அம்சங்களுடன் காலக் கிரமத்தின் தம் உருவையே மாற்றி வழிபடப்பட்டதற்கான சான்றுகள் கிடைப்பதால் சிவன்தான் பௌத்தர்களால் 'சமனாக' பௌத்த அம்சங்கள் ஏற்றி வழிபடப்பட்டானோ என்பதும் ஈண்டு ஆராய்தற்குரியது. அது மட்டுமன்றி இக்காலத்தில் நாட்டின் காவற் றெய்வங்களில் ஒன்றாக வரும் "நாத"கூட சிவனோடு தொடர்புடைய ஒரு கடவுளாக விளங்குவதால் சிவ, சமன், நாத ஆகியோருக்கிடையே இழைவிட்டோடும் ஒற்றுமைபற்றி ஆராய்தலும் அவ

சியமாகின்றது. எவ்வாருயினும் இந்து மரபினை நோக்கும்போது இக் காலத்தில் சிவனொளிபாதமலை சிவ வழிபாடுக்குரிய தலமாக விளங்கியது எனக் கொள்ளுவதில் தவறில்லை.

கேகாலை மாவட்டத்திலுள்ள குடாகம என்ற இடத்தில் கோட்டை அரசுக் காலத்தில் இருந்த மொட்டைப்புளிக் கோயில்பற்றிய குறிப்புண்டு. கோட்டை அரசனுகிய ஆருவது விஜயபாகு (1513 – 21) இதற்களித்த தானம் பற்றி ஒரு சிங்களக் கல்வெட்டுக் கூறுவதை நோக்கும்போது இவனது காலத்திற்கு முன்பிருந்தே இக்கோயில் இங்கு நிலைகொண்டிருந்தது புலனுகின்றது. துர்அதிஷ்டவசமாக வேறு தகவல்கள் கிட்டவில்லை. (இந்திர பாலா, கா. 1970) இது சிவன்கோயிலாகவும் இருக்கலாம். இற்றைக்குப் பல ஆண்டுகட்கு முன்னர் றம்புக்கணையில் ஒரு இந்துக் கோயிலின் அழி பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் நந்தி விக்கிரகம் குறிப்பிடத்தக்கது: இது சிவன் கோயிலாகவும் இருந்திருக்கலாம்' (இந்திரபாலா, 1970)

பெந்தோட்டையின் கரையிலிருந்த காளி கோயில் பற்றிய குறிப் பொன்று பரெவி சந்தேஸத்தின் 68ஆவது பாடலில் உளது. இதற்குக் கிட்டத்தான் வனவாச ஆச்சிரமமும் இருந்தது. இச்சந்தேஸ பாடலில் காளி ராட்சசியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதோடு இக்கோயிலில் இருந்த – வழிபடவந்தோரது கண்ணைக் கொள்ளை கொண்ட நடனமாதர் பற்றிய குறிப்பும் இதில் உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் கி. பி. 15ஆம் நூற்ருண் டைச்சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்று களுத்துறையிற் கிடைத்துள் ளமை நினைவு கூரற்பாலது.

இக்கல்வெட்டுப் பூரணமாக வாசிக்கக்கூடிய நிலையிற் காணப்படா விட்டாலும் இதில் வரும் குறிப்புக்கள் முக்கியமானவையாகும். (Veluppillai, A. 1971 : 40 – 45) இதில் "ஐந்நூற்றுவர் காளி" என்ற குறிப்பு வருகிறது. இதனுல் சோழப் பேரரசுக் காலத்திலிருந்து ஈழத்தில் வியா பார நடவடிக்கைகளிலீடுபட்டிருந்த "திசையாயிரத்து ஐஞ்ஞூற்றுவர்" என்ற வியாபார கணத்தினரே இக்கல்வெட்டுக் கூறும் காளி கோயிலை நிருமாணித்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. இக்கோயிலுக்கான தானத்தை வழங்கியவர்களாக இப்பகுதியிலாண்ட ஓரரசனும் பிரதானி யும் (முதலி) குறிக்கப்பட்டுள்ளனர். தானமாக வயல், தோட்டம் ஆகியன வற்றிலிருந்து பெறப்பட்ட தானியம் கொடுக்கப்பட்டதும் கூறப்படுகிறது. இதனுல் சந்தேஸ இலக்கியம் கூறும் காளி கோயிலும் இக்கல்வெட்டுக் கூறும் காளி கோயிலும் ஒன்ருக இருக்கலாமென்றும் கருதப்படுகிறது. (Pathmanathan, S. 1986)

இக்காலத்தில் பிரமாவின் சிலைகள் காணப்பட்டாலும்கூடப் பிரமாவுக் கென்று தனிக்கோயில்கள் அமைக்கப்படவில்லை. எனினும் மாயோன் வழி பாடு (உப்புல்வன்) விஷ்ணு வழிபாட்டுடன் சங்கமித்து ஈற்றில் விஷ்ணு வழிபாடு மேலோங்கியதற்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவ்வழி பாட்டின் முக்கிய தலமாகத் துறைமுகப் பட்டினமாகிய தேவிநுவர (தேவன் நகரம்) விளங்கியது தெரிகிறது. இந்திய உபகண்டத்தில் குமரி முனை பெற்ற முக்கியத்துவத்தினை இது பெற்றிருந்ததோடு துறைமுகப் பட்டினமாக இருந்ததால் பல்தேசிகளை இங்கே ஈர்க்கும் சிறப்பையும்

பெற்றிருந்தது. இரண்டாவது பராக்கிரமபாகு காலத்தில் சிங்கள மன்னர் இக்கோயிலோடு கொண்டிருந்த தொடர்பினைச் சூளவம்சம் எடுத்துரைக்கிறது. அஃதாவது சாவக மன்னனை வெற்றி கொண்ட பின்னர் இம்மன்னனின் மருமகனாகிய வீரபாகு இங்கு சென்று உப்புல்வனை (மாயோனை) வணங்கி அவனுக்கு விழா எடுத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (C. V. 83, 48 – 50) பிறிதோரிடத்தில் சூளவம்சம் இரண்டாவது பராக்கிரமபாகு மன்னன் பல்வகைப் புண்ணிய நடவடிக்கைகளின் சுரங்கமாக விளங்கும் புனிதத் தன்மை வாய்ந்த தேவிநுவரவில், கடவுளருக்கெல்லாம் தலைவனாகிய உப்புல்வனுடைய கோயில் கட்டப்பட்டு நீண்ட நாளாகியபடியால் அது தூர்ந்துபோனதால் இந்திரனுடைய விண்ணுலக மாளிகை போன்று சகல செல்வங்களுக்கும் உறைவிடமாக இருக்கும்வண்ணம் அக்கோயிலைத் திருப்பிக் கட்டி அதில் வருடாந்த விழாக்களை எடுக்கவும் நடவடிக்கை எடுத்தான் எனக் கூறுகிறது. (C. V. 85, 85 – 89) நான்காவது பராக்கிரமபாகு கடவுளர்க்கெல்லாம் தலைவனான நீலோற்பலனுக்குப் பெருமாடங்களையும், இருதளங்களையும், மதிலையும், வாசற் கோபுரத்தையுமுடைய ஆலயத்தை அமைத்து அதில் நீலோற்பலன் சிலை அமைத்துப் பெருவிழா எடுத்த செய்தியும் சூளவம்சத்திற் கூறப்படுகிறது. (C. V. 90, 94 – 102)

போத்துக்கேயர் கால ஆதாரங்களை உற்று நோக்கும்போது அவர்கள் இடித்த ஆலயம் விஷ்ணு ஆலயமாகப் பௌத்த விகாரைக்கு அண்மையில் கடற்கரையிலிருந்தது தெரிகிறது. (Paranavitane, S. 1953) உப்புல்வனுக்கு அமைக்கப்பட்ட பழைய ஆலயம் இதற்கப்பால் தரைப்பகுதியை நோக்கி இருந்ததோடு தூர்ந்தும் காணப்பட்டதால் இக்காலத்தில் உப்புல்வன் வழிபாடு விஷ்ணு வழிபாட்டோடு சங்கமித்ததால் பழைய உப்புல்வன் கோயில் கைவிடப்பட புதிய இடத்தில் விஷ்ணு ஆலயம் கட்டப்பட்டதெனலாம். இதனைத்தான் போத்துக்கேயரும் இடித்தனர்: 14ஆம் நூற்றுண்டிற்கான தமிழ்க் கல்வெட்டில், குறிக்கப்படும் ''தேனவரை நாயினுர்'', ''தேனவரை ஆழ்வார்'' ஆகிய பதங்கள் விஷ்ணுவையே குறித்தது எனலாம். இவ்வாறு விஷ்ணு வழிபாடு இங்கே அக்காலத்தில் மேலோங்குவதற்கு இக்காலத்தில் இந்தியாவிலிருந்து வந்து இங்கு குடியேறிய பல பிராமண குலங்கள் காரணமாக இருந்தன எனலாம். தேவிநுவரவில் இரண்டாவது பராக்கிரமபாகு காலந்தொட்டுப் பிராமணர் செல்வாக்குடன் காணப்பட்டனர். இவன் காலத்தைய இங்குள்ள பிராமணர் அக்கிரகாரம் பற்றிய சான்றுகள் உள: இங்கு மட்டுமன்றிக் ''குருநாகல விஸ்தாரய'' என்ற நூல் குருநாகல் ராச்சிய காலத்தில் இந்நகரில் 500 பிராமணரின் இல்லங்கள் காணப்பட்டதைக் குறிப்பிடுகிறது. மேலும் இங்கே பிராமணர் கிராமமும், பிராமணர் வீதியும் இருந்ததையும் இது குறிக்கிறது. (Navaratnam, C. S. 1964 – 108) மூன்றாவது பராக்கிரமபாகு காலத்தில் வெளியிடப்பட்ட நாய்மானுக் தமிழ்க் கல்வெட்டு இப்பகுதியில் காணப்பட்ட பிராமணரின் தானசாலைக்குக் கொடுக்கப்பட்ட தானம் பற்றிக் குறிப்பிடுகிறது. (Paranavitane, S. 1953) இத்தானத்தில் நாய்மானுக் கிராமமும் சுங்கங்கொல, பகல, கரமுல்லை, வேர்த்துவை ஆகிய இடங்களின் வயலும் தோட்டமும், அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தானத்திற்கு ஊறு விளைவிப்போர் கங்கையிற் பசுவையும் பிராமணரையும் கொன்ற பாவத்திற்

சூரிய கதியை அடைவார்களென்றும் இத்தகைய கொடை நீடித்து நிலைக்க உதவுவோர் சுவர்க்கத்தையும் முத்தியையும் அடைவர் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இக்கோயிலோடு சேர்ந்த இத்தானசாலையில் பன்னிரண்டு பிராமணர் வாழ்ந்ததையும் மேற்கூறிய கல்வெட்டின்மூலம் அறிய முடிகிறது. 14ஆம் நூற்றூண்டில் இத்தலம் பெற்றிருந்த மகிமையை இங்கு வந்த இபின்பற்றுற்ரு என்ற யாத்திரிகனின் குறிப்பு மேலும் உறுதிப் படுத்துகிறது. இவ்விடத்தில் ஆயிரமளவிலான பிராமணரும் யோகிகளும் வாழ்ந்ததையும் ஐஞ்ஞூற்றளவிலான நடனமாதர் பூசை வழிபாடுகள் நடைபெற்றபோது தினமும் பாடியும் ஆடியும் ஆண்டவனை மகிழ்வித் ததையும் இவர் குறிப்பிட்டுள்ளார். (Paranavitane, S. 1960 : 766)

இக்கோயிலின் மேன்மையை 15ஆம் நூற்றூண்டில் வெளியிடப்பட்ட மும்மொழிக் கல்வெட்டொன்று எடுத்துக்காட்டுகின்றது. சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மும்மொழிகளில் வெளியிடப்பட்ட இக்கல்வெட்டு பௌத்த, இஸ்லாமிய, இந்து தலங்களுக்கு அளிக்கப்பட்ட மானியத்தைக் குறிக்கிறது. பௌத்த தலத்திற்கு அளிக்கப்பட்ட மானியத்தைச் சிங்களத்திலே குறிப் பிடாமல் அதனைச் சீன மொழியிலே குறிப்பிட்டுச் சிங்களப் பகுதியாக இன்று விளங்கும் இப்பகுதியில் இக்காலத்தில் செல்வாக்குப் பெற்ற இந்துத் தலமொன்றுக்குக் கொடுத்த தானத்தைத் தமிழிலே குறித்து வைத்தமை மிக முக்கியமான செய்தியாகும். இக்காலத்தில் இந்து சமுத் திரத்தில் வியாபாரிகள் பயன்படுத்தும் மொழி எனச் செல்வாக்குள்ள நிலைக்குத் தமிழ்மொழி மேன்மைபெற்ற காரணம் மட்டுமன்றி இப்பகுதி யில் தமிழர் செல்வாக்குடன் வாழ்ந்து இக்கல்வெட்டை வாசித்து விளங் கும் அளவுக்குப் புலமை பெற்றிருந்ததையும் இது எடுத்துக்காட்டுகிறது எனலாம். இங்கு வசித்த பெரும்பாலான பிராமணரும் தமிழகத்தி லிருந்துதான் வந்தவர்கள் என்பதும் ஈண்டு நினைவுகூரற்பாலது. நான் காவது பராக்கிரமபாகு காலத்தில் சரசோதி மாலையை இயற்றிய தேனு வரப்பெருமாள் என்ற பட்டப்பெயரையுடைய போசராசனும் இவ்விடத் தவரேயாகும். தேனுவரப்பெருமாள் என்ற பெயர் தேனுவரவிலுள்ள பெருமாள்மீது இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையே எடுத்துக்காட்டுகின் றது எனலாம். குடுமிறிஸ்ஸக் கல்வெட்டிற்கூட தேவிநுவரவில் வாழ்ந்த இரு பிராமணர் கோத்திரங்களான "திஸ்கந்தத் தேனுவரப்பெருமாள்", "சரஸ்வதி தேனுவரப்பெருமாள்" ஆகியவை குறிக்கப்பட்டுள்ளமையும் ஈண்டு நினைவுகூரற்பாலது. இதனுல் நாய்மாஞக் கல்வெட்டும், மேற்கூறிய மும்மொழிக் கல்வெட்டும் இப்பகுதியில் அன்று தமிழும் இந்துமதமும் பெற்றிருந்த மேன்மைக்குச் சிறந்த உரைக்கல்லாக அமைகின்றன என லாம். இத்தலத்திற்கான தானத்தை அளித்தவனுகச் சீனத் தளபதியாகிய செங்கோ குறிக்கப்பட்டுள்ளார். ஈழத்தின்மீது அவன் மேற்கொண்ட படைஎடுப்பின்போது அவனது கவனத்தை ஈர்க்கும் வகையில் தலைசிறந்த இந்து தலமாக இது விளங்கியதாற்போலும் இதற்கான தானத்தை அவன் அளித்தான் எனலாம். (E. Z. 111 : 331 – 341)

இக்கல்வெட்டுப் பின்வருமாறு அமைந்துள்ளது.

1. சுவஸ்தி ... ... ... ... ... ...
2. இராசாதிராச - பரமேசுரன் பூர்ண - சந்திரப் பிரகாசன் சேனத்தில்
3. மஹா - இராசா - இலங்கா - ராச்சியத்தில் நாயினர் தேனவரை
4. நாயினர்க்கு - த் - திருமுன் காணிக்கை ஆக நாயினர் பிரகா
5. சங்கேட்டு தூதர் சிங்வோ உலிங் சுயிங்கையி -
6. லே வர - க் - காட்டினது யிப்பாசிதம் கேட்பது இ
7. ந் த - ப் - புவனத்தில் உண்டான பிராணிகள் எல்லாம் நாயி
8. ஞர் கிருபையினலே சுகமே பரிபாலியா நின்றது. அங்கு வரு
9. கிற(ர்) ஓங்கும் மனி தரும் தேனவரை நாயினர் திரு அரு
10. ளந் தால் ஒழித்து ஆண்டரையேயால் நின்றது இப்படியை
11. த் தேனவரை - ஆழ்வார்க்கு காணிக்கை ஆக காட்டினது
12. ஆகப்படி பொன் வெள்ளி துலுக்கி பட்டு சந்தணம்
13. எண்ணெய்க் காப்பு - ப் பல்காணிக்கைக்கு வகை பொன் ஆயிரம் க
14. ளஞ்சு வெள்ளி அஞ்சாயிரக் - களஞ்சு பல நிறத் துலுக்கி ஐம்பது பல
15. நிறப்பட்டு அம்பது பொன் எழுத்து காசதாரத் தூசஞ் சுவடு சிவ
16. ந்த சுவடு இரண்டு நிலத் தூசஞ் சுவடு இரண்டு பலஞ் செப்பு தூபம் இ
17. டு கிற - செப்புப் பாத்திரம் அஞ்சு கரிக்கால் அஞ்சு பூக்குத்துகிற செப்புக்
18. கெண்டி பத்து கரிக்கால் பத்து குத்து விளக்குச் சாவான் அஞ்சு கரி
19. க் கால் அஞ்சு மரத்தாலே பொன் பூசின தாமரைப் பூச் சுவடு ஆறு
20. அகில் வைக்கிற பொன் பூசின செப்பு அஞ்சு மெழுகு திரி சுவடு பத்து
21. எண்ணை இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு கட்டி சந்தண முறி
22. பத்து ஆக இவ்விசைப் படியாலால் உள்ளது ந ... ... நாயினர்
23. தேனவரை நாயினர்க்கு திருமுக்காணிக்கை யாகக் குடுக்கவும்.
24. யுள் லொக்கு யாண்டு ஏழா இரண்டாம் மதி ... ... ...

மேலே கூறப்பட்ட தானத்தின் அட்டவணையை நோக்கும்போது பல்வகைச் சிறப்புக்களுடன் பூசைகள் விழாக்கள் இத்தலத்தில் நடைபெற்றமை புரிகின்றது. தானப் பொருள்களாக ஆயிரங்களஞ்சு பொன், ஐயாயிரங்களஞ்சு வெள்ளி, பல்வகை நிறமுடைய ஐம்பது பட்டுத் துண்டுகள், பொன்னிற நூலால் வேயப்பட்ட நாலு சோடிக் கொடிகள், சிவப்பு நிறமுள்ள பொன்நூலால் வேயப்பட்ட இரண்டு சோடிக் கொடிகள், தூபக் காலாகப் பலம் என அழைக்கப்படும் எடையிலுள்ள ஐந்து செப்புப் பாத்திரங்கள், கரிக்கால் ஐந்து, பூக்குத்துகிற செப்புக் கெண்டி ஐந்து, கரிக்கால் பத்து, ஐந்து குத்துவிளக்குகள், கரிக்கால் ஐந்து, மரத்தில் பொன் பூசின தாமரைப் பூச்சுவடு ஆறு, அகில் வைப்பதற்குப் பொன் பூசின செப்பு ஐந்து, மெழுகுதிரி சுவடு பத்து, இரண்டாயிரத்து ஐஞ்ஞூறு கட்டி எண்ணெய், பத்துச் சந்தண முறி - ஆகியவை குறிக்கப்படுகின்றன. ஈழத்தின் வடபகுதியிற் காணப்பட்ட பொன்னலை, வல்லிபுரம் ஆகிய இடங்களிற் காணப்பட்ட விஷ்ணு ஆலயங்களின் சிறப்பைக் கூறும் தட்சிண கைலாய புராணம் இக்காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய இக்கோயில் பற்றிக் குறிப்பிடாதது புதிராகவேயுள்ளது.

நான்காவது பராக்கிரமபாகு காலத்தில் விஷ்ணு ஆலயம் ஒன்று கடுகண்ணவுக்குக் கிட்டவுள்ள அலுத்நுவரவில் அமைக்கப்பட்டது. (Parana-

vitane, S. 1960 : 263) இவற்றோடு இக்காலத்தில் விஷ்ணு ஆலயங்கள் யாப்பஹுவ, பாண்டுவாசுநுவர, குருநாகல் ஆகிய பகுதிகளிலும் காணப்பட்டன. (Navaratnam, C. S. 1964 : 70) இக்கால இலக்கியங்களை ஆராயும்போது உப்புல்வன் (மாயோன் / விஷ்ணு) சிங்கள மக்களின் தேசியக் கடவுள் என்ற நிலையில் வைத்து மதிக்கப்பட்டமை புரிகிறது: கம்ச சந்தேஸத்தின் ஐம்பதாவது பாடலின்மூலம் ஆறுவது பராக்கிரமபாகுவின் சேனாதிபதியும் பிரதம மந்திரியுமான திரிவரங்கமு என்பவன் தன் உயிரை விட மேலானதாக மூவர்மீது தனக்குள்ள விசுவாசத்தை எடுத்துக் காட்டியுள்ளமை புரிகிறது. முதலாவதாகப் புத்தபிரான்மீதும், இரண்டாவதாக உப்புல்வன்மீதும், இறுதியாகவே மன்னன்மீதும் இத்தகைய விசுவாசம் நிரைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. (Paranavitane, S. 1953 – 58 : 59) விஷ்ணு வழிபாடு மாத்திரமன்றி விஷ்ணுவின் சின்னமாகிய சக்கரமும் இக்காலத்தில் வழிபடப்பட்டதற்கான தடயங்கள் உள. தமிழகத்திலும் இத்தகைய நிலை காணப்பட்டது.[2] திஸர சந்தேஸத்தில் 50, 52ஆம் பாடல்களிலும் இத்தகைய குறிப்பு வருகிறது. (Ratnaike, C. N. R. 1945) இத்தகைய கோயிலொன்று பாணந்துறையில் அமைந்திருந்தது. இதன் பெயர் "சுதர்சன சக்கிர" கோயிலாகும். சுதர்சனன் என்றால் பார்வைக்கு இனியவன் என்பது பொருளாகும். இச்சந்தேஸ இலக்கியப் பாடல்களில் அழகும் சிறப்பும் வாய்ந்த இக்கடவுள் உலகையாண்டு உலகத்தோருக்கு நன்மையளிப்போன் என விளிக்கப்படுவதோடு, வணங்குவோருக்கு மகிழ்ச்சியும் நன்மையும் அளிப்பவன் எனவும் போற்றப்படுகிறான். (Paranavitane, S. 1960 : 766) விஷ்ணு வழிபாட்டின் செல்வாக்காற்போலும் இக்காலத்தில் இராமாயணக் கதைகள் சிங்கள மக்கள் மத்தியிற் செல்வாக்குப் பெற்றிருந்தன. மத்திய மாகாணத்திற் காணப்படும் சீதாஎலியா, ராவணாஎல்ல போன்ற இடப் பெயர்களும் இராமாயணத்தில் கூறப்படும் 'லங்கா' ஈழமே என்ற நம்பிக்கையும் இக்காலத்தில் வளர்ச்சி பெற்ற ஐதீகங்களே. இதனாற்றான் திசைக் கடவுளர்களாக சிங்கள மக்கள் வழிபாட்டில் இராமன், விபீஷணன், இலட்சுமணன் போன்றோரும் இக்காலத்தில் முக்கியம் பெறத் தொடங்கினார்கள் [3]

முருக வழிபாடு சிறப்புடன் விளங்கிய இடமே கதிர்காமம் ஆகும்: இத்தலத்தின் தொடர்ச்சியான வரலாற்றை ஏனைய இந்துத் தலங்களைப் போல் கட்டி எழுப்புவதற்குப் போதிய தடயங்கள் காணப்படாவிட்டாலும் கூடக் கிடைக்கின்ற ஒரு சில சான்றுகள் இதன் மகிமையை உணர்த்துகின்றன எனலாம். இத்தலம்பற்றிப் பரணவித்தானா, "இக்கால இலக்கியங்களிற் கதிர்காமக் கந்தன் பற்றிய குறிப்புக்கள் காணப்படாவிட்டாலும் கூடக் கி. பி. 1516இல் சீய தேசத்தில் எழுதப்பட்ட "ஜினகாலமாலினி" என்ற நூலில் கதிர்காமக் கந்தன் ஈழநாட்டின் காவல் தெய்வங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். இதனால் இக்காலத்திற் கதிர்காமம் ஈழத்திற்கு வெளியே சீயம் போன்ற நாடுகள்வரை புகழ் பரவுமளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியதெனக் கூறியுள்ளார். (Paranavitane, S. 1960 : 764) எனினும் பிற சான்றுகளை ஆராயும்போது இக்காலத்திற்கு முன்னரே இத்தலம் புகழ் பெற்றுவிட்டது என்பது தெரிகிறது: புகழேந்திப் புலவர் யாழ்ப்பாண மன்னன் (ஆரியச் சக்கரவர்த்தியின்)

உதவியோடு இக்கடவுளைத் தரிசித்ததாக நாலலர் 'சரிதை' யில் வரும் பாவொன்று உணர்த்துகின்றது. (சபாநாதன், குல. 1965 : 42) அஃதாவது,

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோதயத் தனக்குள்
வாயரைவை விட்டுவிட மாட்டாயோ – தீயரவைச்
சிறுமயிற் பெருமாடென் கதிர்காமப் பெருமாள்
ஏறுமயிற் பெருமாளே"

ஈழத்தின் புகழ் பூத்த சைவத் தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியனவற்றைத் தமிழக நாயன்மார்கள் பாடுமளவுக்கு கி. பி. 7ஆம் 8ஆம் நூற்றுண்டுகளில் இவை முக்கியத்துவம் பெற்றிருந்ததுபோல் கி. பி. 14ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் தமது "திருப்புகழில்" இத்தலம்பற்றிப் பாடியுள்ளமை இத்தலம் அக்காலத்திற் பெற்றிருந்த சிறப்பினை மேலும் எடுத்துக்காட்டுகின்றது. (திருப்புகழ் 1955 : 322 – 331). எனினும் கி. பி. 15ஆம் நூற்றுண்டில் இயற்றப்பட்டதாக நம்பப்படும் கஹகுருலு சந்தேஸத்தில் இத்தலம்பற்றி வரும் குறிப்புக்கள் மிக முக்கியமானவையாகும். ஈழத்தின் தென் பகுதியிலுள்ள திக்குவெல்லையைச் சேர்ந்த சாமனேரதேரரால் கதிர்காமக் கடவுளிடம் மஞ்சட் குருவியைத் தூதனுப்புவதாக இச்சந்தேஸம் அமைந்துள்ளது. அளவற்ற முருக பக்தரான இவர் வாத நோயினுற் பீடிக்கப்பட்டிருந்தபோது தன்னை அந்நோயிலிருந்து காப்பாற்ற வேண்டியே இத்தூதினை அனுப்பினர். எல்லாமாக 244 செய்யுட்களைக்கொண்ட இந்நூலில் கதிர்காம வர்ணனைக்கு மட்டும் 80க்கு மேற்பட்ட செய்யுட்கள் உள. அன்று கதிர்காம ஆலயம் அழகிய மதில்களாற் சூழப்பட்ட தலமாக விளங்கியதும் இந்நூலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளதோடு இதன் 198ஆம் பாடலின் பொருள் பின்வருமாறு அமைந்துள்ளது.
(ஸ்ரீ லங்கா : 1956)

"நண்ப ஈழம், வங்காளம், பர்மா, கஸ்மீரம்,
வடுகநாடு கலிங்கம், நேபாளம், கௌட
தேசம், ஆதியாம் பல நாடுகளிலிருந்து
பூசைப் பொருட்களும் காணிக்கைகளும்
கொண்டு அடிக்கடி இங்கு வரும் பக்த
கோடிகளைப் பயப்படாமல் பார்"

இந்நூலின் பிறிதோரிடத்தில் கதிர்காமக் கோயிலின் அருகே இருந்த மடம் பற்றியும் அதிற் சில பக்தர்கள் தங்கியிருந்து அடிக்கடி தமிழில் சிவபெருமானைத் துதித்த செய்தியும் கூறப்பட்டுள்ளது. அஃதாவது,

"கோயிலுக்குப் பக்கத்தில் பரமசிவனை
இடைவிடாது பயபக்தியுடன் வணங்கி
தமிழில் தோத்திரங்கள் பாடும் சாதுக்கள்
இருக்கும் மடமிருக்கிறது. அதைப்பார்த்து
விட்டுக் காலந் தாழ்த்தாது அப்பாலே போ"

என்பதாகும். அத்துடன் இக்கோயிலில் நடைபெற்ற தீர்த்தோற்சவத்தில் வள்ளியம்மை சமேதரராய் முருகன் திருவுருவம் எடுத்துக் செல்லப்பட்ட செய்தியும் கூறப்பட்டுள்ளது. தட்சிண கைலாச புராணத்தில் கதிர்காமத்

தின் பெருமை கூறப்பட்டுள்ளதோடு இத்தலத்தின் நதியாகிய மாணிக்க கங்கையும் கங்கை போன்று புண்ணிய நதியாக விளிக்கப்பட்டுள்ளதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. கதிர்காமத்தில் மட்டுமன்றித் தேவிநுவரவிற் கூட முருக ஸ்தலமொன்று இக்காலத்திற் காணப்பட்டதென்பதை இங்கு கிடைத்துள்ள தூண்களில் பொழியப்பட்டுள்ள மயில்மீது செல்லும் முருகனது உருவமும், ஆறுமுகக் கடவுளின் உருவமும் எடுத்துக் காட்டுகின்றன. (Paranavitane, S. 1953, pl, xxi)

கோட்டை அரசின் தலைநகராகிய ஜயவர்த்தனபுரக் கோட்டையின் தென் வாசற்புறத்தில் விளங்கிய முருகன் ஆலயம்பற்றிச் செலலிஹினி சந்தேஸம் 25 ஆம் பாட்டில் எடுத்துக் காட்டுகின்றது. இப்பெருங் கோயிலிலே மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்ட பொற்கம்பங்களின் நுனியிலே சேவற் கொடிகள் பறக்கும் அலங்காரங்களும், பிறவும் அமைந்ததை இது கூறுகிறது. இதனை மொழி பெயர்த்து அழகிய தமிழ்ப் பாவாக நடராசா தந்துள்ளார். (நடராசா, சோ. 1963)

> "செங்கதிர்க் கற்றை போலத் திகழ்ந்திடு
> மணியின் கூட்டம்
> தொங்கு பொற் கால்கள் தோறும் சேவலங்
> கொடிகள் தூங்க
> சங்கணும் அணிகள் கால எழுந்திடு குமரன்
> கோட்டம்
> நங்குல மன்னர் வாழு நகர்புறந்
> தென்பாற் காண்டி

இதன் பொருளாவது "எங்கள் மன்னனது நகருக்குத் தெற்கே ஞாயிற்றின் கிரணம் போல விளங்கும் மணிக் கூட்டங்களையுடைய கனகத் தப்பங்களிற் கட்டிய சேவற் கொடிகளும், வேறுபல அலங்காரங்களுமமைந்த திருத்தளியுண்டு. அது தேவசேனாதிபதியாகிய குமரக் கடவுளின் கோயிலாகும். அதனைக் காண்பாய். மேலும் கம்ச சந்தேஸத்தின் 45ஆம் பாடலிலும், பரவி சந்தேஸத்தின் 42ஆம் பாடலிலும், கோகில சந்தேஸத்தின் 132ஆம் பாடலிலும் இக்கோயில் பற்றிய விபரம் கூறப்படுகிறது. (Ratnaike, C. N. R. 1945) முதலிரு சந்தேஸ நூல்களிலும் முருகன், ஸ்கந்தன், மகாசேனன் போன்ற நாமங்களால் விளிக்கபபடுகிறான். கம்சசந்தேஸம் இவனை ஆறுமுகனாக அழைத்துக் கோயிலிலிருந்து வெளிக்கிளம்பும் இசை ஒலி பற்றியும், இத்தலத்தில் பல்வகைக் காணிக்கைப் பொருட்கள் குவிந்து கிடப்பது பற்றியும் கூறுகிறது. பரவி சந்தேஸம் முருகனின் வீரதீரச் செயல்களை எடுத்துக்கூறி, அசுரர்மீது அவன் மேற்கொண்ட வெற்றி, மேருமலையைத் துளைத்த செய்தி போன்றவற்றையும் குறிப்பிடுகிறது. ஆறாவது விஜயபாகு காலத்தில் (1513 – 21) வெளியிடப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டொன்று "அச்சுதராயர்" என்பவரால் கந்தசுவாமி கோயிலுக்கு அளிக்கப்பட்ட தூண்பற்றிய செய்தியைக் கூறுகிறது. (Pathmanathan, S 1986) இக்காலத்திற் கட்டிடக் கலைஞர்களாகத் தென்னிந்தியர்களே முக்கியம் பெற்றதை நோக்கும்போது சந்தேஸ இலக்கியங்கள் கூறும் கந்தசுவாமி கோயிலை இக்கல்வெட்டுக் குறிக்கும் "அச்சுதராயர்" கட்டியுமிருக்கலாமென எண்ணத் தூண்டுகிறது. கம்பளை ராச்சியத்திலும் பல

முருக தலங்கள் விளங்கின. இவை முறையே அம்பெக்க, கணேகொட, வல்லககொட தேவாலயங்களாகும். (Mudiyanse, N. 23 - 24) சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள மடகம கந்தசுவாமி கோயிலும் ஐந்தாவது புவனேக பாகு (கி. பி. 1372 - 1406) காலத்திற்றான் கட்டப்பட்டது. அலுத்நுவரவிலுள்ள முருகன் ஆலயமும் இக்காலத்ததே. (Navaratnam, S. 1964 : 29) இவற்றோடு ஐந்தாவது பராக்கிரமபாகுவால் (கி. பி. 1344 - 1359) சப்பிரகமுவாவில் “அம்மடு தேவாலயம்” என்ற முருகன் ஆலயம் கட்டப்பட்டு மான்யமும் இதற்கு வழங்கப்பட்டது. (Navaratnam, C. S. 1964 : 28)

விநாயக வணக்கமும் இக்காலத்தில் மேம்பட்டிருந்ததை பௌத்த வழிபாட்டிடங்களிலுள்ள விநாயகர் சிலைகள் மட்டுமன்றி விநாயகருக்கு அமைக்கப்பட்ட தனிக் கோயில்களும் எடுத்துக் காட்டுகின்றன. தேவிநுவரவிலுள்ள விநாயகர் கோயில்பற்றித் திஸர, கோகில சந்தேசங்களிற் குறிப்புகள் வருகின்றன. இதனை இராமச்சந்திரன் என்ற தமிழ் வணிகன் கட்டியிருந்தான். இதன் அருகே “வல்லே மடம்” என்ற மடமும் காணப்பட்டது. இச்செய்தியை மயூர சந்தேசம் “புகழுடைய இராமச்சந்திர வணிகத் தலைவன் பெயரால் அமைந்த கணேசர் ஆலயத்தில் அதிகாலையில் பேரிகை ஓசையாம், மேகநாதத்தைக் கேட்டுத் துயிலெழும் தமிழ்க் கவி பாடுவோராம், மயில்களின் தேவார இசையாம், மேகநாதம் (குயிலின் குரல்) கேட்கும்” எனக் கூறுகிறது. (இந்திரபாலா, கா. 1970) இக்காலத்தில் ஏனைய இந்து ஆலயங்களைப் போன்று தமிழிற் தேவார ஒலி இத் தலத்திலும் கேட்டது புலனாகிறது. இக்கோயிலின் அழிபாடுகள் சில நமக்குக் கிடைத்துள்ளன. “கோயில்வத்த” என்ற இடத்தில் சில ஆண்டுகட்டு முன்னர் ஒரு கருங்கற் பிள்ளையார் சிலையும் நந்தி சிலையும் கிடைத்துள்ளன. இதே இடத்திலுள்ள தூணில் கணேச விக்கிரகம் ஒன்றும் செதுக்கப்பட்டுக் காணப்பட்டுள்ளது. (Paranavitane, S. 1953 : xx) இதனால் இக் கோயில்வத்த என்ற இடம்தான் இராமச்சந்திரன் அமைத்த கணேசர் ஆலயம் இருந்த இடம் என்பதும் தெளிவாகிறது. களுத்துறையிலும் களு கங்கைக்கு வடக்கே ஒரு கணேசர் ஆலயம் இருந்ததைக் கோகில சந்தேசம் 100ஆவது பாடலில் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் கருநிற அகில், கர்ப்பூரம் ஆகியனவற்றின் தூபம், சுவர்ணதீபம், பெருமத்தள வாத்தியத்தின் ஓசை, சங்கின் நாதம் ஆகியவை எந்நேரமும் இடம்பெறும் வகையில் பூசை நடைபெறுவதுபற்றி மேற்படி நூல் வர்ணிக்கிறது. (இந்திரபாலா, கா. 1970) லங்காதிலக, கடலதேனியா போன்ற இக்காலத்தில் பிரசித்திபெற்ற பௌத்த ஆலயங்கள் முதலாகக் கிடைக்கும் கணேச விக்கிரகங்களும், லங்காதிலகக் கல்வெட்டு, லங்காதிலகச் செப்பேடு ஆகியனவற்றில் இங்குள்ள கணேச சிலைகள்பற்றி வரும் குறிப்புக்களும் சந்தேச இலக்கியச் செய்திகளும் இக்காலத்தைய கணேச வழிபாட்டின் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

ஈழத்தின் தென்பகுதியிலுள்ள நாகவழிபாட்டுத் தலமொன்று பற்றிப் பரவி சந்தேசம் 128ஆம் பாடலிலும், கோகில சந்தேசம் 42ஆம் பாடலிலும் குறிக்கின்றன. (Ratnaike, C. N. R. 1945) படமெடுத்து வாலைப் பல சுருள்களாகச் சுருட்டி நிற்கும் பெரிய நாகபாம்பு வடிவத்தில் இக் கோயில் அமைந்திருந்ததை இவை கூறுகின்றன. பரவி சந்தேசத்தில்

இக்கோயில் இங்குள்ள அழகிய மாதரை நாக கன்னியர் என நினைத்து அவர்களைக் காணவந்த காதலர்கள் நிறைந்து காணப்படுமிடம் என வர்ணிக்கப்பட்டுள்ளது. தேவிநுவரவிலிருந்து மாத்தறைக்குச் செல்லும் வழியிலேதான் இக்கோயில் அமைந்திருந்ததைக் கோகில சந்தேசம் கூறுகிறது. பிற விவரங்கள் கிடைக்காவிட்டாலும்கூட ஆதியில் ஈழத்தில் நிலைத்திருந்த நாக வழிபாடு தொடர்ந்தும் ஈழத்தின் வடபகுதியில் மட்டுமன்றித் தென்பகுதியிலும் காணப்பட்டதற்கான அசைவற்ற சான்றாக மேற்கூறிய தகவல் அமைந்துள்ளது எனக் கொள்ளுதல் தவறன்று.

கோட்டை அரசில் பல பத்தினி கோயில்கள் இருந்ததைச் சந்தேஸ இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய கோயில்களில் ஒன்றுதான் கோட்டையில் ஆறுவது பராக்கிரமபாகுவால் நிருமாணிக்கப்பட்ட மூன்று மாடிகளையுடைய பத்தினி கோயிலாகும். கணநாத் ஒபயசேகரா என்ற அறிஞர் கிராமிய மட்டத்தில் வழிபடப்பட்ட கண்ணகிக்கு அரச அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்ட முதற் கோயிலே ஈதென்று கூறிப் பத்தினி வழிபாடு இக்காலத்திற்றான் முன்னிலை பெற்றதென்றும் எடுத்துக் காட்டியுள்ளார். (Obeyesekera, G. 1984) கோகில சந்தேஸம் 117ஆவது செய்யுளில் இக்கோயில் முன்னர் கஜபாகுவினால் அமைக்கப்பெற்ற பத்தினி கோயில் போன்று சிறப்புடையதாய் விளங்கியது வர்ணிக்கப்படுவதை நோக்கும்போது சிலப்பதிகாரம் குறிக்கும் "கடல் சூழ் இலங்கை கஜபாகு மன்னன்"தான் ஈழத்தில் கண்ணகி வழிபாட்டைப் புகுத்தினான் என்ற மரபு சிங்கள மக்கள் மத்தியில் நன்கு வேரூன்றியிருந்தது புலனாகின்றது. எனினும் பத்தினி வழிபாடு பற்றிப் பழைய நூல்களாகிய மகாவம்சம், தீபவம்சம் ஆகியனவற்றில் எதுவித சான்றும் வராததை எடுத்துக்காட்டி இவ்வழிபாடுபற்றிப் பிற்பட்ட நூல்களாகிய இராஜாவலியா, ரத்தினாகார போன்றனவே குறிப்பிடுவதால் மலையாள வம்சத்தவர் செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்ட கம்பளை, கோட்டை அரசுகள் காலத்திற்றான் இவ்வழிபாடு கேரளத்திலிருந்து இங்கு புகுந்திருக்கலாமென்று கணநாத் ஒபயசேகரா வாதிட்டாலும்கூட ஆதியிலிருந்தே இங்கு இவ்வழிபாடு காணப்பட்டாலும் இக்காலத்திற்றான் இது செல்வாக்குள்ள வழிபாடாக எழுச்சி பெற்றது எனக் கூறுதலே பொருத்தமாகத் தோன்றுகிறது. ஈழத்தின் பழைய தெய்வங்களான உப்புல்வன், கந்தன் ஆகியோர் போன்று பத்தினியும் இக்காலத்தில் நாற்திசைக் காவற் தெய்வங்களிலொன்றாக மதிக்கப்பட்ட தன்மை இதன் பழைமைக்கும் இக்காலத்தில் இது அடைந்திருந்த பிரபல்யத்திற்கும் சிறந்த உதாரணமாகும்.

மேற்கூறிய ஆலயங்களில் முன்னீஸ்வரம் ஒன்றுதான் இன்றும் இந்துக்களின் வழிபாட்டு ஸ்தலமாக விளங்குகின்றது. இதுகூடப் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுப் பின்னர் திருப்பிக் கட்டப்பட்ட ஓர் ஆலயமாகும். பிற இந்து ஆலயங்கள் இருந்த இடத்தில் எதுவித எச்சமுமின்றி மறைந்து விட்டன. இவ்வாறு இவை அழிந்தமைக்குப் பேராசிரியர் இந்திரபாலா (1970) பின்வரும் காரணங்களை எடுத்துக்காட்டியுள்ளார். அஃதாவது "முஸ்லிம்களது வர்த்தக வளர்ச்சியும் போர்த்துக்கேயர் வருகையும் இக்கோயில்கள் அழிந்துபோவதற்கும் அவ்விடங்களில் கோயில்களை ஆதரித்து வந்த தமிழ்ச் சைவர்கள் சிங்கள பௌத்தர்களாகவும் சிங்களக் கிறிஸ்

தவர்களாகவும் படிப்படியாக மாறுவதற்கும் வழிவகுத்தன. இதனால் காலப்போக்கில் கைவிடப்பட்ட சைவக் கோயில்கள் இடிந்துவிழ அவற்றின் கற்களும் பிற பொருட்களும் தனியாராலும் பௌத்த கிறிஸ்தவ ஆலயங்களாலும் எடுக்கப்பட்டன.''

மேற்கூறிய கதி ஈழத்தின் வட, கிழக்குப் பிராந்தியங்களிலமைந்த இந்துக் கோயில்களுக்கு ஏற்படவில்லை எனலாம். இவை சுண்ணும்புக் கட்டிடங்களாகவிருந்ததால் அடிக்கடி திருப்பிக் கட்டவேண்டிய நிலை காணப்பட்டது. அத்துடன் போத்துக்கேயரின் தாக்குதலுக்கும் இவை ஆட்பட்டிருந்தாலும்கூட வடக்கே யாழ்ப்பாண இராச்சியமும் கிழக்கே திருகோணமலை, கொட்டியாரம், கட்டுக்குளம் பற்று, மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரைதீவு, கோரளைப்பற்று, நாடுகாசி முதலிய வன்னிமைகள் இருந்ததாலும் தொடர்ந்தும் தமிழ் – இந்துக் கலாச்சாரம் பேணிய மக்கட்கூட்டம் பெரும்பான்மையாக விருந்ததால் அந்நியரால் இவை தகர்த்தப்பட்டும்கூட மறுபடியும் இவை வழிபாட்டுக்குரிய தலங்களாக எழுச்சி பெற்றன எனலாம். ஈழத்தின் கிழக்குப்பகுதியிலமைந்த வன்னிமைகளுக்கும் யாழ்ப்பாண ராச்சியத்திற்குமிடையிற் கடல் வழியாகவும், தரை வழியாகவும் நெருங்கிய வாணிப கலாச்சாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. இவ்வமைப்புக்கள் அரசியலின் காரணமாகத் தனித்தும் வேறுபட்டும் காணப்பட்ட போதும் தமிழ்மொழி வழக்காலும் அதன் இலக்கியப் பாரம்பரியத்தினாலும் சைவ சமய மரபுகளின் பயனாகவும் கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான சமய கலாச்சாரப் பாரம்பரியத்தையும் ஒருமைப்பாட்டையும் பெற்றிருந்தன. (பத்மநாதன், சி. 1985 . 212) இதனால் சிங்களப் பகுதியைப் போலன்றித் தமிழ்ப் பகுதிகளில் இந்துமதம் அரசமதமாக அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பான சூழல் காணப்பட்டது எனலாம். துரதிஷ்டவசமாக இந்துக்கள் மத்தியில் வரலாற்றுணர்வு வலுப்பெற்றுக் காணப்படாததால் சிங்களப் பகுதிகளில் இந்து மதம் பற்றி அறிவதற்குக் கிடைக்கும் சான்றுகளைப் போலன்றித் தமிழ்ப் பகுதிகளுக்கான சான்றுகள் எண்ணிக்கையிற் குறைந்தே காணப்படுகின்றன எனலாம்.

யாழ்ப்பாண ராச்சியத்தை நிருவகித்தோர் ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்பெயர் பெற்றிருந்தனர். சக்கரவர்த்திகள் என்பது ஒரு பட்டப்பெயராகும். இப்பட்டத்தினையுடையோர் தமிழகத்தில் பாண்டியரது நிருவாகத்தில் பங்கு கொண்டவர்களாகக் காணப்பட்டவர்களாகும். இப்பட்டத்தினைப் பிராமணர் (ஆரியர்) சூடிய தன்மையினால் யாழ்ப்பாண ராச்சியத்தின் அரசர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். பாண்டியர் இங்கு படை எடுத்தபோது அதற்குத் தலைமை தாங்கி வந்த இவர்கள் பாண்டிய வம்சம் தமிழகத்தில் வலிகுன்ற ஈழத்தின் வடபகுதியிற் சுதந்திர ராச்சியத்தைத் தமக்கென்று அமைத்துக் கொண்டார்கள். இவர்களின் முன்னோர் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரக் கோயிலிலே தேவகன்மிகளாக இருந்தவர்கள். இவர்களைப் பாசுபத மறையனர்கள் என்று செகராசசேகரமாலை குறிக்கின்றது. (பத்மநாதன். சி. 1985) இக்கால இலக்கியங்களில் இம்மன்னர்கள் பற்றி வரும் ''சங்கச் சமூகத் தமிழாளன்'' ''சதுர் மறை பயில் வோன்'' போன்ற குறிப்புக்கள் தமிழ், இந்துமதம் ஆகியனவற்றில் இவர்களுக்கிருந்த ஈடுபாட்டினை விளக்குகின்றன. இவர்

களின் முன்னோர் இராமேஸ்வரப் பகுதியிலிருந்து இங்கு வந்ததினாலும், சேது என வழங்கிய தலங்கள் பெரும்பாலாகப் பாண்டி நாட்டில் ஆரியச் சக்கரவர்த்தியின் பதியாகிய செவ்விருக்கை நாட்டிற்கருகிற் காணப்பட்டதாலும், இவற்றையும் சேது சமுத்திரத்தையும் இவர்கள் காவல் புரிந்தமையாலும் ''சேது காவலர்'' என அழைக்கப்பட்டனர். சேதுவை ஒரு புனிதப் பொருளாகக் கருதும் மரபு இந்திய சமய இலக்கிய மரபில் நிலைபெற்று உள்ளது. இவ்வரசர்கள் இதனாற் போலும் தாம் வெளியிட்ட ஆவணங்களிலும் நாணயங்களிலும் "சேது" என்ற மங்களப் பதத்தினைப் பயன்படுத்தினர். அத்துடன் இப்பதம் இராமேஸ்வரத்தில் இவர்களுக்கிருந்த ஈடுபாட்டின் சின்னமாகவும் விளங்குகின்றது எனலாம். சேது மட்டுமன்றி இக்காலத்தில் இந்துக்களின் புனித சின்னமாகிய நந்தி அரச சின்னமாக அரச முத்திரைகள், நாணயங்கள் ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலக்கியங்கள் இக்கால மன்னரை.

> "இடபவான் கொடி எழுதிய பெருமான்"
>
> "விடை கொடியுஞ் சேதுவும் நீள்கண்டிகளென்பதும் பொறித்து மிகைத்த கோ"
>
> "அண்டிர் நிமிர்ந்தாடும் பரிவுடைத்தாய் விடை காட்டுங் கொடியினான்"

எனக் கூறுகின்றன. இதனால் அந்தண குலத்தவர்களாகிய இவர்களது அரண்மனை தமிழ் – இந்துமதம் வளர்க்குமிடமாக விளங்கியதோடு இக்காலத்தில் தமிழ் நாட்டில் அரச குலங்கள் அழிக்கப்பட இதனால் அறிஞர்கள் இவர்களைத் நாடிவர அவர்களுக்குப் புகலிடம் அளிக்குமிடமாகவும் விளங்கியது. அரண்மனையில் வேதங்கள், திருமுறைகள், ஆகமங்கள் புராணங்கள். காப்பியங்கள், இலக்கண நூல்கள். மருத்துவம், சோதிடம் ஆகியன வளர்ச்சி கண்டன. மருத்துவ நூலாகிய பரராசசேகரமும், சோதிட நூலாகிய செகராச சேகரமாலையும் 14ஆம் நூற்றுண்டில் ஆட்சி செய்த வரோதய சிங்கையாரியன் காலத்தில் எழுதப்பட்டன. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திற்றான் கிழக்கில் திருகோணமலைப் பிராந்தியம் சைவம் – தமிழ் வளர்க்கும் பிராந்தியமாக மேன்மை பெற்றது. இப்பகுதியிலமைந்த கோணேசர் ஆலயத்தின் தலபுராணங்களான கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசலபுராணம், ஸ்ரீதட்சிண கைலாய புராணம் ஆகியனவும், திருக்கரசையின் தலபுராணமாகிய திருக்கரசைப் புராணமும் இக்காலத்திற்றான் இயற்றப்பட்டதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. கைலாய மாலை யாழ்ப்பாணத்தில் கோயில் கொண்டுள்ள கைலாசநாதனின் தலபுராணமாகும். வையாபாடல் இக்காலத்திலேற்பட்ட வன்னியர் குடியேற்றம்பற்றி விபரிக்கும் நூலாகும். யாழ்ப்பாண வைபவமாலை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக்குப்பின் எழுதப்பட்டாலும் இதில்வரும் தகவல்கள் இக்காலத்தைய வரலாற்றுக்கு முக்கியம் வாய்ந்தவையாகும். இந்நிலையிற் தகவல்களை வரன்முறையிற் தொகுத்து நோக்குவது கஷ்டமாகத் தென்பட்டாலும் கூடச் சமகாலத் தென்னிந்தியப் பின்னணியிலும் ஈழம் இக்காலத்தில் தென்னிந்தியாவோடு வைத்திருந்த உறவுகளின் பின்னணியிலும் (குறிப்பாக யாழ்ப்பாண ராச்சிய மன்னர் விஜயநகரநாயக்க மன்னர் உறவுகள்) நோக்கும்போது இக்காலத்தில் இந்துமதம் பெற்

நிருந்த வளர்ச்சியினை அறியமுடிகிறது. இக்காலத்தைய தமிழகத்தில் கோயில்கள் இந்துக்களது சமூக, கலாச்சார, பொருளாதாரத் துறையில் ஒரு முக்கிய நிறுவனமாக வளர்ச்சி கண்டன. இதனால் ஈழத்திலும் தமிழரசர் காலத்தில் இவ்வாறு இவை முக்கியம் பெற்றிருந்தன எனக் கூறலாம். இதனாற்றான் யாழ்ப்பாண ராச்சிய மன்னர் தங்கள் தலை நகரான சிங்கை நகரை இந்துமுறைப்படி ஸ்தாபித்தபோது தமது வழி பாட்டிற்குரிய ஆண்டவனுக்கும் கோயிலை அமைக்கத் தவறவில்லை. இவ் வாறு சிங்கை நகராகிய நல்லூரில் இவர்கள் ஸ்தாபித்த அரண்மனைக் கோயில்கள்பற்றி யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு கூறுகிறது. (சபாநாதன் குல : 1953 : 26)

> சிங்கையாரியன் காசிநகரிலிருந்து வந்த வேதிய குலோத்துங்கனாகிய கெங்காதர ஐயர் என்னும் குருவையும் கொண்டு தனது பரிவாரங் களுடன் பிரயாணப்பட்டு, பாண்டிராசன் வழிவிட்டனுப்பிவைக்க, யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி, நல்லூர்ப்பகுதியிலே அரசிருக்கையை ஸ்தாபிக்கக் கருதி, சோதிடர்கள் தேர்ந்து சொல்லிய நன்முகூர்த்தத் தில் அஸ்திவாரம் போட்டு, நாலு மதிலும் எழுப்பி, வாசலும் ஒழுங் காய் விடுவித்து மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் பூங்காவும் பூங்காவன நடுவிலே ஸ்நான மண்டபமும், முப்படைக் கூபமும் உண்டாக்கி. அக்கடபத்தில் யமுனா நதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்து விட்டு, நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரரிருக்குமிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து, தன்னுடன் வந்த காசியிற் பிரமகுல திலகரான கெங்காதர ஐயரும் அன்னபூரணி அம் பாள் என்னும் அவர் பத்தினியும் வாசஞ் செய்வதற்கு அக்கிரகார மும் உண்டாக்கிக் கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளை யார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோயிலையும், வடதிசைக்குச் சட்டநாதர் கோயில், தையல்நாயகி அம்மன் கோயில், சாலை விநாயகர் கோயிலையும் கட்டுவித்துத் திலகவதியார் என்னும் பத்தினியாருடனே கிருகப்பிரவேசஞ் செய்து வாழ்ந்திருந்தான்".

மேற்கூறிய நாற்றிசைக்கும் பாதுகாப்பாக நாலுகோயில்களை வடக்கே சட்டநாதரும், தெற்கே கைலாசநாதரும், கிழக்கே வெயிலுவந்த பிள்ளையார் கோயிலும் மேற்கே வீரகாளியம்மன் கோயிலும் அமைக்கும் மரபு இக் காலத்தில் மட்டுமன்றி மிக ஆதிகாலந்தொட்டே இங்கு நிலைத்திருந்ததை யாழ்ப்பாண வைபவமாலை விஜயன் பற்றிக் கூறும் நான்கு திசைகளிலும் அவன் எழுப்பிய நான்கு சிவாலயங்கள் பற்றிய செய்தி உறுதிப்படுத்து கின்றது. இத்தகைய மரபு சிங்கள ராச்சியத்தில் ஆதிகாலத்தில் மட்டுமன்றி இக்காலத்திலும் நிலைத்திருந்ததைக் கோட்டை இராச்சியத்தின் தலைநகரான ஸ்ரீஜெயவர்த்தனபுரக்கோட்டையை அழகக்கோனார் அமைத்தபோது நாற் திசைப் பாதுகாப்பாக நான்கு ஆலயங்களை அமைத்த செய்தியும் உறுதிப் படுத்துகின்றது. ஆனால் விஜயன் கதையில் சிவாலயங்களும், ஆரியச் சக்கர வர்த்தியின் கதையில் சிவாலயம், அம்மன், பிள்ளையார் ஆலயங்களும் முக் கியம்பெற, கோட்டை ராச்சியத்தில் விஷ்ணு, ஸ்கந்தன், விபீஷணன், லட்சுமணன் ஆகியோருக்கு அமைக்கப்பட்ட ஆலயங்கள் முக்கியம் பெற்ற செய்தி வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு கடவுளரின் செல்வாக்கு

மேலோங்கிக் காணப்பட்டதை எடுத்துரைக்கும் அதே நேரத்தில் நான்கு திசைக்கும் காவலர்களாக நான்கு இந்துக் கடவுளரை வணங்கும் மரபு இக்காலத்தில் சிங்கள – தமிழ் மக்களிடையே நிலைத்திருந்ததை மட்டுமன்றி நாற்திசைக் கடவுளர் மரபு ஈழம் முழுவதிலும் செல்வாக்குள்ள ஒன்றாக இக்காலத்தில் வளர்ச்சி பெற்றதையும் உணர்த்துகின்றது.

மேற்கூறிய செய்திகளோடு இக்காலத்தில் அரச குடும்பத்தினரின் கோயிலாக விளங்கிய கைலாசநாதர் கோயில் பற்றி யாழ்ப்பாண வைபவ மாலை கூறும் செய்தி மேலும் ஆராயத்பாலது. அஃதாவது (சபாநாதன் குல. 1953)

> ''ஒரு நாளிரவிற் சப்ர மஞ்சத்திலே அரசன் சாய்ந்து நித்திரை செய்திருக்கையில், பரமேஜவர மூர்த்தி பாருவதி தேவியுடன் கனவிலே தரிசனையாகி உத்தரவு கொடுக்க பிரகாசமாகவே மகா சந்தோஷத்துடனே கைலைவிநாயகர் கோயிலயலிலே கயிலாயநாயகர் கோயிலையும் கைலை நாயகியம்மன் கோயிலையும் வெற்றிலும் விசேஷித்தவைகளாகக் கட்டுவித்து, மூன்றுசபைகள், பரிவார தேவர்கள் இருப்பிடம், உக்கிரணசாலை, யாகசாலை, அக்கிரகாரம், தேரோடும் வீதி, மடம், அன்ன சத்திரம் இவைகளையெல்லாம் இயற்றுவித்து, பிரமாணத்திற்கிணங்கச் சுற்றுமதிலும் கோபுரமும் எழுப்பிக் கேதாரத்திலே மன்மதன் பூசித்து வந்த ஆதார லிங்கத்தையும் அழைப்பித்துப் பிரதிஷ்டை செய்வித்துப் பாண்டியராசன் கீழ் முதற் பாளையத் தலைவனாயிருந்து இராமநாதபுரத்தை ஆண்ட சேநுபதிக்குப் பாசுரமனுப்பி அழைப்பித்து, கெங்காதரய்யர் என்னும் காசிப்பிராமணனையே பூசை நடத்தும்படி வைத்து அல்லும் பகலும் கைலாயநாதர் திருவடிகளைத் தியானித்துக் கொண்டு நல்லூர் கயிலையில்[3] நெடுங்காலமிருந்து அரசாண்ட பின்...........''
> இக்கோயில் பற்றி மேலும் பல விபரங்களைக் கைலாயமாலை தருகிறது.[4]

இக்கோயிலின் கும்பாபிஷேக வைபவம் பற்றிக் கைலாயமாலை மிக மிக விபரமாகக் கூறுகிறது. இது அக்காலத்தில் நடைமுறையிலிருந்த இந்துக் கோயில் கும்பாபிஷேக வழக்குகளை எடுத்துக் காட்டுவதால் இது பற்றிச் சற்று விபரமாக ஆராய்ந்தால் பொருத்தமுடையதாகும். (ஜம்புலிங்கம் பிள்ளை. செ. வே. 1939)

இவ்வைபவத்திற்காகக் கோயிலின் உள்ளும் புறமும் அமைக்கப்பட்ட பந்தலின் பந்தற்கால்கள் சந்தனக் கட்டைகளால் அமைக்கப்பட்டு இதன் மேல் சலாகைகள் நிரையாகப் பரப்பப்பட இது அழகிய பொன்னிறமான பந்தல் போன்றுகாட்சி தந்தது. புதிய சேலைகளால் இப்பந்தலுக்கு வெள்ளையும் கட்டப்படடு பச்சை, கறுப்பு, சிவப்பு நிறச் சேலைகளால் வரிசையாயும் இது அலங்கரிக்கப்பட்டதோடு அசைந்தாடும் கொடிகளும் இதிற் கட்டப்பட்டன. பந்தலில் பவளங்களிலான சரங்களும் தொங்க விடப்பட்டன. பின்னர் இதில் பொற்குவியலைப் போன்று காட்சி தரும் வண்ணம் தருப்பைப் புல்லும் பரப்பப்பட்டது. மேலும் பாக்குமரக்குலை, பழுத்த வாழைக்குலை, தாளைப்பழம் ஆகியனவும் கட்டப்பட்டுப் பந்தல் அலங்கரிக்கப்பட்டது. மேலும் கும்பம் வைத்து ஆகுதி செய்வதற்கான

இடம் வளைத்த வில்லைப்போன்ற வடிவில் அந்தணரால் அமைக்கப்பட்டது. இதில் வைக்கப்பட்ட கும்பமும் மிக அழகிய சீலையினால் சுற்றிக் கட்டப் பட்டுமிருந்தது. கோயிலின் இருமருங்கிலுமுள்ள வீதிகளும் பச்சைக்கமுகு, பல்வேறு எண்ணிக்கையிலான வாழைமரங்கள், கரும்பு, மணிமாலைகள், தோரணங்கள் ஆகியனவற்றால் பொன்னிறமான நகரைப்போல் காட்சி தரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டன. மதில் சூழ்ந்த ஆலயமும் வாச மான சந்தனத்தால் மெழுகப்பட்டது. இத்துடன் மிக ஒளிவீசும் மாணிக் கக்கல், நீலம், வைடூரியம், வைரம் ஆகியன பதிக்கப்பட்ட சிங்காசனமும் உருவாக்கப்பட்டது. இதன் பின்னர் குற்றமற்ற மறையோரான கங்கா தரக் குருக்கள் நீராடிய பின்னர் கையிற் காப்புத் தரித்து, ஓமாக்கினியை வளர்ப்பதற்குச் சிறந்த இடபவடிவிலான உருவத்தை வரைந்து அதன்மேல் எட்டுத் திசைகளிலிருந்தும் கொண்டுவரப்பட்ட சுத்தமான அரிசியைத் தாமரைப்பூ வடிவில் பரப்பி, ஐந்து வண்ணப் பொடியினால் இதனை அலங் கரித்துப் பச்சை நிறத்தருப்பையை இதன்மேல் பரப்பி அதன்மேற் பொற் குடத்தையும் வைத்து மிக அழகிய மலர்களைத் தூவிக் கைகூப்பித் தொழு தார். இக்குடத்திற்குச் சிவந்த பொன் பட்டுச் சாத்தி முளைப்பாலிகை யும் இதன்மேற் பரப்பப்பட்டது. கங்காதரக் குருக்கள் பின்னர் சிவபெரு மான் அருளிய ஆகம மந்திரங்களை ஆவாகனஞ் செய்து பூசித்தார். பின் னர் சந்திரசேகரரான சிவனின் அருகில் உமையின் உருவமும் வைக்கப் பட்டு இதற்குப் பொன்னிறப் பட்டாடைகள், ஆபரணங்கள் சாத்தப்பட் டன. தூபமிடப்பட்ட பின்னர் இவ்வுருவங்களின் மலர்ப்பாதங்களில் சண் பகம், அலரி, தாமரை, திருக்கொன்றை ஆகியனவற்றின் மலர்கள் வேத மந்திரங்களை உச்சாடனஞ்செய்து சாத்தப்பட்டன. ஆண்டவனுக்கு நிவே தனப் பொருளாக மடையாக பல்வேறு வகையான அன்ன வகைகள் சம்பா அரிசியிற் சமைக்கப்பட்டு மேருமலைபோல் குவிக்கவும்பட்டன. இதனுடன் மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகியனவும் மலைபோல் குவிக்கப் பட்டன. மேலும் செவ்விளநீர், தேன், நெய், பலகாரவகை, பால் ஆகி யனவும் படைக்கப்பட்டு வைச்சிரமணி பதிக்கப்பெற்ற அழகிய காளாஞ்சி யில் வெற்றிலை பாக்கும் வைக்கப்பட்டன. இவ்வாறு கிரிகைகள் நடை பெற்றபோது முத்துமாலைகள் தூங்கும் வெண்கொற்றக்குடை நிழல் கொடுத்தது. ஆலவட்டமும் பிடிக்கப்பட்டது. மங்கள வாத்தியங்களான சல்லரி, பேரி, தவில், முரசு, தண்ணுமை போன்றவை ஆர்த்தன. மந்திரங் கள் ஒலித்தன. வனிதையர் பல்லாண்டுகூறி நின்றனர். அழகிய சாமரை கள் இரட்டின. தேவரடியாரான பெண்கள் அங்கங்களை அசைத்து நடன மாடினர். பதினாறு விதமான பூசா உபசாரங்கள் முடிந்த பின்னர் திருமஞ் சனக்குடத்தைக் கையிலேந்தி (கங்காதரக் குருக்கள்) கைலாசநாதராகிய சிவனின் ஒளிவீசும் அழகிய திருமேனியில் அபிஷேகஞ் செய்தார். இந் நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர் அலங்கார மூர்த்தியாய்க் கைலாசநாதர் தேரில் இவர்ந்து வீதி வலம் வந்தது விரிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த முதலாவது ராஜேந்திரன் காலக் கல்வெட்டில் நல்லூர் பற்றி வரும் (சிற்றம்பலம், சி. க. 1984) குறிப்பு இக்காலத்தில் இங்கு ஒரு இந்துக்கோயில் இருந்ததை எடுத்துக் காட்டினாலும்கூடத் திடமாக இது பிற்கால நல்லூர் ஆலயமே என்று கூறுவது இலகன்று; எனினும் நாட்டின் ஏனைய பகுதிகளைப்போல் இங்கும்

கும் முருக வழிபாடு தளைத்திருந்தது என ஊகிப்பதிலும் தவறில்லை. ஆரியச் சக்கரவர்த்தியின் குடும்ப வழிபாட்டுத் ஸ்தலமாக நல்லூரே விளங்கியதென்றும் இதனருகிற்றான் இதன் தீர்த்தக் கேணியான யமுனாரி அமைக்கப்பட்டதென்றும் இக்கோயிலை மையமாக வைத்தே நாற்திசைக் கோயில்களான வடதிசையிற் சட்டநாதர் கோயிலும், தென்திசையிற் கைலாசநாதர் கோயிலும் கீழ்திசையில் வெயிலுவந்த பிள்ளையார் கோயிலும், மேற்திசையில் வீரமாகாளியம்மன் கோயிலும் அமைக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாண அரசின் ஆரம்ப காலத்திலே யாழ்ப்பாண வைபவமாலை கூறுவதுபோல் இக்கோயில் இங்கு காணப்பட்டது என்று கருதலாம். இக்கூற்றினைச் சங்கிலித்தோப்பு, பண்டாரமாளிகை ஆகிய இடப்பெயர்கள் உறுதி செய்கின்றன. போத்துக்கேயர் ஆவணங்களும் நல்லூரிலுள்ள பெரிய கோயில் என்று இதனை அழைத்துள்ளன. இன்று சங்கிலித்தோப்பிலுள்ள புரட்டஸ்தாந்த ஆலயமிருக்கும் இடமே பண்டைய நல்லூர்க் கோயிலாகும். இந்நல்லூர்க் கோயில் பற்றித் தட்சிண கைலாச புராணம் ஒன்றும் கூறாதிருப்பதும் புதிராகவே இருக்கிறது. சட்டநாதர் கோயில் பற்றியே இது குறிப்பிடுகிறது. எனினும் கதிர்காமம் பற்றித் திருப்புகழில் வரும் பாடல்களை உற்றுநோக்கும் போது முருக வழிபாடு இக்காலத்தில் ஈழம் முழுவதும் மேலோங்கியிருந்தது எனக் கொள்ளுதல் தவறன்று. யர்ழ்ப்பாண வைபவமாலை இக்கோயில் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது. (சபாநாதன். குல : 1959 : 31 – 32)

> ''சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கையேற்று நடத்தி வருகையிற் புறமதில் வேலையையும் கந்தசுவாமி கோயிற் திருப்பணியையுஞ் சாலி வாகன சகாப்தம் எண்ணூற்றெழுபதாம் வருடத்திலே புவனேகபாகு என்னும் மந்திரி நிறைவேற்றி முடித்தான்''.

இத்தகைய செய்தியை கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுள் கீழ்க்கண்டவாறு கூறுகிறது.

> ''இலக்கிய சகாப்த மெண்ணூற்றெழுபதா மாண்டதெல்லை
> யலர் பொலி மார்பனும் புவனேகபாகு
> நலமிகும் யாழ்ப்பாண நகரிகட்டு வித்து நல்லைக்
> குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித்தானே''

இங்கே குறிப்பிடப்படும் ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சத்தில் முதல்வனான சிங்கையாரியனின் அமைச்சனின் பெயர் மாவிட்டபுரத்தோடும் இணைத்துக் கூறப்படுவதால் இக்கோயில்கூட இம்மன்னன் ஆதரவு பெற்றிருந்தது என்பதும் தெளிவு. பிற் ஆதாரங்களை நோக்கும்போது புவனேகபாகு என்ற பெயருடைய ஆறாவது பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் பிள்ளையாகிய செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கி. பி. 1450 – 67 வரை ஆண்டு பின்னர் சோட்டை மன்னனாக ஆறாவது புவனேகபாகு என்ற பெயருடன் அரசுகட்டிலேறிய இன்னொருவனும் இக்கோயிலுடன் தொடர்புடையவனாகக் காணப்படுகிறான். இச்செய்தியை நல்லூர்க் கோயிற் பட்டயம் பின்வருமாறு உரைக்கிறது.

''சிறீமான் மஹாராஜாதிராஜ அகண்ட பூமண்டல
பிரதிநிகந்தர விச்ருந்த கீர்த்தி
சிறீ கஜவல்லி மகாவல்லி சமூமத சுப்பிர ஹ்மன்ய
பாதார விந்த ஜதாதிரூட சோடச
மஹாதான சூர்யகுல வம்சோதிபவ ஸ்ரீசங்க
போதி புவனேகபாகு

(Rasanayagam, S. 1926 : 332)

இதன் பொருளாவது ''திருவருட் சக்திகளான தெய்வயானை அம்மனும் வள்ளியம்மனும் ஒருங்கே பொருந்த வீற்றிருக்கும் சுப்பிரமணியப் பெருமானின் திருவடித்தாமரைகளை வணங்குபவனும், மன்னர்களுள் மன்னனும், செல்வங்களையுடையவனும் மிகப் பரந்த பூமியடங்கலுமுள்ள திசைகள் எல்லாவற்றிலும் பரவிய புகழையுடையவனும், மக்களுடைய தலைவனும், பதினாறு பெரிய தானங்களைச் செய்பவனும், சூர்ய குலத்திலே தோன்றியவனும், சிறீசங்கபோதி என்னும் விருதுப் பெயர் தரித்தவனுமாகிய புவனேகபாகு. (சிவசாமி, வி. 1972)

ஆறுவது பராக்கிரமபாகுவின் வளர்ப்புப் பிள்ளையாகிய செண்பகப் பெருமாள் (ஆறுவது புவனேகபாகு) ஸ்ரீசங்கபோதி என்ற பட்டத்தினைச் சூடியிருந்ததாலும், அவனது சாசனங்கள் அவனைச் சூர்ய குலத்தவனென்றும், மகாராஜாதிராஜ எனவும் ஸ்ரீசங்கபோதி எனவும் அழைப்பதினாலும் இவன்தான் நல்லூர்க் கோயிலைக் கட்டியவன் எனக் கூறி இம்மன்னனைத்தான் தவறுதலாக யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலை ஆகியன சிங்கையாரியனின் மந்திரியாகக் கொண்டனர் என எடுத்துக் காட்டி இதற்கு ஆதாரமாகக் கைலாயமாலையில் வரும் ஒரு தனிச் செய்யுளையும் கூறுவர். அஃதாவது (முத்துத்தம்பிப்பிள்ளை : 1933)

''இலக்கிய சகாப்தமெண்ணூற்றெழுபத்து நான்கு
லலர் திரி சங்கபோதியாம் புவனேகபாகு நல்லூர்
நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து நல்லூர்
நலமுறும் கந்தனுர்க்கு கோயிலொன்றமைப்பித் தானே''

மேலும் புவனேகபாகு என்றபெயர் எழுதப்பட்ட ஒரு பழைய பதக்கம் இன்றும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலுள்ளதென்றும் தமக்குப் பிதிராச்சிதமாகக் கிடைத்த இப்பொருளைப் பூதஞ்சியார் என்பவர் (பூதத் தம்பி என்ற தமிழ் மந்திரியின் மகள்) நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குக் கொடுத்தார் எனவும் முத்துத்தம்பிப்பிள்ளை கூறுகிறார்.

யாழ்ப்பாண வைபவமாலையில் தெட்டத்தெளிவாக ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சத்தின் முதல் மன்னனாகிய சிங்கையாரியன் குறிக்கப் படுவதை நோக்கும்போதும், இதற்கு முன்பும் இப்பகுதியில் ஓர் இந்து ஆலயம் இருந்ததற்கான தடயம் காணப்படுவதும், முதலரசன் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டதென்று கூறுவதே பொருத்தமாகத் தோன்றுகிறது. பின்னர் புவனேகபாகு மன்னனும் நல்லூரை ஆண்டபோது இக் கோயிலைப் புதுப்பித்துக் கட்டியிருக்கலாம். இந்த இரு தனித்தனியான மரபுகளையும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் கலந்துதான்

மேற்கூறிய கருத்தினைக் கூறியிருக்கலாம். இந்துமரபில் வரலாற்றைக் காலவரன் முறையில் நிரைப்படுத்திக் கூறும் மரபு நன்கு வேரூன்றிக் காணப்படாததாலும் நல்லூர்க் கோயிலுடன் தொடர்புடைய வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த இருவரை ஒருவருக்கொருவர் தொடர்புடையவராகக் கூறும் நிலை ஏற்பட்டிருக்கலாம். இதற்கு ஆதாரமாகக் கைலாயமாலையில் வரும் தனிச் செய்யுளில் இடம்பெறும் ''இலக்கிய சகாப்தமெண்ணூற் றெழுபதாம் ஆண்டினெல்லை'' என்ற குறிப்பை எடுத்துக்காட்டலாம். இதனைச் சகவருடம் எண்ணூற்றெழுபதாக எடுத்துக் கொண்டு கிறிஸ்தவ சகாப்தத்திற்கு இதனை மாற்ற 78 ஆண்டுகளைச் சேர்த்தால் கி. பி. 948 என வரும். இக்காலத்தில் இக்கோயில் இருந்ததற்குச் சான்றில்லை. மாறாக ஞானப்பிரகாசர் கூறுவதுபோல் இவ்வெண்ணூற்றெழுபதில் வரும் எண் என்ற பதத்தைப் பேரெண்ணாக்கி இது 1000த்தைக் குறிக்குமெனக் கொண்டு அத்துடன் நூற்றெழுபதையும் கூட்டிப் பின்னர், சக வருடத்தைக் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு மாற்றுவதற்கு 78ஐயும் சேர்த்தால் கி. பி. 1248 ஆகும். (ஞானப்பிரகாசர், 1928 : 66) இது ஆரியச் சக்கரவர்த்தி களின் அரசின் தோற்ற காலத்தைக் குறிப்பதால் இவ்வம்ச முதல் மன்னனாகிய சிங்கையாரியனாலே இது முதலில் கட்டப்பட்டதெனலாம். பின்னர்தான் புவனேகபாகு இதனைத் திருத்திக் கட்டியிருக்கலாம். அல்லது இது பழுதடையப் புதிய ஆலயமொன்றை இதனிடத்தில் கட்டியிருக் கலாம். இந்த மயக்கத்தினால் சிலர் நல்லூர்க் கோயிலை ஆறாவது புவனேகபாகு தான் கட்டியதை யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்கள் தவறுதலாக முதல் சிங்கையாரியன் மந்திரியாக சிவனை இணைத்துக் கூறுகின்றன என வாதிடுகின்றனர். முதற் சிங்கையாரியனால் இக்கோயில் கட்டப்பட்டது. பின்னர் இது பாழடைந்திருக்கலாம். காரணம் அக்காலத் தில் கோயில்கள் கட்டுவதற்கு உபயோகிக்கப்பட்ட சுண்ணாம்பு போன்ற கட்டிடப் பொருட்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மையின்றிக் காணப்பட்டமையாகும். பின்னர் ஆறாவது புவனேகபாகு பாழடைந்த இதனை இடித்து இவ்விடத்தில் ஒரு புதுக் கோயிலையும்கூடக் கட்டியிருக்க லாம். நல்லூர்க் கோயிற் கட்டியம் கூறுவது இவனாகத்தான் இருத்தல் வேண்டும். சிங்கையாரியன் காலத்தில் மாவிட்டபுரக் கந்தசுவாமி கோயி லிருந்ததற்கான சான்றினை யாழ்ப்பாண வைபவமாலை தருவதால் இம் முருகதலமும் நல்லூர் முருகதலம் போன்று இக்காலத்திற் சிறப்புற்றிருக்க லாம். மாவிட்டபுரப் பகுதி பண்டுதொட்டுச் சிவமுருக வழிபாட்டில் மேம்பட்டிருந்ததை யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பதுபோல் இக் காலத்திலும் அது சிறந்திருந்ததைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது. (சபா நாதன், குல. 1953 : 6)

> ''சிங்கையாரிய மகாராசனும் புவனேகபாகு மந்திரியும்
> கீரிமலைக்குப் போய் தீர்த்தமாடி சிவாலய தரிசனமும்
> செய்து கொண்டு அவ்வாலய விசாரணையை அரசாட்சி
> விசாரணைக்குள்ளாக்கிக் கொண்டு கந்தசுவாமி கோயிலில்
> வந்து (மாவிட்டபுரம்) பெரிய மனத்துளாரின் குமாரர்
> சிதம்பர தீட்சிதரின் மகனார் சின்ன மனத்துளார் விருந்திட
> உண்டு இளைப்பாறினார்கள்.''

இத்துடன் இக்காலத்தில் பிரபல்யம் வாய்ந்த விஷ்ணு ஆலயங்களாகப் பொன்னாலை, வல்லிபுரம் ஆகிய இடங்களிலிருந்த விஷ்ணு கோயில்கள் பற்றித் தட்சிணகைலாச புராணம் மட்டுமன்றிக் கோகில சந்தேசமும் குறிப்பிடுகின்றது. (Paranavitane, S. 1960 : 766) யாழ்ப்பாணத்திலுள்ள பெருமாள் (விஷ்ணு) கோயிலும் இக்காலத்தில் இங்கு வாழ்ந்த வைஷ்ணவ நெசவாளர்களினால் அமைக்கப்பெற்றது. (Navaratnam, C. S. 1964 : 71) புத்தூரிலும் விஷ்ணு சிலை ஒன்று கிறிஸ்தவ தேவாலயத்திற்குக் கிட்டக் கண்டெடுக்கப்பட்டமை இங்கும் ஒரு விஷ்ணு ஆலயம் இருந்திருக்கலாமென்பதை எடுத்துக்காட்டுகின்றது. (Navaratnam, C. S. 1964 : 70) புத்தூரில் (நவக்கிரியில்) ஒரு சிவன் கோயில் இருந்ததாகவும் தட்சிண கைலாச புராணம் எடுத்துக் கூறுகிறது. நாகபூஷணி அம்மன் கோயிலைப் போத்துக்கேயர் இடித்ததாக நிலவும் ஐதிகம் இக்காலத்தில் இதுவும் செல்வாக்குள்ள தேவி – வழிபாட்டிடமாக விளங்கியதை எடுத்துக்காட்டுகிறது. நாகர்கோயிலும் இக்காலத்திற் சிறப்புற்றிருந்திருக்கலாம். தென்முனையில் நாகர் கோயிலொன்று இருந்ததுபோல் வடக்கேயும் இத்தகைய வழிபாடு சிறந்தோங்கியது. பளையிலும் ஒரு வைரவ ஆலயம் சிறப்புற்றிருந்ததை தட்சிணகைலாச புராணம் எடுத்தியம்புகிறது. சாவகச்சேரியிலுள்ள வாரியப்பர் கோயில், இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில், நீர்வேலி அரசசேகரிப் பிள்ளையார் கோயில், சுழிபுரம் பறாளைவிநாயகர் கோயில், மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் ஆகியனவும் இக்காலத்தில் எழுச்சி பெற்ற கோயில்களாகும். (Navaratnam, C. S. 1964 . 71 – 73) துரதிஷ்டவசமாக இவைபற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. இவற்றோடு கிராமிய மட்டத்திலும் மாடன், பூதராயர், வைரவர் போன்ற தெய்வங்களும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

வன்னி நாட்டின் வழிபாட்டு முறைகள்பற்றி வையாபாடல் எடுத்துரைக்கின்றது. (நடராசா, க. செ. 1980) செட்டிக்குளச் சந்திரசேகரீஸ்வரர் ஆலயம், ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், உருத்திரபுரம் சிவன் கோயில், வன்னிக்குளச் சிவன் கோயில் ஆகியனவும் இக்காலத்திற் சிறப்புப்பெற்றிருந்த சிவஸ்தலங்களாகும். வவுனிக்குளத்திற் கோயிற்காடு என்ற இடத்தில் இந்து ஆலய அழிபாட்டுடன் விஷ்ணு சிலையும் பிற இந்து விக்கிரகங்களும் கண்டிபிடிக்கப்பட்டுள்ளன. (Navaratnam, C. S. 1964 : 70) இக்காலத்திற் திருக்கேதீஸ்வரம்பற்றிக் கோகில சந்தேசம் குறிக்கவில்லை. திருக்கேதீஸ்வர மாந்தைப் பட்டினத்தை "மாவட்டு பட்டன" என வர்ணிக்கும் இந்நூல் எவ்வாறு இக்கோயிலைத் தவிர்த்து இப்பகுதிக்கு வடக்கே அமைந்திருந்த ஐயனார் கோயில்பற்றி மட்டும் கூறுகிறது என்பது ஆச்சரியத்திற்குரியது. எனினும் தட்சிணகைலாச புராணம் திருக்கேதீஸ்வரம்பற்றிக் கூறத் தவறவில்லை. வையாபாடல் மேலும் இப்பகுதித் தெய்வங்களாகக் காளி, ஐயனார், சடைமுனி, காட்டுவிநாயகர், வீரபத்திரர், ஐங்கரன், குமரேசன், மூத்தநயினார், சித்திர வேலாயுதர் ஆகியனவற்றைக் குறிக்கின்றது. (நடராசா. க. செ. 19 80 : 25)

திருக்கேதீஸ்வரம் பற்றிய விவரங்கள் நமக்குக் கிட்டாவிட்டாலும் கூடத் திருக்கோணேஸ்வரத்தின் மகிமை பற்றி அறிவதற்குப் பல தடயங்கள்

ஊள. கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியாரும் அருணகிரிநாதரும் இக்கோயில்பற்றிக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நினைவு கூரற்பாலது. (Navaratnam, C. S. 1968) உமாபதி சிவாச்சாரியார்.

''மன்னு திருக்கோணமாமலையின் மாதுமைசேர்
பொன்னே கோணேசப் புராதனே''

என அழைக்க, அருணகிரிநாதரும்,

''நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோணமலை தலத்தாறு கோபுரம்''

எனக் குறிப்பிட்டுள்ளார். தேவிநுவரவில் கல்வி கேள்விகளில் புகழ்பூத்த வைஷ்வ பிராமணர்கள் வாழ்ந்ததுபோல் இங்கும் நான்மறைகளை நன்கறிந்த அந்தணப் பெருமக்கள் வாழ்ந்து கோணநாதருக்குப் பூசை இயற்றியதை அருணகிரிநாதர் குறிப்பு எடுத்துக்காட்டுகின்றது. இதுமட்டுமன்றி ஆறு கோபுரங்களினூற் சூழப்பட்ட இக்கோயில் இருந்த நிலையைப் பாண்டியர் கயல்மீன் திருகோணமலையிற் பொறிக்கப்பட்ட சான்றும், கடலாய்வின்போது வெளிக்கொணரப்பட்ட பாண்டிய பாணியிலமைந்த கோயிற் றூண்களும் பாண்டியர் பாணியில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாமென்பதினை உணர்த்துகின்றன. பின்னர் இதற்குப் பாண்டியர் மானியமும் வழங்கினர் எனலாம். (இந்திரபாலா, கா. 1970) கி. பி. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பௌத்த புனித தலங்களைக் கூறும் ''நம்பொத்த'' என்ற சிங்கள நூல் ஈழத்தின் வடபகுதியைத் தெமள பட்டினம் எனக் குறிப்பதோடு இதனுள் அடங்கிய இடங்களிலொன்றாகத் திருகோணமலையையும் குறிக்கிறது. கோணேசர் கல்வெட்டு இத்தலத்துடன் தொடர்புடையவர்களாகப் புவனேககஜபாகு மன்னன், ஈழத்தின் வடபகுதியை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் ஆகியோரைக் குறிக்கிறது. (வைத்தியலிங்க தேசிகர், பு. பொ. 1916 : உக) இதுபற்றிக் குணசிங்கம் (1973 : 114) கூறுகையில் கோணேஸ்வரக் கோவிலுடன் தொடர்புடையதாக நாம் அறிகின்ற அடுத்த தகவல் ''புவனேககஜபாகு'' என்ற ஒருவன் இக்கோயிலுக்கு அளித்த தானம்பற்றிக் கோணேசர் கல்வெட்டுத் தரும் தகவலாகும். இருந்தும் இத்தகவல் தெளிவில்லாதிருப்பதனாலும் பிற ஆதாரங்களில் இது பற்றிய தகவல் எதுவும் இல்லாமையினாலும் இதனை இப்போதைய நிலையில் விளங்கிக்கொள்வது கஷ்டமாகும். இதே கல்வெட்டு ஆரியச் சக்கரவர்த்திகள் கோணேஸ்வரக் கோயிலுக்கு அளித்த ஆதரவு பற்றியும் குறிப்பிடுகின்றது. இச்செய்தியினைப்பற்றியும் வேறு ஆதாரங்களிலிருந்து எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதுமாத்திரமன்றிக் கோணேசர் கல்வெட்டிலும் இச்செய்தி விளக்கமாகக் கொடுக்கப்படவில்லை. இதனால் இச்செய்தி எவ்வளவுக்கு நம்பகரமானது என்பது பிரச்சனைக்குரியதாகும்''

கோணேசர் கல்வெட்டுப் புவனேககஜவாகுபற்றிப் பின்வருமாறு கூறுகிறது. (வைத்தியலிங்க தேசிகர், பு. பொ. 1916 : உக)

''திரிகைலைநாதர் பெருமை கேட்டு வந்து, பாவ
நாசசுனையிற்றீர்த்தமும் படிந்து சிவாலயத்தைப்

பிரதக்ஷிணம் பண்ணிக் கோணநாயகர் திருப்பாத தரிசனமுங்கண்டு, தங்கக் கட்டியாற்றுலா வாரமுமேற்றி, மாணிக்கம் பதித்த பூரண சந்திரப் பதக்கமுஞ் சாத்துவித்து கஅ00 பொன்கொடுத்து அபிஷேகமும் பண்ணுவித்து சிறிது திரவியமும் அறை முதலிருப்பாக வைத்து இருபாகை முதன்மைக்குங் கோயிற்றெழும்பு செய்பவர்களுக்கும் மனம் பூரணமாக வெகு நகைகளுங் கொடுத்துக் கருகுலக் கணக்கிலும் பதிப்பித்து தென்னை, புன்னை, மா, இலுப்பை பூகம் ஆயிரமாயிரம் நிரைத்த பூங்காவனங்களுமுண்டு பண்ணிக் கோண நாயகருக்குத் திட்டம் பண்ணிக் கொடுத்துப் போட்டுத் தன்நகரத்துக்குப் போய் நெடுநாளிராச்சியம் பண்ணியிருக்கிற நாளையில் ஆதியாகிய கோணை நாயகரருளினால் மனுநேய கயவாகென்றொரு புத்திரன் பிறப்பான். அந்தப் பிள்ளையிருக்கப் புவனேககஜபாகு சிவபதஞ் சேர்ப்பான்."

இப்புவனேககஜவாகு என்றொரு மன்னன் ஈழத்தை ஆண்ட மன்னர் பட்டியலில் காணப்படவில்லை. மாறாகப் புவனேகபாகு, கயவாகு என்ற மன்னர் பெயர்களே பட்டியலிலுண்டு. கயபாகு கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினைக் கோணேசர் கல்வெட்டு உரைக்கிறது. ஆனால் புவனேகபாகுபற்றி இதில் எவ்வித சான்றுமில்லை. எனினும் கயவாகு போன்று புவனேகபாகு என்ற மன்னனும் இத்தலத்துடன் தொடர்பு கொண்டிருக்கலாம். இவ்விருவர்களது பெயரையும் தனித்தனிப் பெயரென்பதை அறியாது புவனேககஜவாகு என்ற ஒரே மன்னனுடைய பெயராக இந்நூலில் சேர்த்திருக்கலாம்போல் தெரிகிறது. திருக்கோணாசல புராணத்திலும் இப்பெயர்தான் காணப்படுகிறது. அப்படியானால் இங்கே குறிப்பிடப்படும் புவனேகபாகு யாழ்ப்பாணத்தை ஆண்ட சப்புமால் குமரய்யனாகவும் இருக்கலாம். காரணம் யாழ்ப்பாண ராச்சியத்தின் ஒரு பகுதியாகத் திருகோணமலை விளங்கியதும், யாழ்ப்பாண மன்னர்கள் இத்தலத்துடன் தொடர்பு வைத்திருந்ததும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிய புவனேகபாகுதான் இத்தலத்திற்கும் சென்று இதற்குத் தானத்தைக் கொடுத்திருக்கலாமெனவும் எண்ணத் தூண்டுகின்றது.[5]

ஏனைய யாழ்ப்பாண ராச்சிய மன்னர்கள் திருக்கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினை "பரராசசேகரன் செகராசசேகரன் வரவு", "ஆரியச் சக்கரவர்த்தி வரவு" என்ற தலையங்கங்களில் பின்வருமாறு எடுத்துரைக்கிறது. அஃதாவது.

### பரராசசேகரன் செகராசசேகரன் வரவு

பரராசசேகரன் செகராசேகரனென்றிருவர் திரிகைலைக்கு வடமேல் பாலில் இராச்சியம் பண்ணியிருப்பார்கள். அவர்கள் திரிகோணமலைப் பெருமை கேட்டு வந்து பாவநாச தீர்த்தத்திலும் படிந்து இரவிகுல திலகராகிய தேவராசகுளக்கோட்டுமகாராசனுக்கு இத்தனை ஐசுவரியங்களைக் கொடுத்து அடுத்தடிமை கொண்ட கோணநாயகரேயென்று விழுந்தழுது நமஸ்காரமும் பண்ணி அறுபத்து நாலு சிவாலயமுந் தரிசனை

பண்ணி, எழுபட்டு முத்துமாலையும் வயிரரத்தினம் பதித்த தங்கப்பதக்கமுஞ் சாத்துவித்து, முத்துக்குடை, பவளக்குடை கொடுத்து, வெகு திரவியமும் அறை முதலிருப்பாக வைத்து கருகுலக்கணக்கிலும் பதிப்பித்து நாட்டில் நூல் வாங்கிக் கோயிலுக் கொப்புவிக்கிறதற்கு ஒரு இறைகடமையில்லாத திரியாயூரும், அதற்கு எழுகுளமும் எழுவெளியுங் கொடுத்து எந்தெந்தக் காலத்துக்குந் திரிக்கு நூல் வாங்கிக் கொடுக்கச் சொல்லித் திட்டமும் பண்ணி ஆதியாகிய கோணநாயகர் பாதாரவிந்தந் துதிசெய்து விடையும் பெற்றுத் தங்கள் நகரஞ் சென்று வெகுநாளிராச்சிய பரிபாலனம் பண்ணிச் சிவபதஞ் சேர்வார்கள்.

## ஆரியச் சக்கரவர்த்தி வரவு

ஆரியகுலராசன், பரராசசேகரன், செகராசசேகரனுண்ட நாட்டை இராச்சியம் பண்ணிவருகிற நாளையிலே திரிகைலநாதர் பெருமை கேட்டு வந்து பாவநாசச்சுனையிற் றீர்த்தமும் படிந்து ஆலயமடங்கலும் பிரதக்ஷணஞ் செய்து திருமுன்னே வந்து அவரி குலதிலகராகிய குளக்கோட்டு மஹாராசனைத் தடுத்தடிமைக் கொண்ட ஸ்ரீகமலபாதமிதுவோவென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி எழுந்து கனகவாபரணமும், நவரத்ன மாலையுஞ் சாத்தித் தங்கக் குடை பொன் குடையுங் கொடுத்து, வெகு திரவியமுமறை முதலிருப்பாக வைத்துக் கருகுலக்கணக்கிலும் பதிப்பித்து கோணநாயகரிடம் விடையும் பெற்றுத் தன்நகரத்துக்குப் போவான்.

இதுபற்றிப் பேராசிரியர் பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகையில் ஆரியச் சக்கரவர்த்தி என்பவன் யாழ்ப்பாணத்தையாண்ட முதலரசர்களுள் ஒருத் தனியிருத்தல் வேண்டுமென்றும் ''பரராசசேகரன்'', ''செகராசசேகரன்'' என்ற இருவரும் பதினைந்தாம் அல்லது பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களென்றும், இறுதியாக யாழ்ப்பாண மன்னர் கோணேஸ்வரம் சென்று ஆலயத் திருப்பணிகள் செய்தனர் என்பதும் வரலாற்றுண்மை என வும் கூறியுள்ளார். (பத்மநாதன், சி: 1985 : 222 – 23)

திருக்கோணாசலபுராணம் (சண்முகரத்தின ஐயர் : 1909) பரராசசேகரன் என்ற யாழ்ப்பாண ராச்சிய மன்னன் கோணேஸ்வரம் சென்று செய்த திருப்பணியைப் பின்வரும் செய்யுள்களால் கூறுகிறது. அஃதாவது,

''அன்ன நாளிடை யாழி சூழகன் புவி முழுதுந்
தன்ன தாகவே தனிக்குடை நீழலிற்றுங்க
மன்னனும் பரராசசேகரனென்னும் வள்ளல்
பொன்னுலாந்திரிகோணமால் வரை தனிற் பொருந்தி

சிந்தையன்பினோ டரனுமை தனைத் தரிசித்தாங்
கந்தமின்னிதி பூண்மணி நிபந்தங்களமைத்து
முந்து சீர் விழாத் தேர்த்திரு நாண்முறை போற்றிச்
சொந்த மாநகர் சார்ந்தவன் தொல்குலத்தரசன்

ஆரியச் சக்கரவர்த்திகள் இத்தலத்தின்மீது வைத்திருந்த தொடர்பினை யாழ்ப்பாணவைபவ மாலை பின்வருமாறு கூறுகிறது. (சபாநாதன். குல. 1953 : 46)

> "கனகசூரிய சிங்கையாரியன் தன்பிள்ளைகளாகிய பரராசசேகரனையும் செகராசசேகரனையும் திருக்கோவிலூரில் இராச குடும்பத்தவர் பாற் கல்வி கற்கவைத்து யாத்திரிகை பண்ணும்படி தன் மனைவியுடன் காசி பரியந்தம் திருத்தலந்தோறுஞ் சுற்றித் திரிந்து, திரும்பிக் கோகர்ண சிவாலயத்தில் வந்திறங்கி அவ்விடத்திலிருந்து சில வருட காலஞ் சிவராத்திரி விரதம் அனுட்டித்தான்..........

திருகோணமலையிலிருந்தும் இராமேஸ்வரக் கோயிலின் நிருமாண வேலைகளுக்குக் கருங்கற்கள் அனுப்பப்பட்டதாக ஞானப்பிரகாசர் பின்வருமாறு கூறுகிறார். (ஞானப்பிரகாசர், 1928 : 103)

> "பரராசசேகரன் இராமேசுவரக் கோயிலின் கர்ப்பக்கிரகங்களில் வேலை செய்வித்தனன் போலும், இக்கட்டிடங்கள் திருகோணமலையில் வெட்டி எடுத்த கருங்கற்கள் கொண்டு பரராசசேகரனுல் சக வருஷம் 1336 இல் (கி. பி. 1414 இல்) சமைக்கப்பட்டன எனும் சாரமமைந்த கல்வெட்டுக்கள் அவற்றுள் ஒருகால் காணப்பட்டன. ஆயினும் 1866ஆம் ஆண்டில் இராமநாதபுரச் சேதுபதிக்கும் கோயிற் பிராமணர்களுக்குமிடையில் வியாச்சியம் நடந்தபோது ஓர் கட்சிக் காரரால் குறித்த கல்வெட்டுக்கள் அழிக்கவும் மாற்றவும் பட்டொழிந்தன."

யாழ்ப்பாண ராச்சிய மன்னர்கள் நாள்தோறும் இராமேஸ்வரத்திற்குச் சுவாமி தரிசனஞ் செய்யப்போய் வருவார்கள் என்பதும் அவ்வாலய அபிஷேகத்திற்கு நாள்தோறும் நெடுந்தீவிலிருந்து பாலும் கச்சதீவிலிருந்து பூவும் அனுப்பப்பட்டதென்பதும் ஐதீகம். (முத்துத்தம்பிப்பிள்ளை, 1933:56) யாழ்ப்பாண அரசர்களாகிய ஆரியச் சக்கரவர்த்திகளால் மட்டுமன்றி இப்பதியிலாண்ட வன்னியராலும் கோணேஸ்வரம் போஷிக்கப்பட்டதைக் கி. பி. 14ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது. (இந்திரபாலா, கா. 1968 : 38 – 50) இக்கல்வெட்டுக் கங்குவேலி சிவன் கோயிற் தூண்களிற் காணப்பட்டுள்ளது. மலையில் வன்னியனும் ஏழூரில் அடப்பர்களும் கூடிக்கோணை நகர் கடவுளுக்குக் கங்குவேலியில் நிலமானியம் செய்ததைப் பின்வருமாறு இது உரைக்கிறது.

> "தம்பிரானுர் கொணை நாதனுக்கு கங்கு
> வெளியில் வெ (ளியும்) புல் நடப் (பு) ம்
> ஆக விட்டோம் எனக் கூறி இக்கொடைக்கு
> ஊறு செய்பவர்கள் கெங்கை கரையிலே
> காராம் பசுவைக் கெ (ான்)ற பாபம்
> கெ(ாள்)ளக் கடவர்"

எனவும் கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக் குறிக்கும் வெளியானது பரந்த நிலப்பரப்பையும், புல் நடப்பாவது இந்நிலத்திலே வளரும் புல்லையும் இதில் நடப்பனவாகக் காணப்படும் பிராணிகளையும் குறிக்கும்.

மகாவலி கங்கைக் கரையிலுள்ள கரசையில் சிவனுக்கொரு ஆலயமிருந்ததைத் தட்சிணகைலாய புராணம் கூறும். அகஸ்தியரால்

ஸ்தாபிக்கப்பட்ட இத்தலத்தின் மகிமையைக் கூறுவதே திருக்கரசைப்புராணமாகும். இச்சந்தர்ப்பத்திற் தட்சிண கைலாய புராணத்தில் மகாவலி கங்கை நதிகூடப் புனித நதிகளில் ஒன்ருக விளிக்கப்படுவதும் சிவனொளி பாத மலையிலிருந்து தென்கைலையாகிய திருக்கோணேஸ்வரம்வரை பல புண்ணிய ஷேத்திரங்கள் உள என இதில் வரும் குறிப்புகளும் கவனிக்கத் தக்கவையாகும். இக்கோயில் இடிக்கப்பட்ட பின்னர் இதன் பல பாகங்கள் கங்குவேலிச் சிவன் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கொட்டியாரத்திலுள்ள திருமங்கலையும் இத்தகைய பழைய சிவதலமென்றும் இதுவும் இடிக்கப்பட இங்குள்ள சிவசின்னங்களும் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் திருக்கோணாசல வைபவம் கூறுகிறது. (Navaratnam, C. S. 1964 : 60) இக்காலத்திற்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தில் விஷ்ணு சிலைகள் கந்தளாய், திருக்கோணேஸ்வரம் ஆகிய இடங்களிற் கிடைத்தும்கூட இக்காலத்தில் இங்கு நிலைபெற்றிருந்த புகழ்பெற்ற விஷ்ணு ஆலயங்கள் பற்றிய விவரங்கள் நமக்குக் கிட்டவில்லை, இவ்வாறே தான் பொலநறுவைக் காலத்து மகிஷாசுரமர்த்தினியின் சிலை ஒன்று இங்கே கிடைத்தும்கூடக் காளி கோயில்கள்பற்றிய விபரம் நமக்குக் கிடைக்கவில்லை. திருகோணமலை நகரத்திலுள்ள ''நகரக்காளி'' என்னும் கோயிலும் (Navaratnam, C. S. 1964 : 81) ஒருசமயம் இக்காலத்தில் எழுச்சிபெற்ற கோயிலாகவும் இருந்திருக்கலாம். வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்கு நான்கு மதில்களைக் கட்டி உபயஞ்செய்த செய்தியை 16ஆம் நூற்ருண்டைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்று (இந்திரபாலா, கா. 1964) எடுத்துரைப்பதை நோக்கும்போது போத்துக்கேயர் வருமுன்னரே இக்கோயிலும் முக்கிய முருக வழிபாட்டு ஸ்தலமாக எழுச்சிபெற்றிருந்தது என எண்ணத் தூண்டுகிறது. அத்துடன் கதிர் காமத்திற்கு யாத்திரை செய்வோரும் இவ்விடத்திற் தரித்துச் செல்வதும் வழக்கமாகவிருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாமாங்கேஸ்வரர் ஆலயமும், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் பழம்பெரும் சிவஸ்தலங்களாகும். மாமாங்கேஸ்வரத்துடன் தொடர்புடையவர்களாகக் குளக்கோட்டன், மாகன் ஆகியோர் மட்டக்களப்பு மான்மியத்தில் குறிக்கப்பட்டுள்ளனர். (நடராசா, F. X. C. 1962) ஆடகசவுந்தரியால் மாமாங்கேஸ்வரரின் தீர்த்தம் சீர்செய்யப்பட்டதென மட்டக்களப்பு மான்மியம் கூறும்.

கலிங்க குமாரியாகிய உலகநாச்சியாரால் கொக்கட்டிச்சோலையும் கண்டு பிடிக்கப்பட்ட செய்தியை இது கூறுவதை நோக்கும்போது பொலநறுவைக் காலத்திலேயே இக்கோயில் பிரசித்தம் பெற்றது தெளிவாகிறது. சிவபக்தனுன மாகனது ஆட்சியிலும் பின்வந்த வன்னியர் ஆட்சியிலும் இவை போஷிக்கப்பட்டன என ஊகிக்க இடமுண்டு. ஆதியில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் ஒரு முருக வழிபாட்டிடமாகவிருந்து பின்னர்தான் சிவ வழிபாட்டு இடமாக மாறியது. மாமாங்கேஸ்வரர் ஆலயம் இன்று விநாயக வழிபாட்டு ஸ்தலமாகியபோதிலும் இன்றும் மூலஸ்தானத்தில் லிங்கம் இருப்பது ஈண்டுநினைவு கூரற்பாலது. இத்தகைய சிறப்பியல்புகள் ஈழத்திலுள்ள வேறெந்தச் சிவன் கோயில்களிலும் இல்லை எனலாம். எனினும் மட்டக்களப்பில் பண்டைய வழிபாட்டுத்

தெய்வமாக முருகனே விளங்குகிறன் எனக் கருதப்படுகிறது. (சுந்தையா, வி. சி. 1983) இத்தகைய பழைய முருக தலங்களைத் திருப்படைக் கோயில்கள் என்பர். பண்டைய அரசரின் மதிப்பும், மான்யமும், சீர்வரிசைகளும் பெற்றவையே இவையாகும். இவற்றின் நிருவாகத்திற்குக் கலிங்க வேளாளரே பொறுப்பாக இருப்பதால் கலிங்க மேகன் காலத்திலிருந்தே இவை செல்வாக்குப் பெற்றன எனலாம். (சுந்தையா, வி. சி. 1983 : 49) இவ்வரிசையில் திருக்கோயிலிலுள்ள சித்திர வேலாயுதசுவாமி கோயில்தான் முதலாவது திருப்படைக் கோயிலாகும். இதேபோன்று முக்கியம் பெற்றவைதான் பெரியபோரதீவுச் சித்திர வேலாயுத சுவாமி கோயில், மண்டூர் முருகன் கோயில், சித்தாண்டிச் சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்பனவாகும்.

இக்கோயில்களுக்கு நியதி தவருது வேண்டிய திருப்பணிகளைச் செய்வதற்குத் திருப்படைக் குடியினர் உரிய மான்யங்களுடன் மன்னரால் வகுத்தும் வைக்கப்பட்டனர். தாய்த் தெய்வங்களாக மக்கள் மத்தியில் பத்திரகாளி, பேச்சி, மாரி, கடலாட்சி, திரௌபதி, கண்ணகி ஆகியவை வழிபடப்பட்டு வந்துள்ளன. எவ்வாருயினும் செல்வாக்குள்ள வழிபாடாக கண்ணகி வழிபாடே இக்காலத்தில் எழுச்சி பெற்றது எனலாம். இவ்வழிபாடு பத்தினி வழிபாடாகச் சிங்கள மக்களிடையே இக்காலத்தில் குறிப்பாக மேற்கு மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், தென் மாகாணம் ஆகிய பகுதிகளில் பத்தினியை நாற்திசைக் காவற் தெய்வங்களில் ஒன்ருகப் பேணும் அளவுக்குச் சிறப்புற்றிருந்தது போல், தமிழ்ப் பகுதிகளிலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் இதன் செல்வாக்கு ஓங்கிக் காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 25க்குக் குறையாத கண்ணகி கோயில்கள் உள. இவற்றுள் வந்தாறுமுல்லை, செட்டிப்பாளையம், காரைதீவு, பட்டிருப்பு, போன்ற இடங்களிலுள்ள கண்ணகி ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். திருகோணமலை மாவட்டத்திலும் சாம்பல்தீவு, நிலாவெளி, பள்ளிக்குடியிருப்பு, சம்பூர், மூதூர் ஆகிய இடங்களில் கண்ணகி ஆலயங்கள் உள. சிங்களப் பகுதிகளிலிருந்து இவ்வழிபாடு தமிழ்ப்பகுதிகளுக்குப் பரவியதா அல்லது சிங்கள – தமிழ்ப்பகுதிகள் தென்னிந்தியாவோடு குறிப்பாக கேரளத்தோடு வைத்திருந்த தொடர்பிஞல் அங்கிருந்து தனித்தனியாகவே இருபகுதிகளுக்கும் இவ்வழிபாட்டு முறைகள் ஈழத்திற் பரவியதா என்பது பற்றி அறிஞரிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டாலும் கூட, சிங்கள மக்களைப் போல் தமிழ் மக்களிடையேயும் கஜபாகு மன்னன் கண்ணகி விழாவுக்குக் சென்ற பின்னர் திரும்பி வந்து யாழ் மாவட்டத்தில் கந்தரோடையிலுள்ள அங்கணுக்கடவையில் இவளுக்கொரு ஆலயம் அமைத்தது பற்றிய நம்பிக்கை நிலவுவதாலும், கிழக்கிலங்கையில் ஈழத்தின் வடபகுதியிலிருந்துதான் இவ்வழிபாடு அங்கு பரவியதென்ற ஐதீகம் காணப்படுவதும் இக்காலத்தில் கலாசாரத்துறையில் தொடர்பு உள்ளனவாக விளங்கிய வடகிழக்குப் பகுதிகளில் இவ்வழிபாடு வடக்கே இருந்து தரைமார்க்கமாகவே கிழக்கிற்கும் பரவியதென்றும் கொள்ளலாம். எனினும் வடக்கே இருந்த பல கண்ணகி ஆலயங்கள் கடந்த நூற்ருண்டில் அம்மன் ஆலயங்களாக ஆறுமுக நாவலர் அவர்களது சமய நடவடிக்கைகள் காரணமாக மாறக் கிழக்கில் மட்டும்தான் இவை தொடர்ந்தும் இன்றும் செல்வாக்குடையனவாக விளங்குகின்றன எனலாம். வன்னிப் பிரதேசத்தில்

வற்றுப்பளை புகழ்பூத்த கண்ணகி ஆலயமாகும். மடுமாதா கோயில் போத்துக்கேயரால் இடிக்கப்பட முன்னர் கண்ணகி வழிபாட்டு ஸ்தலமாக விளங்கியதென்பதும் ஐதீகம். (Navaratnam, C. S. 1964 : 36) எனினும் சிங்கள — தமிழ் மக்களிடையே உள்ள கலாசாரப் பிணைப்புக்குக் கண்ணகி / பத்தினி வழிபாடு சிறந்த உதாரணமாக விளங்குகிறது எனலாம். தமிழிலுள்ள கண்ணகி வழக்குரை காதை, சிலம்பு கவர்தல் காவியம் போன்று கண்ணகியைத் தலைவியாகக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் "பத்தினி கந்தாவ", "பத்தினியாதின்ன" ஆகியன தோன்றின. இவ்வாறுதான் இருகலாசாரங்களுக்குமிடையில் கண்ணகி வழிபாட்டு முறையில் கொம்பு முறித்தல் (அங்கெலியா), போர்த்தேங்காய் உடைத்தல் (பொலிகெலியா) ஆகியனவும் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் விஷ்ணு வழிபாட்டிற்கும் கண்ணகி வழிபாட்டிற்குமிடையே நெருங்கிய உறவு காணப்படுவதும் இப்பிரதேசத்திற்குரிய சிறப்பான அம்சமாகும். கண்ணகி கோயில்களின் விழா முடிந்த பின்னர்தான் இங்குள்ள விஷ்ணு ஆலயங்களில் விழாக்கள் நடப்பதே இச்சிறப்பம்சமாகும். குருக்கள் மடத்தில் பல்லவர் காலத்தைச் சேர்ந்த விஷ்ணு சிலை கண்டுபிடிக்கப்பட்டதை நோக்கும்போதும் இன்றும் இது விஷ்ணு ஆலயமாக விளங்குவதைக் காணும் போதும் அக்காலந்தொட்டு இவ்வாலயம் விஷ்ணு தலமாக விளங்கியது குறிப்பிடத்தக்கது; இதைவிட வந்தாறுமூலை, திமிலைத்தீவு, கழுதாவளை, கல்லடி, காரைதீவு, பழுகாமம், தம்பிலுவில் ஆகிய இடங்களிலும் விஷ்ணு ஆலயங்கள் உள.

இக்காலத்தைய கட்டிடக்கலையையும், பிற கலைச் செல்வங்களையும் உற்று நோக்கும்போது பொலநறுவை ராச்சியத்தின் வீழ்ச்சியோடு சிங்கள ராச்சியத்தின் பண்பாடு தளர்வு கண்டது புரிகிறது. இக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் சிங்கள அரசிருக்கைகள் அடிக்கடி மாற்றங்கண்டது மட்டுமன்றி இக்கால அரசுகள் பொலநறுவை அரசைப் போல் இவற்றைப் போஷிக்குமளவுக்குப் பொருளாதார வலுவையும் வளத்தையும் பெற்றிருக்கவில்லை. இதனால் சிங்கள அரசிருக்கைகளில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலை வளர்ந்தது என்பதை இக்காலத்தைய உதாரணங்கள் எடுத்துக் காட்டுகின்றன. எனினும் இக்காலத்திற்கு முன்னர் பௌத்த சிங்களக் கலையில் திராவிடக் கட்டிடக் கலை சங்கமியாது தனித்து இயங்க, இக்காலத்தில் சங்கமித்தது மட்டுமன்றி பிற்பட்ட சிங்களக் கலையின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் அளவுக்குப் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியதும் ஒரு முக்கிய அம்சமாகும்.

இக்காலத்தில் வளர்ந்த சிங்களக் கலையின் எச்சங்களை யாப்பஹுவவிலும் கம்பளையிலும் காணக் கூடியதாகவுள்ளது. யாப்பஹுவ மன்னர்களான இரண்டாவது பராக்கிரமபாகு, முதலாவது புவனேகபாகு (கி. பி. 1272–84) ஆகியோர் பாண்டியராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்பு பாண்டியக் கலைஞர்கள் இங்கு வந்து செயற்பட வழிவகுத்தது. இதற்கான தலைசிறந்த உதாரணமாக யாப்பஹுவாவிலுள்ள ஒரு பெரும் கட்டிடத்தின் படிக்கட்டுகளும் முன்மண்டபமும் விளங்குகின்றன. இதன் வடகிழக்கே உள்ள தந்த தாதுக்கோயில் திராவிடப் பாணியிலே அமைக்கப்பட்ட கட்டிடமாகும். எனினும் இதில் சிங்களக் கட்டிடக் கலை அம்சங்கள் சிலவும் காணப்படுவதை நோக்கும்போது பாண்டியச் சிற்பிகளுடன் சிங்களக் கலைஞர்கள் சேர்ந்தே

இக்கட்டிடத்தை அமைத்தனர்போற் தெரிகிறது. இக்கோயிலின் நீளம் 42 அடி. இதன் பிரதான அம்சங்களாகக் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மண்டபம் ஆகியன விளங்குகின்றன. கர்ப்பக்கிருகத்தின் சுற்றளவு 20×22 அடியாக இருக்கிறது. கருங்கல்லினால் அமைக்கப்பட்ட இதன் கட்டிடத்தில் கல்லிலமைந்த வாசல் நிலைகள் அழகிய வேலைப்பாடுடையனவாகக் காணப்படுகின்றன. (Fernando, M. B. 1969)

தெற்கே செழித்த இந்துக் கோயில்கள் பலவும் அழிக்கப்பட்டாலுங்கூட இக்காலத்திற் கட்டப்பட்ட பௌத்த கட்டிடங்கள் இந்துக் கோயில்களின் அமைப்பில் கட்டப்பட்டதையும் இவற்றைத் தென்னிந்தியச் சிற்பிகளே நிருமாணித்ததையும் காணமுடிகிறது. இக்கட்டிடங்களில் தென்னகத்தில் மேன்மைபெற்ற விஜயநகரக் கட்டிடப் பாணியின் சாயலைக் காணமுடிகிறது. கேகாலை மாவட்டத்தில் அலவதுர என்ற விகாரையும் அதனோடு சேர்ந்த கோயிலும் முதலாவது தர்மகீர்த்தி சங்கராஜர் என்பவரினால் அமைக்கப்பட்டன. இவர் தென்னிந்தியாவோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர். இவ்விகாரையின் உள், வெளி மண்டப அமைப்பு இந்துக் கோயிலின் அமைப்பையே ஒத்துளது. வெளிமண்டபத்தில் அழகிய பத்ம குமுத சிற்பங்களுள. விகாரையின் உள்ளே புத்தர் சிலையோடு விஷ்ணு, சமன், நாத ஆகியோரது சிலைகளும் உண்டு. திராவிடக் கலையின் சிறப்பம்சத்தை இத்தூண்களின் அமைப்பில் காணமுடிகிறது. இத்தூண்களின் மேற்பாகத்தில் முத்துமாலை அணி, பத்மபந்தம், பூர்ணகலசம், தாமரையிலைப் பலகை, புஷ்பபந்தம், போதிகை ஆகியன உள. சில தூண்களிற் சிங்கத்தின் சிற்பங்களும் உள. பல்வகை மலர்கள், மயில்கள், தோரணங்கள் ஆகியன புடைப்புச் சிற்பங்களாகவும் காணப்படுகின்றன. இவ்விகாரையின் அடித்தளத்தில் நடனமாதர், வாத்தியக் கலைஞர், குத்துச்சண்டைவீரர் ஆகியோரது சிற்பங்களுள. கட்டிடத்தைச் சுற்றிவர கஜசிம்க, வியாக்கிரக ஆகியனவும் சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன. (இந்திரபாலா கா. 1970)

நான்காவது புவனேகபாகு (கி. பி. 1341 – 51) காலத்தில் வாழ்ந்த கணேஸ்வராச்சாரியாரே கம்பளையிலுள்ள கடலதேனிய ஆலயத்தைக் கட்டியவராகும். இக்கட்டிடத்தினைக் கட்டுவித்தவரும் தென்னிந்தியாவோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்த தர்மகீர்த்தி சங்கராஜராகும். அத்துடன் கம்பளை ராச்சியத்தில் கணேஸ்வராச்சாரியாரைத் தலைவராகக் கொண்ட சிற்பிகள் குழுவொன்று (ஸ்தபதி கணம்) இயங்கியதைக் கடலதேனியாச் சிங்களக் கல்வெட்டு எடுத்தியம்புகிறது. அத்துடன் இக்கோயிலைக் கட்டுவதற்கு ஒரு இலட்சம் பணமும் மூவாயிரம் யாளம் நெல்லும் செலவு செய்யப்பட்டதாகவும் இக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டில் வரும் ஆசாரி வஸ்து சாஸ்திர, பிரதிமா சாஸ்திர போன்ற பதங்கள் கட்டிட சிற்பக் கலையிற் தேர்ச்சி பெற்றோர் இங்கு காணப்பட்டதை எடுத்தியம்புகின்றன. இக்கட்டிடத்தின் நீளம் 78 அடி ஆகும். ஆகக்கூடிய அகலம் 37 அடி ஆகும். உயரம் 40 அடி ஆகும். இதன் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மண்டபம் ஆகியவை முறையே 25 அடி × 25 அடி, 12 அடி × 9 அடி, 19 அடி × 10 அடி ஆகிய அளவிற் காணப்படுகின்றன. இதன் மண்டபத்தை மையமாகக் கொண்டு தெற்குநோக்கி இருக்கும் உப்புல்வனுக்கு (தெவிராஜ) அமைக்கப்பட்ட கர்ப்பக்கிருகமும் உண்டு. இதன் உள்ளளவு 6 அடி × 6 அடி ஆகும்.

பிரதான ஆலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் திருவாசிபோல் மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட புத்தர் உருவம் கிழக்கு நோக்கிய வாசலுடனும் முகமண்டபத்துடனும் காணப்பட இதே ஆலயத்தில் உப்புல்வன் தெற்கு நோக்கி இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்விகாரை மூன்று அடுக்குகளுடன் காணப்பட்டாலும்கூட மேலிரண்டு அடுக்குகளும் வெறும் அலங்கார அடுக்குகளேயாகும். புத்தர் சிலை அமைந்துள்ள கர்ப்பக்கிருகத்தில் மேல் 16 அடி உயரமுள்ள சிகரமும் உண்டு. எட்டுப் பக்கங்களை உடைய இச்சிகரம் உள்ளே கோறையாக அமைந்திருக்கிறது. சிகரத்தின் உச்சியில் ஸ்தூபிக்குப் பதிலாகப் பௌத்த சின்னமான கர்மிகா காணப்படுவதும் மற்றோர் சிறப்பான அம்சமாகும். ஆனால் உப்புல்வன் ஆலய கர்ப்பக்கிருகத்தில் இந்துக் கோயில்களின் அமைப்பில் ஸ்தூபிதானுண்டு. இவ்விகாரையின் அதிஷ்டானம் (அடித்தளம்) சமகாலத் திராவிட கட்டிடங்களைப் போன்று அலங்கார வேலைப்பாடுடையதாகக் காணப்படுகிறது. முக்கியமாக முகமண்டபத்திலுள்ள அதிஷ்டானத்தில் நடனமாதர் இசைக் கலைஞர் சிற்பங்கள் உள. வாசலில் சந்திரவட்டக் கல்லும் இருமருங்கிலும் கஜசிம்கங்களும் உள. (Mudiyanse, N. ?)

இவ்வாலயத்தின் புறச்சுவரமைப்பிலும் பல இந்துக்கலை அம்சங்கள் உள. இவற்றுள் தூணெப்புக்கள், மாடங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை. எனினும் இவ்வாலயத்தின் சிறப்பம்சமாக விளங்குவது விஜயநகர பாணியில் தனிக் கல்லிலமைந்த தூண்களே எனலாம். (Devaraja, L. 1968 : 427 – 481) இவற்றின் அடித்தளம் சிங்க உருவத்தைக் கொண்ட பீடத்திலமைந்து எண் சதுர, சதுர வடிவிலமைந்த, பாகங்களாக கலசம், பதுமம், பலகை, தாமரைப்பூ வடிவிலான புஷ்பபோதிகை ஆகியனவற்றைக் கொண்டு விளங்குகிறது. இத்தூண்களில் புராணக் கதைகளைச் சித்தரிக்கும் சிற்பங்களும், நடராஜமூர்த்தம், நடமாடும் கண்ணன் ஆகியோரது சிற்பங்களும் நடனமாதர் சிற்பங்களுமுள.

கடலதேனியா பாணி அமைப்பில் அமைந்த பௌத்த ஆலயங்களே நாததேவாலயம், ஆதாஹநமளுக்கெடிகே, ரிதிவிகாரை மண்டபம், அம்பெக்க தேவாலயம் ஆகியவையாகும். நாததேவாலயம் கடலதேனியாவை விட அளவிற் சிறிதாகக் காணப்படுகிறது. இதுவும் மூன்று மாடிகளைக் கொண்டது. இதன் கர்ப்பக்கிருகம் $20\frac{1}{2}$ அடி $\times$ 19 அடி ஆகும். இக்கோயிலின் வெளிப்புறம் தூணெப்புக்களையும் மாட அலங்கார வேலைப்பாடுகளையும் உடையனவாகக் காணப்படுகின்றது. (Mudiyanse, N.)

கடலதேனியா தனிக் கருங்கற் கட்டிடமாக அமைய லங்காதிலக விகாரையின் அடித்தளம் தூண்கள் வாசல்நிலை ஆகியன போன்ற இடங்களுக்குக் கருங்கல் பயன்படுத்தப்பட ஏனைய பாகங்கள் அறுகல்லாலும் கட்டப்பட்டன. கம்பளை ராச்சியத்தின் மந்திரியாக இருந்த கேரளத்தைச் சேர்ந்த சேனலங்காதிகாரிதான் இக்கட்டிடத்தைக் கட்டுவித்தவராகும். இதனைக் கட்டியவர் ஸ்தாபதிராஜராகும். இவரும் தென்னிந்தியரே. இதன் கர்ப்பக்கிருகம் 19 அடி சதுரமானது. அதன் முன் உள்ள அர்த்த மண்டபத்தின் அளவு 16 அடி $\times$ 10 அடி ஆகும். இவற்றின் அதிஷ்டானப்பகுதி, தூணெப்பு, மாடம் ஆகியவற்றைப் பார்க்கும்போது ஆரம்பத்தில் இக்

கட்டிடங்களே இருந்தது புரிகிறது: இவற்றைச் சுற்றி நாற்புறமும் 60 அடி நீளமுள்ள மதில் பின்னர் கட்டப்பட்டுள்ளது: இம்மதிற் சுவர்களின் வெளிப்பக்கத்திலேயும் அலங்கார வேலைப்பாடுகள் உ.ள. உள்ளே ஆலயத்தைச் சுற்றிவர பிரதட்சிணு பாதை உளது. இதன் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் ஆகியனவற்றின் வெளிச்சுவர்களில் உள்ள மாடங்களில் இக் காலக் காவற்தெய்வங்களான ஸ்கந்த, கணேசன், உப்புல்வன், சமன், விபீஷணன் ஆகியோரதும் அவர்களது தேவியரதும் உருவங்கள் சுதையினுல் அமைக்கப்பட்டுள்ளன. (Mudiyanse, N) இக்கட்டிட அமைப்பு முறையில் பொலநறுவை ராச்சிய காலத்தில் இங்கு வாழ்ந்த திராவிடச் சிற்பிகளின் வழித்தோன்றல்களும் பங்கு கொண்டிருக்கலாமென்றும் கருதப் படுகிறது. (இந்திரபாலா.கா, 1970)

இக்காலத்தில் கட்டிடக்கலை போன்று சிற்பக்கலையிலும் ஒரு தேக்க நிலையைக் காணமுடிந்தாலும் கூடக் (Paranavitane, S. 1960 : 788) கிடைக்கின்ற பல சான்றுகள் இக்காலத்தில் இக்கலை பெற்றிருந்த சிறப்பினுக்குச் சிறந்த உதாரணங்களாகும். உதாரணமாக யாப்பஹுவாவில் உள்ள படிக்கட்டுகளையுடைய முன் மண்டபத்தினையும் அதோடு சேர்ந்துள்ள படிக்கட்டுகளையும் சுற்றிவர வெளிப்புறத்திலே நடன மாதருடைய சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்களாகவுள. இவற்றுள் ஒவ்வொரு நடன மாதும் பல்வேறு நடன நிலைகளில் நிற்பதும் இவர்களோடு இடையிடையே மிருதங்கம் போன்ற வாத்தியக் கருவிகளைத் தாங்கியவர்கள் நிற்பதும் தென்னிந்தியக் கோயில்களிற் காணப்படும் நடன மாதர் சிற்பங்களை நினைவூட்டுகின்றன. பரதநாட்டிய அறிவும் தென்னிந்தியச் சிற்பவியலிற் புலமையும் உடையவர்களே இவற்றினைப் படைத்தவர்களாகும். கடலதேனியா, லங்கா திலகக் கட்டிடங்களிலும் இத்தகைய சிற்பங்கள் உள. எனினும் இக்காலச் சிற்பிகளின் கைவன்மையைப் பரணவித்தான பின்வருமாறு குறிப்பிடுகிறுர். (Paranavitane, S. 1960 : 791 – 792)

> ''இக்காலச் சிற்பிகளின் கைவன்மையை ஆலயங்களின் கல்வாசல் நிலைகளிற் காணமுடிகிறது. இக்கல் நிலைகளில் பல்வகை அலங்கார வேலைப்பாடுகளாக – இருக்கும் பாவனையிலுள்ள கணங்கள் அல்லது நாகங்கள், சிங்கங்கள், அடிப்பகுதியின் இருபக்கங்களிலிருந்தும் நேரே உயர்ந்து செல்லும் மலர் இதழ்கள் அல்லது சுடர்கள், மணி அலங்காரங்கள், சுருள் அலங்காரங்கள், இசைக் கலைஞர்கள் அல்லது நடனமாதர்கள் தீட்டப்பட்ட பகுதிகள் உள மேற்பகுதியின் இருபக்கங்களிலும் பல்வேறு நிலைகளிலுள்ள உதவியாளரோடு கூடிய கஜலட்சுமி, கீர்த்தி முகங்களிலிருந்து வெளிக்கிளம்பும் பல்வகைப் பூவலங்காரங்கள், சிங்கங்களின் நிரை, மகரங்கள் ஆகியனவும் உள.

பொதுவாகக் கஜலட்சுமி உருவம் இக்காலச் சிற்பங்களின் சிறப்புடன் காணப்படுகிறது. தேவிநுவர, அலுதேனியா, கண்டி நாத தேவாலயத்தின் வாசல் நிலைகளிலுள்ள இச்சிற்பங்கள் சிறப்புடையனவாகும். இக்காலக் கட்டிடங்களின் பொது அம்சமாக நாகவாயிற் காவல்களுக்குப் பதிலாக கஜசிம்கங்கள் உண்டு. இந்துமதச் செல்வாக்கால் சந்திரவட்டக் கல்லிலும் எருது காணப்படவில்லை. கட்டிடங்களின் அடித்தளங்களில் இசைக் கலைஞர்கள், நடனமாதர் சிற்பங்கள் உள.

தனிச் சிற்பங்களாகத் தம்பதேனியாவில் கிடைத்துள்ள இரு சிற்பங்கள் தனிரகத்தைச் சேர்ந்தவையாகும். இவற்றுள் மூன்று தட்டுக்களையுடைய முதற் சிற்பம் இதன் கீழ்த் தட்டில் இருமருங்கிலும் ஈட்டி கொண்டு தாக்கப்படும் ஒரு மனிதனையும் நடுத்தட்டில் தர்ம சக்கிர மூர்த்தத்திலுள்ள புத்தரது உருவத்தையும், மேற்தட்டில் இருபக்தர்கள் வணங்கும் லிங்கத்தினையும் கொண்டுள்ளது. மற்றைய சிற்பத்தின் கீழ்த் தட்டில் ஒரு மனிதனும் யானையும் காணப்பட வேறிருவரால் மனிதன் ஒருவன் தூக்கிச் செல்லப்படும் சிற்பம் நடுத்தட்டிலும், மேற்தட்டில் லிங்கமும் அதனருகில் பக்தனும் செதுக்கப்பட்டுள்ளது. இவை தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் வழக்கிலிருந்த நடுகல் மரபின் எச்சங்களாக விளங்குவதோடு இந்துமதச் சார்புடையனவாகவும் உள. (Paranavitane, S. 1960 : 796)

இசை நடனம் ஆகியவை இக்காலத்தில் மத வழிபாட்டில் முக்கியம் பெற்றதைச் சந்தேஸ இலக்கியங்கள் மட்டுமன்றி இக்காலக் கட்டிடங்களிலுள்ள சிற்பங்களும் எடுத்துக் காட்டுகின்றன. திஸர சந்தேஸம் ஐந்தாவது பராக்கிரமபாகுவின் (கி. பி. 1344 – 1359) அரண்மனையில் இடம்பெற்ற நடனக் கச்சேரிகள்பற்றிக் குறிப்பிட மயூர சந்தேஸம் பன்னிரண்டு பாக்களில் உப்புல்வன் கோயிலில் நடைபெற்ற நடனக் கச்சேரி பற்றிக் குறிப்பிடுகிறது. தேவரடியார் உப்புல்வன் கோயிலில் நடனமாடியதை இபின் பற்றுற்ரு கூறச் சந்தேஸ இலக்கியங்களும் பிற கோயில்களிலும் இவ்வாறு நடைபெற்றதையும் பல்வகை இசைக் கருவிகள் இசைக்கப்பட்டதனையும் கூறுகின்றன. பல்வேறு இசைக்கருவிகளாக கலபேரா, வீணை, ராபாண, தகலம், பேர, சங்கு, ககலம், உடுக்கு, மத்தளம், மிருதங்கம் போன்றனவற்றின் பெயர்களும் கல்வெட்டுக்களில் உள. ஈழத்தில் சோழர் காலத்தில் கோயில்களில் வளர்க்கப்பட்ட இசை, நடனம் இக்காலத்தில் இந்து ஆலயங்களிலும், பௌத்த விகாரைகளிலுள்ள இந்து தேவாலயங்களிலும் மேலும் வளர்க்கப்பட்டதால் சிங்கள இசை, நடனம் ஆகியனவும் விருத்தி கண்டன. இத்தகைய விருத்தியில் தென்னகத்தின் பங்கு கணிசமாக விளங்கியது என்பதும் மறுப்பதற்கில்லை.

இக்காலத்தில் தமிழ் மாவட்டங்களிலுள்ள இந்துக் கோயில் யாவும் சிங்களப் பகுதிகளில் அழிக்கப்பட்டது போன்று அழிக்கப்பட்டதால் இவை பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் திருக்கோணேஸ்வரம், திருக்கோயில் ஆகியவை பாண்டிய கலைப்பாணியிற் கட்டப்பட்டதை எச்சங்கள் எடுத்துக் காட்டுன்றன. திருகோணேஸ்வரத்தைப் போத்துக்கேயர் இடித்தபோது கடலில் வீழ்ந்த அதன் பாகங்களாகிய தாமரைச் சிற்பங்கள் வடிக்கப்பட்ட பாண்டியாளியிலமைந்த தூணின் எச்சங்கள் கடலாய்வின்போது வெளிக் கொணரப்பட்டன. (இந்திரபாலா, கா. 1970) திருக்கோயிலும் பாண்டியர் பாணியிலே கட்டப்பட்டது. யாழ்ப்பாண அரசின் பிற எச்சங்கள் பற்றி அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்.

## அடிக்குறிப்புக்கள்

1. மகாவம்சம் கி. மு. நான்காம் நூற்ருண்டில் பண்டுகாபயன் காலச் சமய நிலைபற்றிக் குறிப்பிடுகையில் அநுராதபுர நகரத்திலிருந்த ''புரதேவ'' தெய்வம் பற்றிக் குறிப்பிடுகிறது. ''புரதேவ'' என்ருல் நகரத்தின் தெய்வம் என்பது பொருளாகும். ''நகரீச'', ''புரதேவ'' ஆகிய இரண்டும் ஒரே பொருள் படைத்தனவாகும். பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த ஸத்தம்மாலங்காரய என்ற நூலும் அநுராதபுரத்திலிருந்த ''புரதேவ'' ஆலயம்பற்றிக் குறிப்பிடுகிறது. பொலநறுவைத் தலைநகரில் பல சிவன் கோயில்கள் இருந்ததும் கோட்டைத் தலைநகரில் காணப்பட்ட மகேஸ்வரன் ஆலயம்பற்றி வரும் குறிப்பும், தேவிநுவரவில் அமைந்த ''நகரீச'' ஆலயம்பற்றி வரும் சான்றும் அக்காலத்தில் நகரின் தெய்வமாகச் சிவன் வழிபடப்பட்டதை உணர்த்துகின்றன. இத்தகையமரபு பழையதாயும் தொடர்ச்சியுடையதாகவும் காணப்பட்டது.

2. சுதர்சனச் சக்கரத்திற்கு வேறு பல வியாக்கியானங்களும் உள. காலம், இடம் ஆகியனவற்ருல் எத்தகைய இடையூறுக்கும் அப்பாற்பட்ட பொருள் என்ற கருத்தும் இதற்குண்டு. உலகிலுள்ள இயற்கையான எல்லாப் பொருள்களும் சுதர்சனச் சக்கரத்திலேயே நிலை கொண்டுள்ளன என்ற நிலைப்பாடும் உண்டு. இது இறைவனது கிரியா சக்தியின் வெளிப்பாடும்கூட. சுதர்சனச் சக்கரம் ஒலியாகிய மந்திரத்தோடும் தொடர்புடையது; இந்நிலையில் இது மந்திரமாயி என அழைக்கப்பட்டு லட்சுமியுடன் நெருங்கிய தொடர்புபடுத்தப்பட்டுமுள்ளது. இது ஒரு யந்திர தேவதைகூட. அசுரர்களைக் கொல்லவே சுதர்சனச் சக்கரம் படைக்கப்பட்டதென்ற ஐதிகம் உண்டு. சுதர்சனச் சக்கிரம் சுதர்சன புருஷ வடிவமெடுக்கும் நிலையுமுண்டு. கால சக்கரமாக விளங்கும் சுதர்சனம் பௌத்த மரபில் தர்மசக்கரமுமாகிறது. சுதர்சன சக்கரத்திற்கே விஷ்ணு கோயில்களில் தனிக் கோயில்களை அமைக்கும் மரபு தமிழ்நாட்டில் கி. பி. 1000 – 1300 காலப்பகுதியில் காணப்பட்டதைக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. சில சிற்பங்களில் சுதர்சனச் சக்கரத்தில் விஷ்ணு உருவமும் காணப்படுகின்றது. (Champakalakshmi, R. 1981 : 249–252) யாழ்ப்பாணத்து வல்லிபுரத்திலுள்ள விஷ்ணுவும் ''சக்கரத்தாழ்வார்'' என்று வணங்கப்படுவதும் ஈண்டு நினைவுகூரற்பாலது.

3. இராமன், லட்சுமணன், சீதை ஆகியோருக்குத் தனித்தனிக் கோயிலமைத்து வணங்கும் வழக்கு தமிழ்நாட்டிலே சோழர் காலத்தில் கி. பி. 10ஆம் நூற்ருண்டிலே தோன்றிவிட்டது. (Champakalakshmi, R. 1981 : 122)

4. சித்திர கைலாயமெனக் கருதப்படும் வட இந்தியாவிலுள்ள வட கைலாயத்துடன் திருக்கோணேஸ்வரம் தென் கைலாயமாக விளங்க நல்லூரிலுள்ள கைலாயநாதர் கோயில் மூன்ருவது கைலாயமாக இக்காலத்தில் கருதப்பட்டதைப் பின்வரும் கைலாயமாலைப் பாடல் உணர்த்துகின்றது. அஃதாவது:

"சித்திரகைலாயமொடு தென்கயிலை யிவ்விரண்டு
நித்தமுற மோர்ந்துறையு நேய பக்தி — அத்துடனே
முக்கைலையாகநல்லை மூதூரி னென்றமைந்த
தக்கைலை மீதினமர்ந் துறைய.

5: இத்தகைய ஊகத்தினைத் திருக்கோணாசல புராணத்தில் வரும் பின்வரும் பாடல் உறுதி செய்கிறது. (சண்முகரத்தின ஐயர், ஆ. 1909) அஃதாவது,

"பரிதியின் மரபிற் றோன்றும்
பரிதி போலக் குலத்தே
பொருவிறுகித்தார் வேய்ந்த
புவனேய கஜபாகுப் பேர்
நிருபவன் வந்துதித்துச் சைவ
நீங்கியே யமனாகித்
திரிசங்க போதி யென்னுஞ்
செப்புமோர் நாமம் பெற்றான்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செய்யுளில் புவனேகபாகு, கஜபாகு ஆகியோரது பெயர்கள் வெவ்வேறாகக் கருதப்படாது ஒரு மன்னனது பெயராகவே கணிக்கப்பட்டுள்ளமை புலனாகிறது. இம்மன்னன் சூரிய குலத்தைச் சேர்ந்தவன், சைவனாக விளங்கியவன், பின்னர் பௌத்தனாகித் திரிசங்கபோதி என்ற பட்டப் பெயரையும் கொண்டவன். இத்தகைய செய்திகளை நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியத்தில் வரும் செய்தியுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இம்மன்னன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டிப் பின்னர் ஆளுவது புவனேகபாகு என்ற பெயருடன் கோட்டை ராச்சிய மன்னனான சம்புமால் குமரய்ய அல்லது செண்பகப்பெருமாள் என்ற மலையாள தேசத்தவர் என்பது உறுதியாகின்றது.

## உசாவியவை (தமிழ்)


| | | |
|---|---|---|
| இந்திரபாலா, கா. | 1968 | "கிழக்கிலங்கைச் சாசனங்கள்" சிந்தனை, மலர் 2 இதழ் 2 & 3 பக். 35–50. |
| ,, | 1970 | இலங்கையிற் திராவிடக் கட்டிடக்கலை – ஒரு வரலாற்று அறிமுகம். கொழும்பு. |
| இராசநாயகம், செ. | 1933 | யாழ்ப்பாண சரித்திரம். யாழ்ப்பாணம். |
| கந்தசாமிக் கவிராயர் | 1955 | (பதிப்பு) அருணகிரிநாதர் திருப்புகழ்.சென்னை. |
| கந்தையா, வி. சி. | 1983 | மட்டக்களப்புச் சைவக் கோயில்கள். (கொழும்பு) |
| குணசிங்கம், செ, | 1973 | கோணேஸ்வரம். பேராதனை. |
| சபாநாதன், குல. | 1953 | (பதிப்பு) யாழ்ப்பாணவைபவ மாலை, கொழும்பு. |
| ,, | 1959 | கதிர்காமம். சென்னை. |
| சண்முகரத்தின ஐயர், ஆ. | 1909 | (பதிப்பு) திருக்கோணாசல புராணம். யாழ்ப்பாணம். |
| சற்குணம், ப. | 1974 | "ஈழத்திற் கண்ணகி வழிபாடு" நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகா–நாடு நினைவு மலர். பக். 141 – 146. |
| சிவசாமி, வி. | 1972 | "நல்லூரும் தொல்பொருளும்", ஒளி. |
| சிற்றம்பலம், சி. க. | 1984 | "ஈழமும் இந்து மதமும்" பொலநறுவைக்–காலம் கி. பி. 1000 – 1250, சிந்தனை. தொகுதி 2, இதழ் 2, பக். 115 – 156. |
| ஞானப்பிரகாசர்,வண. | 1928 | யாழ்ப்பாணவைபவ மாலை விமர்சனம். யாழ்ப்பாணம். |
| நடராசா. கா. செ. | 1980 | (பதிப்பு) வையாபாடல். கொழும்பு. |
| நடராசா, சோ. | 1963 | (மொழி பெயர்ப்பு) பூவைவிடு தூது. ஸ்ரீ இராகுலதேவர் அருளிய செலலிஹினி சந்தேஸம் கொழும்பு. |
| நடராசா, F, X. C. | 1962 | மட்டக்களப்பு மான்மியம். கொழும்பு. |

| | | |
|---|---|---|
| பத்மநாதன், சி, | 1985 | இலங்கையில் இந்து மதம் – ஆரியச் சக்கர வர்த்திகள் காலம் (1250–1620) சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணி விழாச் சபை வெளியீடு தெல்லிப்பழை; பக். 211 – 227. |
| பிரம்மஸ்ரீ சோமாஸ் கந்தக் குருக்கள் | 1965 | ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம். கொழும்பு. |
| மணி | 1953 | 'கஹகுருலு சந்தேஸம்' ஸ்ரீலங்கா; ஏப்ரல் – மே பக். 58 – 62. |
| முத்துத்தம்பிப் பிள்ளை, ஆ. | 1933 | யாழ்ப்பாண சரித்திரம். (யாழ்ப்பாணம்). |
| வைத்திலிங்க தேசிகர், பு. பொ. | 1916 | (பதிப்பு) ஸ்ரீ தக்ஷிணகைலாய புராணம் – கோணேசர் கல்வெட்டு. பருத்தித்துறை. |
| ஜம்புலிங்கம் பிள்ளை, செ. வே. | 1939 | (பதிப்பு) கைலாயமாலை. சென்னை. |


☆※☆

## உசாவியவை (ஆங்கிலம்)


| | | |
|---|---|---|
| Arasaratnam, S. | 1958 | **Dutch power in Ceylon (1658 - 1687) Amsterdam.** |
| Ariyapala, M. S. | 1968 | **Society in Mediaeval Ceylon.** (Colombo) |
| Champakalakshmi, R. | 1981 | **Vaisnava Iconography in the Tamil Country** (New Delhi) |
| Culavamsa, C. V. | 1953 | (edited) W. Geiger (Colombo) |
| Devaraja, L. S. | 1968 | "Some aspects of Dravidian Architecture and sculpture and their impact on Ceylon" In **Proceedings of the Second international conference seminar of Tamil studies.** Madras pp. 427 - 431. |
| ,, | 1977 | **The Kandyan Kingdom 1707 - 1760** (Colombo) |
| E. Z. III Epigraphia Zeyalanica | | 1. The Oruvala sasanam pp. 66-69. 2. The Tamil Inscriptions on the Galle Trilingual slab pp. 331-341. |
| Fernando, C. M. | 1908 | (Trans) **Nikaya Sangrahaya** (Colombo) |
| Fernando, Marcus. | 1969 | **Yapahuwa** (Colombo) |
| Gunasekara, B. | 1887 | Three Sinhalese inscriptions : Text, Transliteration, Translation and notes **J. R. A. S.** (**C. B.**) No. 34 pp. 95-102. |
| Mendis, G. C. | 1954 | **Early History of Ceylon** (Colombo) |
| Mudiyanse, N. | ? | **The Art and Architecture of Gampola period** (1341 - 1415AD) (Colombo) |
| Navaratnam, C. S. | 1960 | **Vanni and the Vanniyas** (Jaffna) |
| ,, | 1964 | **A short History of Hinduism in Ceylon.** (Jaffna). |
| ,, | 1968 | **Koneswaram.** (Colombo). |

Obeyesekera, Gana-nath 1984 **The cult of The Goddess Pattini.** (Chicago).

Paranavitane, S. 1965 **The shrine of Upulvan at Devundra.** (Colombo)

,, 1957 **The God of Adams Peak.** (Switzerland)

,, 1960 **History of Ceylon.** Vol. II Part II (Colombo).

Pathmanathan, S. 1974 The Munnesvaram Tamil inscription **J. R. A. S. (C. B.) Vol. XVIII (N. S.)** pp. 66-69,

,, 1978 **The Kingdom of Jaffna.** (Colombo),

,, 1982 'South India and Srilanka AD 1450-1650.- Political, Commercial and Cultural relations' in **Journal of Tamil studies.** No. 21 pp. 36-57'

,, 1986 Buddhism and Hinduism in SriLanka. Some points of contact between two religious traditions circa. AD 1300-1600 **KALYANI**, University of Kelaniya, 1986. (in print).

Rasanayagam, S. 1926 **Ancient Jaffna** (Madras).

Ratnaike, C. N. R. 1945 **Glimpses of the Social, Religions, Economic and Political conditions of Ceylon from the Sandesas, M. A.** Thesis, unpublished, University of Ceylon.

Silva, K. M. De. 1981 **A History of Sri Lanka.** (Colombo).

Silva, L. A. De. 1974 **Buddhism: Beliefs and practices in Sri Lanka**; (Colombo).

Veluppillai, A. 1971 **Ceylon Tamil Inscriptions.** Part I Peradeniya.

# சிந்தனை நிரந்தர வைப்பு நிதிக்கு
## நிதி வழங்கியோர் பட்டியல்

| | |
|---|---|
| மஹாராஜஸ்ரீ சண்முகநாதக் குருக்கள்<br>மாவை ஆதீனகர்த்தா | 5,000-00 |
| திரு. ரி. குமாரசாமி ஜவுளி நிறுவனம்<br>42, 44, பஸார் வீதி, யாழ்ப்பாணம். | 5,000-00 |
| பொ. கந்தசாமி<br>மஞ்சவனப்பதி, கொக்குவில். | 5,000-00 |
| பேராசிரியர் இ. கனகசுந்தரம், மருந்துவபீடம்<br>யாழ். பல்கலைக்கழகம் | 5,000-00 |
| சீமாட்டி நிறுவனம்<br>மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | 2,500-00 |
| கணேசன் ஸ்ரோர்ஸ் | 1,001-00 |
| விமாசி நிறுவனம்<br>27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | 1,001-00 |
| க. கதிரவேற்பிள்ளை<br>நீதிபதி, கிளிநொச்சி. | 1,000-00 |
| முருகன் உபயம் | 500-00 |
| செ. அஞ்சலாதேவி மூலம் பரந்தன், கிளிநொச்சி,<br>சாவகச்சேரி அன்பர்கள் அளித்த நன்கொடை | 2,581-00 |
| சி. சின்னத்துரை<br>இணுவில் | 5,000-00 |
| எஸ். சிவகுமாரன்<br>ஸ்ரீராம் ரெக்ஸ்ரயில்ஸ் | 5,000-00 |
| நா. வ. கந்தையா அன் சன்ஸ் | 1,001-00 |
| ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்<br>நயினாதீவு | 10,000-00 |
| துர்க்கா தேவஸ்தானம்<br>தெல்லிப்பழை | 5,000-00 |
| பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு | 25,000-00 |
| யாழ். பல்கலைக் கழகம் | 25,000-00 |